Vol.5, Issue 10 | Annual Subscription ₹480

@NewsRotary

/RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

INDIA

www.rotarynewsonline.org

மார்ச் 2023



Rotary

# உயர்ந்த நோக்கம், உயரப் பறத்தல்



ஜோ கார்ட்டர்

RC பெர்ரி, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கென் ஹட், இளம்பிள்ளை வாதத்தை முடித்துவைக்க நிதி திரட்டும் தன்னுடைய பயணத்தின் ஒரு பகுதியாக, நேபாளத்தில் உள்ள சிகரமாகிய காளா பத்தரிலிருந்து எவரெஸ்ட் சிகரத்தைப் பார்வை யிட்டபடி பாராகிளைடிங் முறையில் பறந்துள்ளார். இந்தப் பணியைப் பற்றிய ஆவணப் படம் ஒன்றை எடுத்துள்ள ஜோ கார்ட்டர் என்ற திரைக்கலைஞரிடம் "நான் மருத்துவர் இல்லை, என்னால் இளம்பிள்ளைவாதம் வந்த குழந்தைகளைக் குணப்படுத்த இயலாது" என்றார் ஹட். "ஆனால், வேறொரு வழியில் நான் இந்த நோக்கத்துக்கு உதவுகிறேன்." இப்போதே இளம்பிள்ளைவாதத்தை முடித்து வைப்போம் பரப்புரைக்காக, பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை யின் 2:1 பொருத்தத்தைச் சேர்த்துத்தான் $200,000க்கும் மேல் திரட்டியிருப்பதாக இவர் மதிப்பிடுகிறார்.

©ரோட்டரி

# உள்ளே


**12** ஏழை குழந்தைகளுக்கு ஓர் சிறப்பு வகுப்பு

**16** TRF மாயாஜாலத்தை வெளிப்படுத்துவோம்!

**22** பாண்டுரங்க செட்டி: ஒரு முன்மாதிரி, ஊக்கமளிக்கும் மற்றும் நம்பகமான நண்பர்

**26** பள்ளி மாணவர்களுக்கு மேஜை, பெஞ்ச் வழங்க உதவிய சிங்கப்பூர் ரோட்டரி

**32** பழங்குடியினர் நலனுக்காக சேவையாற்றும் நாக்பூர் ரோட்டேரியன்கள்

**36** வார்காரி குழந்தைகளுக்கு கல்வி

**38** ரோட்டரி பொது மக்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்

**44** கிராமப்புற கர்ப்பிணிகளுக்கு பிரசவத்துக்கு முந்தைய சுகாதாரம்

**48** கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை: பெண்கள் கார் பேரணி

**52** இலங்கையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார் RI தலைவர் ஜோன்ஸ்

**54** ஜல்னாவில் உள்ளூர்ப் பொருளாதாரத்தை மேம்படுத்திய ரோட்டரி கண்காட்சி

**74** இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தி, தசைகளுக்கு வலுவேற்றும் உடற்பயிற்சிகள்

**76** மாசு இல்லாத பயணம்




## மதிப்பு மிக்க பள்ளித் திட்டம்

*ஃபிப்ரவரி இதழின் அட்டைப் படத்தில் RC பாம்பே வொர்லி உருவாக்கிய கிராமப் பள்ளி மைதானத்தில் பள்ளிக் குழந்தைகள், அவர்களுடைய தலைமை ஆசிரியரைக் கண்டு மகிழ்ந்தோம். ரோட்டரி சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருப்பதை இந்தப் படம் பொருத்தமாகக் காண்பிக்கிறது.*

*ஜோஷிமத் பகுதியில் காணப்படுகிற சுற்றுச்சூழல் பேரிடரை ஆசிரியர் குறிப்பு நன்கு விளக்குகிறது, வருங்காலத்தில் இதுபோன்ற பேரிடர்களைத் தடுப்பது எப்படி என்று சுட்டிக்காண்பிக்கிறது. காதலர் நாள் வருவதை முன்னிட்டு RID மகேஷ் கோட்பாகி நம்மை 'உங்களைச் சுற்றியுள்ள உலகை நேசியுங்கள்' என்று கேட்டுக்கொள்கிறார், RID A S வெங்கடேஷ் அனைத்து நிலைகளிலும் கற்றல் மற்றும் பயிற்சியைப்பற்றி மிகப் பொருத்தமாகப் பேசுகிறார்.*

*அறக்கட்டளை அறங்காவலர் தலைவர் இயான் ரைஸ்லெ உலகெங்கும் ரோட்டரி அமைதியை முன்னிறுத்துவது எப்படி என்று விளக்குகிறார். RC பாம்பே வொர்லி, பள்ளித் தலைமை ஆசிரியர் ரவி கஜாலெ ஆகியோருடைய அர்ப்பணிப்பு, கடின உழைப்புக்குப் பாராட்டுகள். இந்திய ரோட்டரியன்களிடம் ஒரு வேண்டுகோள்., ரோட்டரியை ஈர்க்கக் கூடியதாக ஆக்குதல், இந்தியச் சட்டங்களுக்குக் குடிமக்களின் சுறு சுறுப்பான பங்களிப்பு தேவை, DGக்கள் இந்தியாவுக்குப் பெருமையைக் கொண்டுவந்துள்ளார்கள், RID 3231 பல மாவட்டச் சந்திப்பு ஒன்றை நடத்தியது போன்ற மற்ற கட்டுரைகள் அனைத்தும் குறிப்பிடவேண்டியவை. 'மென்மையான, மயக்குகிற, அரவணைக்கிற குரலைக் கொண்ட' ஹேமந்த்பற்றிப் படித்து மகிழ்ந்தோம்.*

*PRID பாண்டுரங்க செட்டி அவர்கள் மறைந்த செய்தியைப் படித்து வருந்தினேன். அவருடைய பாராட்ட வேண்டிய சேவையை ரோட்டரி எப்போதும் நினைவில் வைத்திருக்கும். அவரைச் சார்ந்தோர் அனைவருக்கும் நம் அனுதாபங்கள்.*

*ஃபிலிப் முலப்பொனெ M T, RC*
*திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*




*ஃபிப்ரவரி இதழின் அட்டைப் படத்தில் இடம்பெற்றுள்ள ஜூக்ரெவாடி பள்ளி ஒன்றில் RC பாம்பே வொர்லி புதிதாக உருவாக்கியுள்ள விளையாட்டு மைதானம் பாராட்டவேண்டியது. இந்தக் கிராமம் முழுமையாக மாறியுள்ளது, இங்குள்ள பழங்குடியினப் பள்ளிக்குப் புதிய கட்டடம், நிறைய நூல்களுடன் நூலகம், பல வசதிகளுடன் ஆய்வகம் ஆகியவை கிடைத்துள்ளன. பெண் களுக்கும் ஆண்களுக்கும் தண்ணீர் வசதியுடன் தனித்தனிக் கழிப்பறைத் தொகுதிகளும் வழங்கப்பட்டுள்ளதைப் படித்து நெகிழ்ந்தோம்.*

*கிராமத்தின் வாழ்க்கைத் தரத்தையும் பழங்குடியினப் பள்ளியின் வசதி களையும் மேம்படுத்துவதற்கு இந்தச் சங்கமும் பள்ளித் தலைமை ஆசிரியரும் காண்பித்துள்ள அர்ப்பணிப்புக்குப் பாராட்டுகள்.*

K M K *மூர்த்தி*
RC *செகந்திராபாத்* — D 3150

*ஜோஷிமத் பற்றிய சமீபத்திய ஆசிரியர் குறிப்பு "நிகழப்போகும் சுற்றுச்சூழல் பேரிடர்" நன்கு விளக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற திட்டமிடப்படாத, குழப்பமான உள் கட்டமைப்புத் திட்டங்களில் நடந்த தவறுகளிலிருந்து கற்கவேண்டிய பாடங்களைப்பற்றிப் பேசும் கடைசிப் பத்தி எல்லாரும் படிக்கவேண்டியது.*

*கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பழங்குடியினப் பள்ளி ஒன்றை மாற்றியமைத்துள்ள RC பாம்பே வொர்லிக்குப் பாராட்டுகள்.*

## பாண்டுரங்க செட்டி நினைவுகள்

PRID பாண்டுரங்க செட்டி அவர் களுடைய இறப்புச் செய்தி ரோட்டரி உலகை வருத்தத்தில் ஆழ்த்தியது. குறிப்பாக, RC கரூரில் உள்ள நாங்கள் அவருடன் ஒரு சிறப்பு உறவைப் பகிர்ந்துகொள்வதால், நாங்கள் மேலும் வருந்தினோம். 1997–98ல், எங்கள் சங்கம் சிறியதாக இருந்த போது, அந்த ஆண்டுக்கான நான்கு சங்க அலுவலர்களுடைய நிறுவலுக்குச் சிறப்பு விருந்தினராக நாங்கள் அவரை அழைத்தோம். பெங்களூரிலிருந்து கரூர் தொலைவில் இருந்த போதும், அவர் எங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டார். அவரும் அவருடைய மனைவியும் எங்கள் விழாவில் கலந்து கொண்டதுடன், கரூரில் உள்ள கைவிடப்பட்ட குழந்தைகள் இல்லம் ஒன்றுக்குக் குடிநீர் வசதி, பம்ப் இணைப்பு, மேல் தொட்டி, வழங்கல் குழாய்களைக் கொடை யளித்தார்கள். இன்று வரை, அந்த இல்லத்தின் காப்பாளர் எங்களைச் சந்திக்கும்போதெல்லாம் அந்தத் திட்டத்தை நன்றியுணர்வுடன் நினைவு கூர்கிறார்.

அவருடைய வருகை பற்றிய ஒரு சுவையான குறிப்பும் உள்ளது. பெங்களூரிலிருந்து வரும் ரயில் அதிகாலை 4.30க்குக் கரூர் வரும். நாங்கள் அவரை வரவேற்க ரயில் நிலையம் சென்றிருந்தோம். ஆனால், அங்கு அவரைக் காணவில்லை. ஏனெனில், செட்டி, அவருடைய மனைவி நன்கு தூங்கிவிட்டதால், திண்டுக்கல்லில் தான் இறங்கி னார்கள், அங்கிருந்து ஒரு வாடகை வண்டி பிடித்துக் கரூருக்கு வந்தார்கள். இந்தப் பயணமும் இந்தத் திட்டமும் அவருக்கு நிறைய செலவைக் கொண்டு வந்திருக்கும். அவருடைய பயணச் செலவுகளை ஏற்றுக்கொள்ள நாங்கள் முன்வந்த போதும், பெரிய மனம் கொண்ட

*ரோட்டரியன்களுடைய சிறந்த பணி பாராட்டவேண்டியது. குழந்தைகள், தலைமை ஆசிரியருடைய சிரிக்கும் முகங்கள் உள் மகிழ்ச்சியைக் காண்பிக்கின்றன.*

*ராஜ் குமார் கபூர்,*
RC *ரூப்நகர்* — D3080

RI *தலைவர் ஜோன்ஸ் சிறுமியரும் பெண்களும் அவர்களுடைய முழுச் சாத்தியங்களை உண் மையாக்குவதற்கு ஆற்றல் அளிப்பது உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி க்குப் புதிய வழிகளை அமைக்கும், மேம்பட்ட சமூகங்களுக்கான நீடித்த மாற்றத்தைக் கொண்டுவரும் என்று சரியாகச் சொல்கிறார்.*

*பழங்குடியினக் கிராமம் ஒன்றை மேம்படுத்துவதற்கு* RC *பாம்பே வொர்லி உறுப்பினர்கள் செய்துவரும் தொடர்ச்சியான முயற்சிகள் பாராட்டவேண்டியவை. அவர்களுடைய கடின உழைப்பால் இந்தக் கிராமத்துக்கு எல்லா வச திகளுடன் மேம்பட்ட பள்ளி ஒன்று கிடைத்துள்ளது. அத்துடன், பிரச்சனைகளுக்கு நடுவில் இந்தப் பள்ளியைப் புதுப்பிக்கும் உறுதியுடன் செயல்படும் பள்ளித் தலைமை ஆசிரியர் ரவி கஜாலெ அவர்களுக்கும் பாராட்டுகள்.*

S *முனியாண்டி,* RC *திண்டுக்கல் ஃபோர்ட்* — D 3000

அவர் அதை ஏற்கவில்லை, தன் சொந்தச் செலவில் தான் விழாவில் கலந்துகொண்டார். அன்றைக்கு அவரால் நிறுவப்பட்ட சங்கத் தலைவரான நான் இந்த நிகழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதில் பெருமையும் வருத்தமும் அடைகிறேன்.

K ரவீந்திரகுமார்
RC கரூர் — D 3000

கற்றல் மற்றும் பயிற்சி என்ற தலைப்பில் RI இயக்குநர் A S வெங்கடேஷ் எழுதிய செய்தி அனைத்து ரோட்டரியன்களுக்கும் ஊக்கம் அளிப்பது. பயிற்சி முறையை மேம்படுத்துதல், பின்னூட்டம் பெறுதல், தொடர்ந்த முன்னேற்றம் ஆகியவை நம் முன்னேற்றத்துக்குத் தேவையான காரணிகளாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்னால், ISRO வாகனச் செலுத்தல் திட்டம் ஒன்றைப் பற்றி இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களிடம் நான் உரை யாடியுள்ளேன். அவர் எங்களிடம் “அறிவு இல்லாத கற்றலுக்குப் பெயர் அறியாமை” என்று அடிக்கடி சொல்வார். அவர் மிகவும் பணிவான, எளிய மனிதர். நம்முடைய மாவட்டத் தலைவர்களில் சிலர் ரோட்டரிக் களத்தைப் பயன்படுத்தித் தங்கள் தோற்றத்தை மேம்படுத்திக் கொண்டு தங்கள் தொழிலை வளர்ப்பதைப் பார்த்து நாம் மிகவும் வருத்தமாக உணர்கிறோம்.

N R U K கர்தா, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211

பிப்ரவரி இதழில் உங்களைச் சுற்றி யுள்ள உலகை நேசியுங்கள் என்ற தலைப்பில் RID மகேஷ் கோட்பாகி எழுதிய காதலர் நாள் செய்தி எனக்கு மிகவும் பிடித் திருந்தது.

S K சப்லோக், RC நஹான் சிர்மௌர் ஹில்ஸ் — 3080

## மகிழ்ச்சி தரும் கட்டுரை

ரோட்டரி செய்திகளைப் பற்றித் தெரிந்து கொண்ட பின், கவாஸ்கருடைய மூன்றாவது இன்னிங்க்ஸ் என்ற கட்டுரையைப் (ஜனவரி இதழ்) படித்து மகிழ்ந்தேன்.

யோகீந்தர் திவான்
RC பர்வானூ — D 3080

## ரோட்டராக்டர்களுடைய சிறப்பான பணி

விசாக விஸ்தா கல்வி நிறுவனத்தில் ரத்த தான முகாம் நடத்திய ரோட்டராக் டர்களுடைய செயல் பாட்டைப்பற்றிப் படித்து ரோட்டரியன்கள் ஊக்கம் பெறலாம். இந்தியாவில் இளைஞர்கள் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது, நாம் பல இளைஞர்களை ரோட்டராக் டர்களாக ஆக்கவேண்டும். அவர்கள் வருங்காலத்தில் ரோட்டரியின் முதுகெலும்பு ஆவார்கள்.

ஏனெனில், ரோட்டராக்ட் சங்கங்களில் இருக்கும் போதே அவர்களுக்கு உயர்ந்த திட்டங்களைச் செய்கிற பேரார்வம் வந்துவிடும்.

T D பாட்யா, RC மயூர் விகார் — D 3012

## மதிப்பு நிறைந்த ரோட்டரி நியூஸ் ப்ளஸ்

ரோட்டரி நியூஸ் ப்ளஸ் என்பது ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் மிக நல்ல முன்னெடுப்பு. இந்த மின் இதழின் வழியாக நம் திட்டங்கள் பொது மக்களைச் சென்று சேர்கின்றன. மனமார்ந்த பாராட்டுகள்.

கஜானன் மனெ
RC கராட் — D 3132

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் **www.rotarynewsonline.org** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

**அட்டைபடம்:** சென்னை சென்ட்ரல் (RID 3232) ரோட்டராக்ட் சங்கத்தினர், தங்கள் ‘Bridge’ திட்டத்தின் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு பல வகையான வகுப்புகளை அளிக்கின்றனர். **புகைப்படம்:** கிரண் ஜெஹரா

# தேநீர் வல்லுனர் கற்றுத்தரும் பாடங்கள்



*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் நவம்பரில் ஜப்பானுக்குச் சென்றபோது, உராசென்கெ தேநீர்ப் பண்பாட்டின் மிகச் சிறந்த வல்லுனர் சென் அவருக்கு ஒரு பண்பாட்டு ஜப்பானியத் தேநீர் விழாவை நடத்துகிறார். சாடோ என்ற இந்தத் தேநீர் விழா பல நூற்றாண்டுகளாக நடைபெறுகிறது, கலை, மதம், தத்துவம், சமூக வாழ்க்கைப் பண்புகளைக் கொண்டுள்ளது.*

நவம்பரில் ஜப்பான் சென்றபோது, ஜென்ஷித்சு சென் என்ற தேநீர் வல்லுனரைச் சந்தித்தேன். மறக்கமுடியாத சந்திப்பு அது.

உராசென்கெ தேநீர்ப் பண்பாட்டின் மிகச் சிறந்த வல்லுனர் சென், சாதனை படைத்த ரோட்டரியனும்கூட. அவருடைய சாதனைகளில் சில: ஜப்பானில் உள்ள கியோடோ-சவுத் ரோட்டரி சங்கத்தைப் பதிவு செய்ய உதவியது, கியோட்டோ ரோட்டரி சங்கத்தின் தலைவராக, மாவட்டம் 2650ன் ஆளுநராகச் சேவையாற்றியது, ரோட்டரி இன்டர்நேஷனல், ரோட்டரி அறக்கட்டளையில் தலைமைப் பொறுப்புகளை ஏற்றது.

அவர் என்னுடன் நேரம் செலவிட்டது எனக்குப் பெருமை. அவர் மிகச் சிறந்த மனிதர், மகிழ்ச்சியான ஆன்மா. அவருடைய தலைமை, ரோட்டரி ஊடாடல் இன்னும் வலுவாக உள்ளன.

அதே வாரத்தில், 100 வயதான இரண்டாம் உலகப் போர்க் கப்பற்படை நாயகர், உடா-வில் உள்ள பாக் சிட்டியைச் சேர்ந்தவர், இரண்டு முறை ரோட்டரி மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்ற ஒருவரைப்பற்றிய காணொளி ஒன்றைப் பதிவுசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

சென்னும் பாக் சிட்டியைச் சேர்ந்த ரோட்டரியனும் போரின் வெவ்வேறு பகுதிகளில் சேவை புரிந்தாலும், ஒரேமாதிரியான கதைகளைத்தான் பகிர்ந்துகொள்கிறார்கள். இதில் எனக்குப் பெருமையை அளித்த விஷயம், இவர்கள் இருவரும் அமைதியை உருவாக்கும் வாழ்க்கையை வாழ்வதற்கு ரோட்டரியைத் தேர்ந்தெடுத்தார்கள். இவர்களைக் கண்டபோது நான் உணர்ந்தது, இந்த உலகில் நாம் எல்லாம் மிகச் சிறந்த பணியை ஆற்றத்தான் முயல்கிறோம், நம்மிடையில் வேறுபாடுகளைவிட ஒற்றுமைகள் மிகுந்துள்ளன.

இந்தக் கதைகளைப் பார்க்கிற, இப்படிப்பட்ட சிறந்த மனிதர்களைச் சந்திக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பது என்னுடைய அதிர்ஷ்டம்தான்.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



*சென் கியோடோ-வில் தான் வாழும் உராசென்கெ தேநீர் அறை வளாகத்துக்கு வெளியில் நிற்கிறார். ரோட்டரி இதழ் ஆகஸ்ட் 2022ல் சென் அவர்களுடைய மிகச் சிறந்த கதையை வெளியிட்டது. நீங்கள் இந்தக் கதையின் ஒலிப்பதிவை இங்கு கேட்கலாம்: rotary.org/peace-through-bowl-tea.*

புகைப்படங்கள்: (நிகழ்ச்சி) கியோகோ நொசாகி; (தனிப்படம், உட்பகுதியில்) மின்மின் வு



# வெறுப்பை அன்பு வெல்லும்போது

இந்தியா, அதன் சமூக மற்றும் கலாச்சார கட்டமைப்பு, நெறிமுறைகள், மதிப்புகள் சுருக்கமாகச் சொன்னால் அதன் இதயத்துடிப்பு, ஒரு திரைப்படத்தைவிட மிகப்பெரியது. ஆனால், ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் பாலிவுட்டில் வெற்றிப்படமாக அமைந்தது ஷாரூக்கான், தீபிகா படுகோனே நடித்த "பதான்". இதை எழுதும்போது அந்த படத்தின் வசூல் ரூ.1,000 கோடியைத் தாண்டி விட்டது. இந்த சமயத்தில் என் மனதில் இந்தியாவும், இந்தியர்களும் என்ன நினைக்கிறார்கள், எப்படி உணர்கிறார்கள் மற்றும் எப்படிச் செயல்படுகிறார்கள் என எண்ணத் தோன்றியது. மேலும் இந்த ஒப்புமை ரோட்டரியின் சமீபத்திய மற்றும் மிக அற்புதமான மந்திரமான DEI-பன்முகத்தன்மை, சமநிலை, உள்ளடக்கத்துடன் நன்றாகப் பொருந்துகிறது.

இந்த திரைப்படம் வெளிவருவதற்கு முன்னர் சலசலப்பு ஏற்பட்டதும் பூகம்பம் வெடித்ததும் சமூக ஊடகங்களில் இந்த படத்தை புறக்கணிக்குமாறு வெறுப்புக்குரல்கள் எழுந்ததும் நான் அனைவரும் அறிந்ததே. இந்த வெறுப்புப் படையினர் அல்லது புறக்கணிப்பு கோஷ்டியினர் தங்கள் குரலை எழுப்புவதற்கு முதல் காரணம் கதாநாயகன் ஒரு முஸ்லிம் என்பது தான். அவர் ஒரு தேசவிரோதி என்று வாதிடுவதற்காக கடந்த காலத்தில் அவர் வெளியிட்ட அறிக்கைகள் அளவுக்கு அதிகமாக திரிக்கப்பட்டு தவறாக மேற்கோள் காட்டப்பட்டன. அடுத்து படத்தின் கதாநாயகி ஆன தீபிகா படுகோனே, கருத்து சுதந்திரம் தொடர்பான அடிப்படை விஷயங்களில் சுதந்திரமாகவும் தைரியமாகவும் தனது நிலைப்பாட்டை எடுத்துக் கூறியதற்காக அவர் ஒரு படத்தின் பாடல் காட்சியில் பிகினி உடையில் தோன்றி உடலை வெளிப்படுத்திக்காட்டுவதாக கூறி தாக்குதல் நடத்தினார்கள். ஹிந்தி பத்திரிகையாளர் ஒருவர் கரப்பான் பூச்சி என்று ஷாரூக்கானை விமர்சித்தார். தீபிகா படுகோனேவை மோசமான வார்த்தைகளால் அவமதித்தனர். பெண்கள் மீது அவதூறு பேசுவதையும், அவர்களை மோசமாக நடத்துவதையும் பார்த்தால் எரிச்சல் வருமா வராதா? பெண்களை இழிவுபடுத்து வதுதான் வேலையா? பெண்ணாக பிறந்துவிட்ட ஒருவரை பாலினத்தை காட்டி அவரை இழிவுபடுத்தாமல் பெண்களின் மேம்பாட்டுக்காக, பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக செயல்பட்டு வருவதுதான் ரோட்டரி.

ஆனால், இந்த வெறுப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் மிகவும் ஆச்சரியமளிக்கும், முற்றிலும் மகிழ்ச்சியான ஒரு விஷயம் நடந்தது. ஏறக்குறைய இந்தியா முழுவதும் ஒவ்வொரு பிராந்தியத்திலும், ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இந்த அருவருப்பான வெறுப்பு பிரசாரத்திற்கு ஒரே ஒரு செயலால் மக்கள் பதிலளித்தனர். மதங்கள், சாதிகள், வகுப்புகள், வெவ்வேறு மொழிபேசுபவர்கள் என அனைத்து தரப்பினரும் திரையரங்குகளுக்குச் சென்று அந்த படத்தை கண்டு ரசித்தனர். ஒரு திரைப்படம் எப்படி ஓடுகிறது. அதன் வசூல் என்ன என்பது பற்றி கவலைப்படாதவர்கள்கூட தினமும் பதான் படத்தின் இன்றைய வசூல் என்ன என்று பார்ப்பதில் ஆர்வம் காட்டியதை நான் அறிவேன். ஒருவர் இப்படி டுவீட் செய்திருந்தார்: ஒவ்வொரு நாளும் பணம் நேரடியாக எனது வங்கிக் கணக்குக்கு வருவது போல பதான் படத்தின் பாக்ஸ் ஆபிஸ் வசூல் என்ன என்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆனால், இது பணம் பற்றியது அல்ல. மக்கள் தங்கள் அன்பைப் பொழிவது பற்றியது: இது மிக நுணுக்கமாகவும், அழகாகவும், மெல்லிய இழைகளால் வண்ண வண்ண கலவைகளால் நெய்யப்பட்ட துணியைப் போன்றது. அதை வெறுப்பை உமிழ்பவர்களால் அவ்வளவு எளிதில் அழிக்க முடியாது.

மேலும் இரண்டு விஷயங்கள் உதவி செய்தன. இவ்வளவு பெரிய புயல் எழுந்தபோதிலும் ஷாருக்கான் வாயை திறக்காமல் இருந்தார். கொல்கத்தா திரைப்பட விழாவில் ஒரே ஒரு செய்தியை மட்டும் அவர் சொன்னார்; நாம் நல்லதையே நினைப்போம் என்றார். இந்தியாவின் பன்முகத்தன்மையை கொண்டாடுமாறு திரைப்பட தயாரிப்பாளர்களையும், ரசிகர்களையும் அவர் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். இதைவிட முக்கியமானது படம் வெளியாவதற்கு சில நாட்கள் முன்பு பா.ஜ.க.வினர் பங்கேற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் பதான் படம் பற்றி கருத்துக்கூறுவதை தவிர்க்குமாறும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணியில் கவனம் செலுத்துமாறும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். அதாவது நாட்டின் வளர்ச்சியிலும் தேசத்தை கட்டமைப்பதிலும் கவனம் செலுத்துமாறு கூறினார். அவர் அப்படிச் சொன்னது மனதை தொட்டது.

ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேந்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், “ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14” என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.
**ஆசிரியர்:** ரஷீதா பகத்.

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

# RI இயக்குநர்



## ரோட்டரியின் விரைவான பேரிடர் நிவாரணம்

கடந்த ஆண்டு மூன்று வெவ்வேறு பேரழிவுகளில் இதுதான் நடந்தது – உக்ரைன், பாகிஸ்தான் மற்றும் இப்போது துருக்கி மற்றும் சிரியாவில்.

துருக்கியும் சிரியாவும் இரண்டு பேரழிவு தரும் பூகம்பங்களால் தாக்கப்பட்டன, அது ஆயிரக் கணக்கான வீடுகளை அழித்தது, உயிர் பிழைத்தவர்களை கடுமையான மற்றும் இடைவிடாத குளிரில் தவிக்க செய்துள்ளது. சுத்தமான தண்ணீர் மற்றும் கழிவறைகள் கிடைக்காத துடன், கூடாரங்கள், தங்குவதற்கான பொருட்கள், அடுப்புகள், வெப்பப் போர்வைகள் மற்றும் துணிகள் ஆகியவற்றிற்கு கடும் தட்டுபாடு இருந்தது, மற்றும் கடுமையான குளிரை எதிர்கொள்ள எரிபொருள் மற்றும் உணவை வாங்குவதற்கு நிச்சயமாக பணமும் தேவைப்பட்டது.

இந்த பேரழிவிற்கு ரோட்டரி உலகம் உடனடியாக பதிலளித்தது. RI தங்கள் பேரிடர் மீட்பு முயற்சி களை செயல்படுத்தி, பாதிக்கப் பட்ட மாவட்டங்களுடன் தொடர்பு கொண்டு பேரிடர் மீட்பு மானியங் களுக்கு விண்ணப்பிக்க அந்த பகுதிகளில் உள்ள ஆளுநர்களை ஊக்குவித்தது. துருக்கி/சிரியா பேரிடர் நிவாரண நிதிக்கு இப்போதிலிருந்து மார்ச் 31 வரை வழங்கப்படும் அனைத்து நன்கொடைகளும் பூகம்ப நிவாரண திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என TRF முடிவு செய்தது. இது பாதிக்கப்பட்ட ரோட்டரி மாவட்டங்களுக்கு பேரிடர் நிவாரண மானியங்கள் மூலம் \$125,000க்கு மேல் கிடைக்க செய்துள்ளது. ரோட்டரியின் திட்ட பங்குதாரர்களான ஷேல்டர்பாக்ஸ் மற்றும் ஹாபிடாட் ஃபோர் யூமானிட்டி இன்டர்நேஷனல் இப்பகுதியில் உள்ள மாவட்ட தலைவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. பல ரோட்டேரியன்கள் தாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்று கேட்கிறார்கள்.

துருக்கி/சிரியா பேரிடர் நிவாரண நிதி, உக்ரைன் மீட்பு நிதி மற்றும் பாகிஸ்தான் வெள்ள நிவாரண நிதி ஆகியவற்றுக்கு ஆன்லைனில் *rotary.org* இல் நன்கொடை அளிப்பதன் மூலம் நாம் மிகப்பெரிய தாக்க த்தை உருவாக்க முடியும். பேரிடர் நிவாரண நிதியானது ரொக்க பங்களிப்புகளையும் மாவட்டத்தால் நியமிக்கப்பட்ட நிதிகளையும் ஏற்கும்.

அமைதியை மேம்படுத்துவது நமது உலகளாவிய பணியின் அடித் தளமாகும். கல்வியை ஆதரிப்பது, நோயை எதிர்த்துப் போராடுவது என நாம் செய்யும் அனைத்தும் அமைதி நிலவும் சூழலை உருவாக்குவதற்கு வழிவகுக்கிறது.

துக்கம் என்பது இனி பகிர்ந்து கொள்ள முடியாத அன்பு. நீங்கள் கொடுக்க விரும்பிய அன்பு, ஆனால் அதைப் பெற அந்த நபர் இப்போது உங்கள் அருகில் இல்லை. இழப்பின் உணர்வு அப்படியே இருக்கும். அது காலப்போக்கில் சுருங்குவதில்லை. எனவே இன்றிலிருந்து மக்களை நேசிக்கவும் கவனித்துக்கொள்ளவும் தொடங்குவோம்.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குநர், 2021–23

# களின் செய்திகள்

## மாற்றம் உங்களுடன் தொடங்குகிறது



சமீபத்தில் நான் ஒரு பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டேன், அங்கு ஒரு மூத்த ரோட்டரி தலைவர் பார்வையாளர்களிடம் எளிமையான, ஆனால் சக்திவாய்ந்த ஒரு கேள்வியைக் கேட்டார். அவர்கள் தற்போது ரோட்டரியில் சேருவதாக இருந்தால் இன்று அவர்கள் இருக்கும் அதே சங்கத்தில் சேருவார்களா என்று கேட்டார்.

இந்தக் கேள்வி பங்கேற்பாளர் களில் பலரைப் போலவே என்னையும் சிந்திக்க வைத்தது. நாம் நம் சங்கத்தில் செய்யப்பட வேண்டும் என்று விரும்பும் ஒன்றை வேறொரு சங்கத்தில் எத்தனை முறை பார்க்கிறோம்- பெல்லோஷிப்பின் தன்மை, ஆர்வத்தைத் தூண்டும் ஒரு திட்டம், ஒரு வேடிக்கையான செயல்பாடு, உறுப்பினர் பரிந்துரை அமைப்பு. இருப்பினும் நம்மில் பலர் புலம்புவதைத் தாண்டி எதுவும் செய்வதில்லை. “நீங்கள் விரும்பும் மாற்றமாக இருங்கள்” என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். இது ரோட்டேரியன்களான நமக்கும் பொருந்தும்.

எப்பொழுதும் சில உறுப்பினர்கள் இதே போன்ற கவலைகளைக் கொண்டிருக்கலாம், ஆனால் புலப்படும் அளவிற்கு எந்த மாற்றமும் இல்லாத நிலையில் அவர்கள் அலட்சியமாக இருக்க தேர்வு செய்யலாம், இது ஏமாற்றத்திற்கும் இறுதியாக ரோட்டரியை விட்டு வெளியேறுவதற்கும் வழிவகுக்கிறது. நம் சங்கம் மற்றும் நம் நிறுவனத்தின் மேல் அக்கறை இருந்தால், குறைந்த பட்சம் நாம் செய்யக்கூடியது, நம் சொந்த சங்கத்தில் மாற்றத்தின் சாம்பியனாக இருப்பது. நம் சங்கங்களில் நாம் பார்க்க விரும்பும், ஆனால் தற்போது இல்லாத விஷயங்களின் பட்டியலை எடுப்பதில் தொடங்குவோம். நாம் ஒவ்வொருவரும் இந்தப் பயிற்சியைச் செய்தால், நமது உறுப்பினர்களின் கூட்டுப் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி, நமது சங்கங்களுக்கு மிகவும் பொருத்தமான மாற்றங்களின் தொகுப்பை நாம் கண்டறிய முடியும்.

இது நம் பங்குதாரர்களிடமிருந்து அதிக நம்பிக்கையை பெறும் கூடுதல் நன்மையைக் கொண்டுள்ளது, இதனால் செயல்படுத்துதல் எளிதாக இருக்கும். இந்த தாக்கத்தை ஏற்படுத்த உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த ரோட்டரி ஆண்டு முடிவடையும் நேரத்தில், சாத்தியமான அனைத்து சிறந்தவற்றையும் ஒருங்கிணைத்து, நமது பல்வேறு நோக்கங்களை திருப்திப்படுத்தும் சங்கத்தில் அனைவரும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பார்வையாளர்கள் சத்தம் போடுவார்கள், வீரர்கள் செயல்படுத்துவார்கள்! என்று அடிக்கடி சொல்வதுண்டு. நாம் பார்வையாளர்களாக இருப்பதை நிறுத்திவிட்டு, நம் சங்கங்களின் செயல்வீரர்களாக மாறுவோம்.



A S வெங்கடேஷ்
RI இயக்குநர், 2021–23


**அறங்காவலர் குழுவினர்**

A S வெங்கடேஷ் RID 3232
**RI இயக்குநர் மற்றும் RNT தலைவர்**
Dr மகேஷ் கோட்பாகி RID 3131
**RI இயக்குநர்**
Dr பரத் பாண்ட்யா RID 3141
**TRF அறங்காவலர்**
ராஜேந்திர K சாபூ RID 3080
கல்யாண் பானர்ஜி RID 3060
சேகர் மேத்தா RID 3291
அசோக் மஹாஜன் RID 3141
PT பிரபாகர் RID 3232
Dr மனோஜ் D தேசாய் RID 3060
C பாஸ்கர் RID 3000
கமல் சங்வி RID 3250
குலாம் A வஹன்வதி RID 3141

**RI இயக்குநர் தேர்வு**
அனிருதா ராய்சௌத்ரி RID 3291
TN சுப்ரமணியன் RID 3141

**செயற்குழு உறுப்பினர்கள் (2022–23)**

Dr துஷ்யந்த் சௌத்ரி RID 3070
**தலைவர், ஆளுநர் குழு**
வெங்கடேஷ் H தேஷ்பாண்டே RID 3170
**செயலாளர், ஆளுநர் குழு**
Dr N நந்தகுமார் RID 3232
**பொருளாளர், ஆளுநர் குழு**
தினேஷ்குமார் சர்மா RID 3100
**ஆலோசகர், ஆளுநர் குழு**



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

**இதழ்**

# பலருக்குக் கிடைக்காத, மதிப்பு மிக்க வளம்



ஆஸ்திரேலியாவில் வாழ்கிறவர்கள் நீரைப்பற்றி நிறையச் சிந்திக்கிறோம். நாம் ‘‘அவுட்பேக்’’ எனப்படும் இந்த நாட்டின் பரந்த உட்பகுதிக்குப் பயணம் செய்யும்போது, இப்படிப்பட்ட வறண்ட காலநிலையில் இத்தனை ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருவது எப்படி என்று வியப்பது உறுதி. இங்கு, ஒவ்வொரு துளி நீரும் மதிப்பு மிக்கதாகத் தோன்றுகிறது.

காலநிலை மாற்றம் எல்லா இடங்களிலும் நீர் வழங்கலைத் தொடர்ந்து பாதிப்பதால், ஒவ்வொரு நாளும் நீர்த் துளியின் மதிப்பு இன்னும் கூடுவதாகத் தோன்றுகிறது. ஜூலியட்டும் நானும் மெல்பர்னுக்கு அருகில் உள்ள, மிதமான வெப்பநிலை கொண்ட கடற்கரைப் பகுதி ஒன்றில் வசிக்கிறோம். சில காலத்துக்குமுன் இங்கு நீர் வளம் மிகவும் குறைந்துவிட்டது, கடுமையான பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் போடப்பட்டன. இப்போது நாங்கள் எங்கள் கூரையில் விழும் மழை நீரைத் தொட்டியில் திரட்டிப் பயன்படுத்துகிறோம். உலகின் பல இடங்களில் வாழும் மக்களுக்கு இந்த வசதி இல்லை.

நாம் எங்கு வசித்தாலும் வாழ்க்கைக்கு நீர் தேவை. ஆனால், நம்மில் பலர் அதை மதிப்பதில்லை. நாம் சந்திக்கும் நீர், தூய்மைப் பிரச்சனைகள் மிகப் பெரியவை, அவற்றை நாம் தனியாகத் தீர்க்க இயலாது. ஆனால், உலகம் முழுவதும் உள்ள பன்னாட்டு நல்கைக் கூட்டாளர் மாவட்டங்களுடன் அல்லது USAID போன்ற பெரிய அமைப்புகளுடன் நாம் பணியாற்றும்போது, நாம் மாற்றத்தைக் கொண்டுவருகிறோம்.

பாதுகாப்பான குடிநீர், தூய்மை மற்றும் சுகாதாரத்தை வழங்கக் குழு அமைக்கும் போது, நம்முடைய மிகச் சிறந்த கூட்டாளர்களில் ஒருவர் ரோட்டரி குடும்பத்துக்குள் தான் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்: ரோட்டராக்ட்.

இந்த ரோட்டரி ஆண்டில் தொடங்கி, ரோட்டராக்ட் சங்கங்களும் பன்னாட்டு நல்கைகளுக்கு விண்ணப்பம் செய்யலாம். ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் ஏற்கெனவே உள்ள நல்கைகளில் இணைந்து பணியாற்ற வேண்டும், ரோட்டராக்ட் சங்கங்களால் ஆதரிக்கப்படும் நல்கைகளை ரோட்டரி சங்கங்கள் ஆதரிக்கவேண்டும் என்று நான் அவர்களை ஊக்கப்படுத்துகிறேன். ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் இணைந்து பணியாற்றும்போது, அறக்கட்டளையின் ஆற்றலை அவர்கள் புதிய உயரங் களுக்குக் கொண்டு செல்வார்கள். நாம் அனைவரும் சந்திக்கும் நீர் மற்றும் தூய்மைச் சவாலில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு ரோட்டரி அறக்கட்டளையால் கண்டிப்பாக இயலும், அதற்குக் காரணமான உங்கள் தாராளமான ஆதரவுக்கு நன்றி.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# நமது அறக்கட்டளையை வலுப்படுத்துவோம்!



இந்தியாவுக்கு வந்த சீன யாத்ரீகர் யுவான்ஜாங், தமது 7-வது நூற்றாண்டு நினைவுக்குறிப்பில் பல்வேறு புண்ணிய ஸ்தலங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இந்த புண்ணிய ஸ்தலங்கள் ஏழைகளுக்கும் முடியாதவர்களுக்கும் உணவு, துணி, மருந்துகளை வழங்கி வந்துள்ளது. மேலும் அனாதைகளையும் வழிப்போக்கர்களையும் வரவேற்று உபசரித்துள்ளதாக யுவான்ஜாங் குறிப்பிடுகிறார்.

1017 முதல் 16 ஆண்டுகள் இந்தியாவுக்கு வருகை தந்து வாழ்ந்து வந்த பாரசீக வரலாற்று அறிஞர் அல்-பிருனி, தாம் தங்கியிருந்த காலத்தில் இந்தியர்களிடம் தொண்டு செய்யும், தானம் செய்யும் நடைமுறை இருந்ததை குறிப்பிடுகிறார்.

பிறருக்கு கொடுப்பது என்பது இந்தியர்களின் ரத்தத்தில் ஊறிப்போனது. கொடுப்பதில் சிறந்தது என்னவென்றால், யார் நன்கொடையாளர், யார் பெற்றுக்கொள்கிறார் என்பது தெரியாமல் கொடுப்பதுதான். அறக்கட்டளைக்கு கொடுப்பது என்பதும் அதைப் போன்றதுதான்.

2022–23 ரோட்டரி ஆண்டின் கடைசி காலாண்டில் நாம் நுழைகிறோம். எனவே நாம் இப்போது TRF-க்கு கொடுப்பதிலும், முதலீடு செய்வதிலும் ரோட்டேரியன்களை ஊக்கப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். இது வரும் காலங்களில் ஆண்டுக்கணக்கில் பலன் தரக்கூடிய முதலீடுகளாகும். ரோட்டரி அறக்கட்டளையின் வெற்றிக்கதைகளை பகிர்ந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு ரோட்டேரியனையும் TRF-க்கு பங்களிப்புச் செய்ய ஊக்கப்படுத்துங்கள்.

முன்பு அளித்த பங்கைவிட சிறிது அதிகமாக பங்களிப்புச் செய்ய ஊக்கப்படுத்துங்கள். End Polio Now Fund-ற்கு சங்கங்களும் ரோட்டேரியன்களும் பங்களிப்புச் செய்ய ஊக்கப்படுத்துங்கள். போலியோ இல்லாத உலகம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றவும், சமூகத்திற்கும் உலகிற்கும் தொடர்ந்து நன்மை செய்யவும் நாம் அனைவரும் தயாராவோம்!

ரோட்டரி அறக்கட்டளையின் எதிர்காலத்தை வழிநடத்துங்கள்.

**பரத் பாண்ட்யா**
அறங்காவலர், TRF 2022–26

# Rotarians!

Visiting Chennai for business?

Looking for a compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 36,904 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,185 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 19,227 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,750 |
| ரோட்டரியினர் | : | 1,187,842 |
| ரோட்டராக்டர்கள் | : | 174,891 |
| இன்டராக்டர்கள் | : | 442,221 |

As on February 16, 2023

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on February 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 136 | 6,394 | 7.32 | 71 | 462 | 55 | 243 |
| 2982 | 82 | 3,730 | 6.94 | 30 | 760 | 115 | 76 |
| 3000 | 131 | 5,428 | 10.32 | 102 | 1,521 | 324 | 215 |
| 3011 | 123 | 4,697 | 28.42 | 82 | 2,637 | 141 | 37 |
| 3012 | 151 | 3,752 | 23.08 | 73 | 1,393 | 94 | 61 |
| 3020 | 84 | 4,896 | 7.21 | 40 | 1,159 | 168 | 350 |
| 3030 | 100 | 5,414 | 14.94 | 126 | 2,169 | 369 | 382 |
| 3040 | 113 | 2,572 | 15.05 | 59 | 794 | 94 | 190 |
| 3053 | 65 | 2,729 | 16.75 | 35 | 566 | 55 | 128 |
| 3054 | 168 | 6,898 | 19.67 | 107 | 1,537 | 209 | 575 |
| 3060 | 102 | 4,931 | 14.87 | 66 | 2,400 | 81 | 152 |
| 3070 | 127 | 3,395 | 16.52 | 47 | 559 | 64 | 59 |
| 3080 | 107 | 4,322 | 12.86 | 120 | 2,232 | 213 | 118 |
| 3090 | 104 | 2,455 | 5.66 | 46 | 634 | 120 | 164 |
| 3100 | 103 | 2,173 | 11.83 | 14 | 109 | 39 | 151 |
| 3110 | 142 | 3,895 | 12.37 | 16 | 126 | 33 | 106 |
| 3120 | 90 | 3,674 | 15.68 | 35 | 404 | 36 | 55 |
| 3131 | 142 | 5,699 | 24.57 | 135 | 2,975 | 262 | 144 |
| 3132 | 91 | 3,625 | 12.72 | 36 | 499 | 126 | 168 |
| 3141 | 109 | 6,128 | 26.88 | 149 | 6,591 | 216 | 151 |
| 3142 | 103 | 3,873 | 21.25 | 90 | 3,016 | 148 | 89 |
| 3150 | 111 | 4,362 | 12.98 | 150 | 1,968 | 159 | 124 |
| 3160 | 78 | 2,617 | 9.09 | 32 | 233 | 20 | 82 |
| 3170 | 145 | 6,609 | 15.72 | 103 | 1,787 | 270 | 177 |
| 3181 | 87 | 3,629 | 10.00 | 36 | 422 | 223 | 117 |
| 3182 | 88 | 3,662 | 10.16 | 44 | 180 | 132 | 106 |
| 3190 | 168 | 6,932 | 20.04 | 217 | 5,131 | 288 | 74 |
| 3201 | 167 | 6,518 | 9.79 | 130 | 2,027 | 114 | 91 |
| 3203 | 93 | 4,937 | 7.80 | 75 | 942 | 243 | 39 |
| 3204 | 73 | 2,495 | 7.25 | 23 | 201 | 33 | 13 |
| 3211 | 156 | 5,061 | 8.52 | 8 | 108 | 31 | 133 |
| 3212 | 127 | 4,750 | 11.45 | 85 | 3,511 | 303 | 153 |
| 3231 | 95 | 3,430 | 8.37 | 37 | 411 | 99 | 417 |
| 3232 | 171 | 6,851 | 19.85 | 133 | 7,558 | 247 | 101 |
| 3240 | 109 | 3,652 | 16.59 | 70 | 1,417 | 414 | 226 |
| 3250 | 103 | 3,903 | 21.14 | 68 | 1,093 | 85 | 188 |
| 3261 | 90 | 3,258 | 19.74 | 17 | 50 | 26 | 44 |
| 3262 | 125 | 3,838 | 14.64 | 75 | 788 | 659 | 277 |
| 3291 | 152 | 3,974 | 24.89 | 138 | 2,042 | 111 | 697 |
| **India Total** | **4,511** | **171,158** | | **2,920** | **62,412** | **6,419** | **6,673** |
| 3220 | 71 | 2,122 | 16.16 | 98 | 4,958 | 147 | 77 |
| 3271 | 160 | 3,211 | 18.44 | 161 | 2,485 | 255 | 28 |
| 3272 | 162 | 2,433 | 14.59 | 70 | 933 | 22 | 47 |
| 3281 | 311 | 7,302 | 18.34 | 281 | 2,270 | 157 | 207 |
| 3282 | 184 | 3,605 | 10.26 | 202 | 1,720 | 50 | 47 |
| 3292 | 154 | 5,790 | 18.65 | 182 | 4,864 | 146 | 133 |
| **S Asia Total** | **5,553** | **195,621** | | **3,914** | **79,642** | **7,196** | **7,212** |

*Source: RI South Asia Office*

# ஏழை குழந்தைகளுக்கு ஓர் சிறப்பு வகுப்பு

கிரண் ஜெஹ்ரா



சென்னையில் பூந்தமல்லி பாலத்தின் அருகே ஒரு சேரிப்பகுதியில் மரங்களின் நிழலில் RID 3232-க்கு உட்பட்ட RAC சென்னை சென்ட்ரல் வகுப்பறையை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அந்த இடம் பரபரப்பாக இருக்கும். 20 குழந்தைகள் ஆர்வத்துடன் பாடங்களை கேட்பதுடன் குறிப்பு களையும் எடுத்துக் கொண்டிருப் பார்கள். இந்த வாரம் அவர்கள் பழங்கள் மற்றும் காய்கறிகளின் பெயர்களை ஆங்கிலத்தில் தெரிந்து கொண்டிருப்பார்கள். மேலும் மாநில தலைநகரங்கள் மற்றும் கணக்குப்பாடமும் நடத்தப் பட்டிருக்கும் என்றார் சங்கத்தின் செயலர் G கீர்த்தி.

திறந்தவெளி வகுப்பறைக்குச் செல்லும் பாதை சேறும் சகதியுமாக உள்ளது. குடிசைகள் நிறைந்த பகுதியில் ஒரு குளமும் உள்ளது. அந்த வழியே திறந்தவெளி சாக்கடை களும் உள்ளன. நாய்கள், பூனைகள், கோழிகள் சுற்றித்திரிந்த வண்ணம் உள்ளன. இங்குள்ள மக்களின் வாழ்க்கையே பரிதாபகரமாக உள்ளது. ஆனாலும் குழந்தைகள் படிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பெரும்பாலானவர்கள் வகுப்புகளை தவறவிடுவதே இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

சென்னையை அடிப்படையாக்க் கொண்டு செயல்படும் லூர் ஃபார் லைப் என்னும் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து சங்கம் ஏழைக்குழந்தைகளின் கல்விக்கான இந்த முன் முயற்சியை எடுத்தது. எங்கள் வகுப்பறை நாடோடிகள் மற்றும் அகதி குழந்தைகளின் கலவையாகும். இவர்களில் பலர் வறுமையின் காரணமாக குப்பை பொறுக்குதல் அல்லது சிறிய வேலைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் என்கிறார் சங்கத்தின் செயலர் M லாவண்யா.

இந்த வகுப்புகளில் படிக்கும் 3 குழந்தைகள் அனாதை இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேர்க்கப்பட்ட வர்கள். அவர்களின் பெற்றோர்களிடம் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று கீர்த்தி தெரிவித்துள்ளார். அனாதை இல்லங்களில் குழந்தை

களுக்கு மூன்று வேளை உணவும் தங்குவதற்கு இடமும் கிடைக்கிறது என்று பெற்றோர்கள் வாதாடினர். தாய்மார்கள் சிலர் தங்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்க்க விரும்பினாலும் அவர்களிடம் ஆதார் அட்டை இல்லை. அது இல்லாமல் பள்ளியில் சேர்க்க முடியாது.

ஹைதராபாத் அருகே பாலாபூரில், மத்திய அரசின் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் ரோஹிங்கியா பள்ளி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இங்கு 100-க்கும் மேலான அகதிகளின் குழந்தைகள் படித்து வருகின்றனர். இதுபற்றி கேள்விபட்ட சங்கம், நாமும் சென்னையில் இதுபோன்ற ஒரு பள்ளியை அமைத்தால் என்ன என்று நினைத்தது. ஆனால், அதற்கான ஏற்பாடுகள் இங்கு இல்லை என்பது தெரியவந்ததாக சங்கத்தின் தலைவர் கூறினார். இங்கு படிக்கும் குழந்தைகளுக்கு ஆதார் அட்டை பெற முயற்சித்தோம். ஆனால் அது நடக்கவில்லை. இப்போது அவர்களுக்கு சிறப்பான கல்வி அளிக்கப்பட்டு வருகிறது என்றார்.



*மைதிலி மற்றும் கீர்த்தனா குழந்தைகளுடன்.*

ரோட்ராக்டர்கள் வந்ததும் விரைவாக பணிகளைத் தொடங்கினர். ஒவ்வொரு நிமிடமும் விலைமதிப்பற்றது. நமக்கு கிடைப்பது வாரத்தில் ஒருநாள்தான். அதை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். லாவண்யா, குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குழந்தைகளை வகுப்புக்கு அழைத்து வருவார். மைதிலி என்ற மற்றொரு உறுப்பினர் நாடோடி பெண்களிடம் பேசுவார். அப்போது அவர்கள், எங்களுக்கு பணம் வேண்டும் என்பதால் கண்ணாடி, சீப்பு போன்றவற்றை விற்பதற்காக குழந்தைகளை அழைத்துச் செல்கிறோம் என்பார்கள். வாரத்தில் ஒரு நாள் தான் வகுப்பு. எனவே உங்கள் குழந்தைகளை வகுப்புக்கு அனுப்புங்கள் என்று அவர்களை சமாதனப்படுத்துவார். இறுதியில் அவர்கள் குழந்தைகளை வகுப்பில் விட்டுச் செல்வார்கள்.



RAC *சென்னை சென்ட்ரல் தலைவர்* G *கீர்த்தி மற்றும்* M *லாவண்யா குழந்தைகளுக்கு வர்ணம் தீட்ட கற்றுத்தருகின்றனர்.*

D குமார் மற்றும் C கீர்த்தனா ஆகிய இரு ரோட்ராக்டர்களும் வகுப்பறையை பெருக்கி சுத்தம் செய்கிறார்கள். அதைத் தொடர்ந்து வகுப்பு ஆரம்பிக்கும். முதல் வேலை உங்களை அறிமுகம் செய்து கொள்ளுங்கள் என்பது. உடனே ராகவ் (12) என்ற மாணவன் மிகுந்த நம்பிக்கையுடன், ஹாய் மை நேம் ஈஸ் ராகவ். ஹௌ ஆர் யூ? என்று ஆங்கிலத்தில் பேசுவார். அவரது உச்சரிப்பு தெளிவாக இருக்கும். கேள்விக்கு பதிலை எதிர்பார்த்து புன்னகையுடன் காத்திருப்பார்.

நாங்கள் தொடங்கிய இடத்திலிருந்து வெகுதூரம் வந்துவிட்டோம். ஒரு நேரத்தில் படிப்பதற்கும், வகுப்புக்கு வருவதற்கும் ஆர்வம் இல்லாமல் இருந்த குழந்தைகள் இப்போது வகுப்புகளை தவறவிடுவதே இல்லை. அவர்களை ஊக்கப்படுத்த சங்க உறுப்பினர்கள் சுவாரஸ்யமான விளையாட்டுகள், வெகுமதிகள்

மற்றும் யோசனைகளைக் கொண்டு வரவேண்டும். இது தினமும் நடைபெறும் வகுப்பு அல்ல. அவர்கள் இங்குவரவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. இது ஒரு சவால்கள் நிறைந்த வேலைதான் என்கிறார் திட்டத் தலைவர் S கோகிலா. கணிசமான அளவில் குழந்தைகள் இங்குவந்து படிப்பது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இவர்கள் முறையான பள்ளிகளில் படித்தால் என்ன சாதிப்பார்கள் என்பதை என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை என்றார் அவர்.

இந்த குழந்தைகள் கல்வி கற்பதற்கான அடிப்படை தேவைகளை சங்கம் வழங்குகிறது. பென்சில் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் தேவையானபோது வழங்கப்படுகிறது. கடந்த 2022 செப்டம்பரில் இந்த திட்டத்தை நாங்கள் தொடங்கினோம். இந்த குழந்தைகளின் நடத்தை மற்றும் செயல்பாடுகளில் மிகப் பெரிய மாற்றத்தை காண்கிறோம். சிலர் கூறுவதுபோல அவர்கள் குடிசை வாழ் குழந்தைகள் இல்லை. அவர்களும் குழந்தைகள் தான். ஆனால், சேரிப் பகுதியில் வாழ வேண்டியிருக்கிறது அவ்வளவு தான். மற்ற குழந்தைகளுடன் அவர்களை வேறுபடுத்தி பார்க்க வேண்டியதில்லை. தனியார் பள்ளியில் குழந்தைகள் என்ன கற்கிறார்களோ அதே வேகத்தில் இந்த குழந்தை களும் படிக்கின்றன என்கிறார் கோகிலா.










**தாய்மார்கள் உதவுகிறார்கள்**

இந்த குழந்தைகளுக்கு அடிப்படை கல்வி தவிர, ஆங்கிலத்தில் பேசு தல், எழுதுதல், படித்தல் மற்றும் கைவினைக்கலை பயிற்சிகள், உடற்பயிற்சிகள், யோகா, வாழ்க்கை திறன் வளர்ப்பு பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. மேலும் சமூக விழிப்புணர்வு பற்றியும் அவர்களுக்கு சொல்லித்தரப்படுகிறது. சேரிப்பகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் தாய்மார்களும் வகுப்புகளில் அமர்ந்து பாடங்களை கவனிக்கிறார்கள். வைஷாலி என்ற 3 வயது குழந்தையின் தாயார், எந்த குழந்தையாவது வகுப்பை கவனிக்காவிட்டால், பாடங்களை ஒழுங்காக கவனி என்று அதட்டுகிறார்.

யாஸ்மினின் தாயார், எனது குழந்தை பள்ளிக்கு செல்லுமா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இந்த வகுப்புகளுக்கு வருவது எனக்கு நம்பிக்கை அளிக்கிறது. ஒருவேளை எங்களைவிட அவர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறதோ என்னவோ என்றார். குழந்தைகள் படிக்கும்போது தாய்மார்கள் நின்று








கொண்டு பார்ப்பதுடன், என்ன சொல்லித் தருகிறார்கள் என்பதையும் கவனிக்கிறார்கள். எனக்கும் சில ஆங்கில வார்த்தைகள் தெரியும். இதற்காக ரோட்ராக்டர்களுக்கு நன்றி என்று புன்னகையுடன் தெரிவித்தார் யாஸ்மினின் தாயார்.

குழந்தைகளுக்கும் பெரிய கனவுகள் இருக்கின்றன. ஒரு குழந்தை கிரிக்கெட் வீரராக ஆசைப்படுகிறது. மற்றொரு குழந்தை ஆசிரியராக விருப்பம் தெரிவித்தது. ராகவ் கூறுகையில், நான் சீப்பு அல்லது புத்தகத்தை விற்க விரும்பவில்லை. நான் ஒரு ஆசிரியராகணும் என்கிறான்.

தாய்மார்களுடனான தங்களது உறவு பிணைப்பை வலுப்படுத்து வதுடன் இத்திட்டத்தை நிலை யானதாக்கவும் உதவும் என்கிறார் கீர்த்தி. இப்போதுள்ள நிலையை மேம்படுத்து எங்களுக்கு மேலும் நிதி தேவை என்றார்.

இந்த குழந்தைகளுடன் தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸ் விழாக்களை இச்சங்கம் கொண்டாடியது சிறப்பு அம்சமாகும். ■

# TRF மாயாஜாலத்தை வெளிப்படுத்துவோம்!

ரஷீதா பகத்

அடுத்தடுத்த ஆண்டுகளில் ரோட்டரி அறக்கட்டளை யானது ரோட்டேரியன்களிடமிருந்து நன்கொடை பெறும் இலக்கை அதிகரித்து வருகிறது. இதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள், பெரிய அளவில், நிலையான, தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த முடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரோட்டரி இன்டர்நேஷனல் வாரியம் TRF வசூல் இலக்கை நிர்ணயிக்கிறது. 2019–20 இல் இலக்கு 370 மில்லியன் டாலராக இருந்தது. 2020–21-இல் இது 410 மில்லியன் டாலராக அதிகரித்தது. அந்த ஆண்டு கோவிட் தொற்று தொடங்கி முடிவடைந்தது அனைவருக்கும் தெரியும் என்றார் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா. திருவனந்தபுரத்தில் RID 3211 மண்டலம் 5 சார்பில் நடைபெற்ற TRF அங்கீகார கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இது ஒரு பைத்தியக்காரத்தனம் என நினைத்தவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் அவர் மேலும் கூறியதாவது: சிலர் TRF இலக்கை 370 மில்லியன் டாலரிலிருந்து 350 மில்லியன் டாலராக குறைத்திருக்க வேண்டும். 410 மில்லியன் டாலராக இலக்கை



உயர்த்தி இருக்கக்கூடாது என நினைத்தனர். ஆனால், உங்களைப் போன்ற பெருந்தன்மையானவர்கள் அள்ளிக்கொடுத்ததால் அந்த ஆண்டு 410 மில்லியன் டாலருக்கு பதிலாக 440 மில்லியன் டாலர் வசூலானது. TRF நிதிப் பங்களிப்பில் ரோட்டேரியன்களுக்கு உள்ள கடமை உணர்வை இது நிரூபிக்கிறது என்றார்.

உலகத்தை மாற்ற தனிப்பட்ட முறையில் எவராலும் அதிகம் செய்ய முடியாது, ஆனால், TRF மூலம் நாம் உலகத்தை வாழ்வதற்கு சிறந்த இடமாக மாற்ற முடியும். TRF தான் உலகை பார்ப்பதற்கான ஜன்னலாகும். அதன் வழியாக பார்த்தால் ஆயிரக் கணக்கான மக்கள் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரம் இன்றி தவிப்பதை காணமுடியும்.

TRF ஜன்னல் வழியாக பார்த்தால், நமக்குள்ள வாய்ப்புகள் தெரியவரும். கர்ப்பிணிகள் மலிவு விலையில் மருத்துவ வசதிகள் கிடைக்காமல் போராடி வருவதையும், பள்ளிகள் மாணவர்கள், மாணவிகளுக்கு என தனித்தனியாக கழிப்பறை வசதி இல்லாததால் பூப்பெய்திய சிறுமிகள் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி விடுவதையும், பள்ளிக்குச் செல்ல நீண்டதொலைவு நடக்க வேண்டியிருப்பதால் பெண்கள் படிப்பை நிறுத்திவிடுவதையும் காணமுடியும். இதுபோன்ற காரணங்களால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவே பயப்படுகிறார்கள்.

*கேட்ஸ் அறக்கட்டளை வெளியிட்ட அறிக்கையில் பில் கேட்ஸ், போலியோ ஒழிப்புக்கு கேட்ஸ் அறக்கட்டளை அதிக நிதியுதவி அளித்து வந்தாலும் அதற்கான முழு பணிகளை ஏற்று செயல்படுத்தியது ரோட்டேரியன்கள்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.*



*நிகழ்ச்சியில் பெண்களுக்கு அளிப்பதற்கான தையல் இயந்திரங்கள் தயாராக உள்ளன.*

ஒருமுறை ரோட்டேரியன்கள் இந்த ஜன்னல் வழியாக கண்களை ஓடவிட்டு பார்த்தால், இரண்டு விஷயங்கள் புரியவரும். ஒன்று கண்களை மூடிக்கொண்டு எதுவும் நடக்காததுபோல் வழக்கம்போல் உங்கள் பணிகளை மேற்கொள்ளலாம் அல்லது அவர்களுக்காக ஏதாவது செய்ய நினைக்கலாம். சிறந்த வழி என்னவெனில் TRF திட்டங்கள் மூலம் ஏதாவது செய்வதுதான்.

அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லி, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்தார். ஆனால், மும்பை மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருப்பதால் வீடியோ மூலம் அவரது உரையை வெளியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று கூறிய பாண்ட்யா, இந்த ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில் இயன் ரைஸ்லி இந்திய பயணத்திற்கு திட்டமிட்டிருந்தார். இந்தியா ஒரு முக்கியமான நாடு, அறக்கட்டளை தலைவர் என்ற முறையில் இரண்டு முறை இந்தியா வர திட்டமிட்டிருந்தேன் என்று அவர் கூறியிருந்தார். கடந்த ஆண்டு (2022) செப்டம்பர் மாதம் அவர் இந்தியா வந்தார். தென்னிந்தியாவில் மண்டலம் ஐந்தை பார்வையிட அவர் விருப்பம் கொண்டிருந்தார். ஏனெனில் மண்டலம் 5 இந்தியாவின் பங்களிப்பில் முன்னிலை வகிக்கிறது. அதுமட்டுமல்ல உலக மண்டலங்களில் 4 அல்லது 5 வது

இடத்தில் உள்ளதாக நான் அவரிடம் குறிப்பிட்டிருந்தேன். எனவே நான் அந்த மண்டலத்திற்கு செல்ல வேண்டும். அங்கு பல மாவட்ட நிகழ்ச்சிகளை நடத்த முயற்சிப்போம் என்று ரைஸ்லி என்னிடம் கூறினார் என்றார் பாண்ட்யா.

EMGA, ARRFC-ண் மற்றும் மண்டலம் 5-க்கு உட்பட்ட மாவட்ட ஆளுநர்கள் மற்றும் AKS உறுப்பினர்கள் மற்றும் பெருநன்கொடையாளர்கள் பங்கேற்ற இந்த மெகா நிகழ்வுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தற்காக RRFC ஜான் டேனியலுக்கு அவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். PDG ஜான் டேனியல் தனது குடும்ப டிரஸ்ட் Y டேனியல் அறக்கட்டளை மூலம் ரூ.50 லட்சம் பெருமானமுள்ள 1,000 தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் மற்றும் EMGA E K சகாதேவன் அளித்த நன்கொடை மூலம் 1,000 சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தையும் கேரள கல்வி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் சிவன்குட்டி தொடங்கிவைத்தார். இத்திட்டங்களுக்கு காரணமானவர் களை பாண்ட்யா பாராட்டினார்.

*TRF தான் உலகை பார்ப்பதற்கான ஜன்னலாகும். அதன் வழியாக பார்த்தால் ஆயிரக் கணக்கான மக்கள் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரம் இன்றி தவிப்பதை காணமுடியும்.*

பலமாவட்ட நிகழ்வு சார்பில் நடைபெற்ற விருந்தில் பங்கேற்ற நன்கொடையாளர்கள் மற்றும் AKS உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த TRF அறங்காவலர் பாண்ட்யா, TRF நமது வீட்டு வாசலில் தொடங்கி உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் விரிவடைகிறது. திருவனந்தபுரத்தில் டயாலிஸிஸ் மையம் அமைப்பதாக இருக்கட்டும் அல்லது பெங்களூர் அல்லது தில்லியில் இரத்த வங்கி தொடங்குவதாக இருக்கட்டும் அல்லது ரோட்டரி மாவட்டம் 3141-க்கு உட்பட்ட ஊரகப் பகுதியில் தடுப்பணை கட்டுவதாக இருக்கட்டும் அல்லது ராஜ்கோட்டில் ஐந்து மாடியில் நீரிழிவு நோய் சிகிச்சை மையம் அமைப்பதாக இருக்கட்டும் அனைத்தும் TRF நிதி உதவியுடன் செய்யப்பட்டதாக இருக்கும். ஆனால், எங்களது நோக்கம் மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுதான் என்றார்.

ஜாம்பியாவில் மலேரியாவை எதிர்த்துப் போராடவும், நைஜீரியாவில் தாய்-சேய் நலத்



PDGs E K *சகாதேவன்* (RID 3203), A V *பதி* (RID 3201) *மற்றும் ராஜ்மோகன் நாயர்* (RID 3201).

# போலியோபிளஸ் — ரோட்டரியின் கிரீடத்தில் உள்ள மாணிக்கக்கல்



RC கோயம்புத்தூர் ஆக்ருத்தியை சார்ந்த AKS உறுப்பினர் லீமா ரோஸ் மார்டினை TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா கௌரவிக்கிறார். உடன் PDGs R பாலாஜி பாபு, ஹரிகிருஷ்ணன் நம்பியார், S முத்துபழனியப்பன், பதி, DG நாயர், K பாபுமோன், அவர் மனைவி பீனா, Rtn கவிதா வெள்ளிங்கிரி, PDGs ஜான் டேனியல் மற்றும் மாதவ் சந்திரன் ஆகியோரும் உள்ளனர்.

மண்டலம் 5 TRF நன்கொடையாளர்களுக்கான பல மாவட்ட அங்கீகார இரவு விருந்தில் உரையாற்றிய அறங்காவலர் பரத் பாண்ட்யா, TRF-இன் முதன்மைத் திட்டம் போலியோபிளஸ் திட்டமாகும். இது இன்று உலகின் ஒவ்வொரு அரசாங்க தளத்திலும் ரோட்டரிக்கு இடம் அளித்துள்ளது என்றார். ரோட்டேரியன்கள் எப்போதாவது விரக்தியில் போலியோபிளஸ் திட்டத்துக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று புகார் செய்வதை கேட்டிருக்கிறேன். சரி ரோட்டரியின் போலியோ திட்டத்திற்கு கேட்ஸ் அறக்கட்டளை பங்குதாரராக உள்ளது. அறக்கட்டளையின் இணைய தளத்திற்கு சென்று போலியோ திட்டத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்க்கவும். போலியோ ஒழிப்புத் திட்டத்தை பொருத்தவரை ரோட்டரி உதவி இல்லாமல் உலகம் இன்று இருக்கும் நிலையில் இருக்காது என்றும் ரோட்டரி இல்லாமல் உலகம் விரும்பும் இடத்தை பெறமுடியாது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

அவர் மேலும் கூறுகையில், கடந்த அக்டோபரில் பெர்லினில் நடைபெற்ற உலக சுகாதார மாநாட்டில் பல்வேறு அரசுகளும், அமைப்புகளும் அடுத்த மூன்று ஆண்டுகளில் போலியோவை முற்றிலுமாக ஒழிக்க உறுதிமொழி ஏற்றன என்றார். இரண்டாவது கடைசி பேச்சாளர் TRF அறங்காவலர் தலைவர் இயான் ரைஸ்லி. அவர் ரோட்டேரியன்கள் சார்பில் பேசுகையில், போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 150 மில்லியன் டாலர் நிதி திரட்ட உறுதியளித்தார். அதுவே இரண்டாவது பெரிய உறுதிமொழியாகும். கடைசி பேச்சாளர் கேட்ஸ் அறக்கட்டளையின் தலைமைச் செயல் அதிகாரி. அவர் அடுத்த மூன்று ஆண்டுகளில் 1.2 பில்லியன் நிதி தர உறுதிமொழியேற்றார். அதைவிட முக்கியமானது, அவர் நமது அறக்கட்டளைத் தலைவர் இயான் ரைஸ்லியை அவரை சுட்டிக்காட்டி, ரோட்டரி இல்லாவிட்டால் போலியோ ஒழிப்பில் இந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்காது என்று குறிப்பிட்டார்.

பில் கேட்ஸ் அறக்கட்டளை இதுவரை கொடுத்துள்ள 1.5 பில்லியன் டாலர்களும் அடுத்த மூன்று ஆண்டுகளில் தரவிருக்கும் 1.2 பில்லியன் டாலர்களும் ரோட்டரி மூலமே செல்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? இது உலக சுகாதார மையம் அல்லது யுனிசெப் அல்லது உலகில் உள்ள அரசாங்கங்கள் மூலமோ வழங்கப் படவில்லை. போலியோ ஒழிப்புக்கு நிதி பெற விரும்பினால் அவை TRF-ஐத் தான் அணுகி பெறவேண்டும்.

சமீபத்தில் கேட்ஸ் அறக்கட்டளை வெளியிட்ட அறிக்கையில் பில் கேட்ஸ், போலியோ ஒழிப்புக்கு கேட்ஸ் அறக்கட்டளை அதிக நிதியுதவி அளித்து வந்தாலும் அதற்கான முழு பணிகளை ஏற்று செயல்படுத்தியது ரோட்டேரியன்கள்தான் என்று குறிப்பிட்டுள்ளார். போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்பட்டால், முதல் அழைப்பாக நான் TRF தலைமையகத்தை தொடர்பு கொண்டு பேசி வாழ்த்து தெரிவிப்பேன். ரோட்டேரியன்களின் பணிக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிப்பேன் என்று அந்த அறிக்கையில் கேட்ஸ் குறிப்பிட்டுள்ளார். இதுதான் நமக்கு கிடைக்கும் அங்கீகாரம் என்று நிகழ்ச்சியில் குழுமியிருந்த கூட்டத்தினரிடையே கூறினார் பாண்ட்யா.

மற்றொரு நல்ல தகவலையும் பாண்ட்யா பகிர்ந்து கொண்டார். 2021ல் 6 பேருக்கு போலியோ நோய் இருப்பது கண்டறியப்பட்டது. 2022ல் இது 30 ஆக அதிகரித்தது. அதே ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதிக்குப் பிறகு இதுவரை பாகிஸ்தானிலோ, ஆப்கானிஸ்தானிலோ அல்லது மொஸாம்பிக் நாட்டிலோ ஒருவருக்கு கூட போலியோ நோய் தாக்குதல் இருப்பது தெரிய வரவில்லை. ஐந்து மாதங்களில் எவரும் போலியோவால் தாக்கப்பட்டவில்லை என்ற நிலையில் 2026 ஆம் ஆண்டில் உலகில் போலியோ முற்றிலும் ஒழிக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதுதான் உலகில் நாம், நம் குழந்தைகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் அளிக்கும் பரிசாக இருக்கும் என்றார் பாண்ட்யா.

திட்டத்துக்காகவும் TRF இரண்டு மானிய உதவிகளைச் செய்துள்ள விவரங்களை பாண்டியா விவரித்தார். ஜாம்பியாவுக்கு 6 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்கப்பட்டது. இவற்றில் கேட்ஸ் அறக்கட்டளை, வேர்ல்டு விஷன் மற்றும் TRF தலா 2 மில்லியன் டாலரை விடுவித்துள்ளது. இவை நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கிய இரண்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த 18 மாதங்களில் ஜாம்பியாவில் இத்திட்டம் ஏறக்குறைய முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மலேரியாவுக்கு உயிரிழப்பவர்கள் எண்ணிக்கை 50 சதவீதம் குறைந்துள்ளது. இவைதான் TRF திட்டம் ஏற்படுத்தும் தாக்கமாகும்.



TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யாவுடன்* **(இடமிருந்து)** *மீரா,* PDG *ஜான் டேனியல்,* R *பாலாஜி பாபு,* S *முத்துபழனியப்பன்,* DG K *பாபுமோன், அவர் மனைவி பீனா மற்றும்* PDG E K *சகாதேவன்.*

உக்ரைனிலும் 8 வாரங்களில் உக்ரைன் மக்கள் மறுவாழ்வுக்காக ரோட்டேரியன்கள் 15 மில்லியன் டாலர் நன்கொடை அளித்துள்ளனர். அடுத்த 4 மாதங்களில் அதாவது செப்டம்பரில் அவை முழுமையாக விநியோகிக்கப்பட்டன. இப்போது அறங்காவலர் புதிய உக்ரைன் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தியுள்ளனர். பல சமயங்களில் TRF உடனடியாக பதிலளிப்பதில்லை என்று சொல்வதுண்டு. சரி, நிச்சயமாக இதைவிட விரைவான பதில் இருக்க முடியாது.

TRF உள்ளிட்ட ரோட்டரி உலகில் இன்று இந்தியா உயர்ந்த இடத்தில் இருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், குறிப்பாக கடந்த மூன்று ஆண்டுகளில் TRF-க்கு அதிக பங்களிப்பு செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. எஞ்சிய இரண்டு ஆண்டுகளில் மூன்றாவது இடத்தை வகித்தது. இது அனைத்து ரோட்டேரியன்களுக்கும் பெருமை தரக்கூடிய செய்தியாகும் என்று கூறி முடித்தார் பாண்ட்யா.

நிகழ்ச்சியில் உரையாற்றிய கேரள அமைச்சர் சிவன்குட்டி, கேரளத்தில் தன்னலமற்ற சேவைத் திட்டங்கள் மூலம் ரோட்டரி செய்து வரும் பணிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார். சமீபகாலமாக கேரளம் இயற்கை பேரிடர்களால் பலமுறை பாதிக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு வழங்குதல், மருத்துவமனைகளுக்கு நோய் கண்டறியும் நவீன மருத்துவ உபகரணங்களை வழங்குதல் என பல திட்டங்களை ரோட்டரி நிறைவேற்றியுள்ளது. மேலும் ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் சுயதொழில் செய்து வருவாய் ஈட்டமுடியும். மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கப்பட்டதன் மூலம் அவர்கள் பள்ளிக்கு தவறாமல் சென்று கல்வி கற்க முடிகிறது என்றும் குறிப்பிட்டார்.

RRFC டேனியல் மற்றும் PDG சகாதேவன், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் DG K பாபுமோன் (RID 3211), EMGA மாதவ் சந்திரன் மற்றும் மண்டலம் 5ஐ மண்டலத்தைச் சேர்ந்த ARRFC, PDGs R பாலாஜி பாபு, ஹரிகிருஷ்ணன் நம்பியார், A V பதி, A கார்த்திகேயன், முத்து பழனியப்பன், DGs V செல்வநாதன் (2981), P சரவணன் (2982), ராஜ்மோகன் நாயர் (3201) உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மேலும், 15 AKS உறுப்பினர்கள் (2022–23) நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.



**இடமிருந்து:** *பீனா,* DG *பாபுமோன், கேரள அமைச்சர் சிவன்குட்டி,* PDG *ஜான் டேனியல், மீரா மற்றும்* TRF *அறங்காவலர் பாண்ட்யா.*

**படங்கள்:** ரஷிதா பகத்




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

**FIND A CLUB**

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contributions as on January 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| | | | **India** | | |
| 2981 | 19,151 | 512 | 0 | 1,125 | 20,788 |
| 2982 | 10,196 | 2,238 | 4,061 | 33,116 | 49,611 |
| 3000 | 23,610 | 3,169 | 0 | 0 | 26,779 |
| 3011 | 38,119 | 8,063 | 25,127 | 238,088 | 309,396 |
| 3012 | 13,280 | 752 | 65,235 | 140,713 | 219,980 |
| 3020 | 106,894 | 7,902 | 40,000 | 400 | 155,196 |
| 3030 | 51,772 | 290 | 0 | 1,275 | 53,337 |
| 3040 | 18,660 | 2,006 | 0 | 22,156 | 42,822 |
| 3053 | 41,122 | 136 | 0 | 0 | 41,258 |
| 3054 | 9,130 | 826 | 0 | 31,500 | 41,456 |
| 3060 | 71,305 | 1,500 | 0 | 64,635 | 137,440 |
| 3070 | 47,956 | 2,570 | 50,233 | 11,296 | 112,055 |
| 3080 | 27,492 | 7,482 | 0 | 38,163 | 73,137 |
| 3090 | 8,368 | 0 | 5,651 | 0 | 14,019 |
| 3100 | 52,929 | 400 | 25,012 | 0 | 78,341 |
| 3110 | 21,034 | 454 | 24,304 | 631,051 | 676,843 |
| 3120 | 23,823 | 411 | 0 | 0 | 24,234 |
| 3131 | 305,668 | 8,789 | 36,315 | 302,254 | 653,026 |
| 3132 | 40,636 | 2,391 | 50,000 | 2,012 | 95,039 |
| 3141 | 681,895 | 32,756 | 102,003 | 1,451,865 | 2,268,519 |
| 3142 | 195,175 | 3,721 | 24,866 | 77,045 | 300,807 |
| 3150 | 76,936 | 27,423 | 43,012 | 417 | 147,788 |
| 3160 | 3,749 | 2,363 | 0 | 3,675 | 9,786 |
| 3170 | 80,673 | 33,854 | 15,506 | 862 | 130,895 |
| 3181 | 77,084 | 622 | 25 | 912 | 78,644 |
| 3182 | 36,769 | 2,789 | 0 | 0 | 39,559 |
| 3190 | 63,921 | 7,350 | 38,170 | 36,593 | 146,034 |
| 3201 | 95,560 | 23,874 | 12,295 | 414,030 | 545,760 |
| 3203 | 7,124 | 12,833 | 1,000 | 30,054 | 51,011 |
| 3204 | 5,645 | 806 | 0 | 152 | 6,603 |
| 3211 | 73,343 | 5,065 | 10,000 | 1,049 | 89,458 |
| 3212 | 178,860 | 37,834 | 305 | 52,146 | 269,145 |
| 3231 | 60,394 | 23,432 | 32,278 | 11,569 | 127,672 |
| 3232 | 60,503 | 58,338 | 19,358 | 201,544 | 339,743 |
| 3240 | 80,731 | 14,913 | 1,000 | 3,622 | 100,266 |
| 3250 | 13,030 | 290 | 0 | 13,605 | 26,925 |
| 3261 | 16,616 | 917 | 0 | 5,277 | 22,809 |
| 3262 | 46,043 | 463 | 700 | 34,012 | 81,218 |
| 3291 | 50,452 | 1,172 | 40,533 | 8,190 | 100,348 |
| **India Total** | **2,835,646** | **340,708** | **666,989** | **3,864,404** | **7,707,747** |
| 3220 **Sri Lanka** | 48,474 | 8,333 | 4,000 | 226 | 61,033 |
| 3271 **Pakistan** | 25 | 22,125 | 0 | 250 | 22,400 |
| 3272 **Pakistan** | 455 | 12,687 | 0 | 5,000 | 18,142 |
| 3281 **Bangladesh** | 58,696 | 3,546 | 22,125 | 154,245 | 238,612 |
| 3282 **Bangladesh** | 46,640 | 6,701 | 2,000 | 10,320 | 65,662 |
| 3292 **Nepal** | 165,773 | 20,236 | 49,167 | 29,830 | 265,006 |
| **South Asia Total** | **3,155,709** | **414,336** | **744,281** | **4,064,275** | **8,378,601** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# பாண்டுரங்க செட்டி: ஒரு முன்மாதிரி, ஊக்கமளிக்கும் மற்றும் நம்பகமான நண்பர்

ராஜேந்திர சாபூ

உயரத்தில் சிறியவர், கட்டமைப்பில் ஒல்லியானவர், ஆனால் புத்தி சாலித்தனம் மற்றும் தொலைநோக்கு பார்வையில் துணிச்சலானவர் மற்றும் தீவிரமானவர், பல வகையான எண்ணங்களை கொண்ட பாண்டுரங்க செட்டி ஒரு அபூர்வ மனிதர். 1978ஆம் ஆண்டு அவர் 319ஆம் மாவட்ட ஆளுநராக இருந்ததற்கு முன்னரே அவரை நான் அறிந்திருந்தேன். அதன் பிறகு அவருடன் நெருக்கமாகிவிட்டேன். 1970இல், பாண்டுவின் சகோதரிகள் சாந்தா மற்றும் நிர்மலா ஆகியோர் சண்டிகருக்கு வந்தனர். அவர்கள் எங்கள் விருந்தாளிகளாகி என் மனைவி உஷாவால் கவனித்துக் கொள்ளப்பட்டனர்.

1971–72ல் RC சண்டிகரின் தலைவரான பிறகு எனக்கு ரோட்டரியில் ஆர்வம் ஏற்பட்டது. பெங்களூரில் என் தந்தை புதிய வீடு ஒன்றை கட்டினார். அந்த காலக்கட்டத்தில், நான் பெங்களூரில் இருந்தேன், ஆனால் 1971இல் வீடு திறப்பு விழா நாளில், என் மூத்த சகோதரர் மகேந்திரன் இறந்துவிட்டார். பாண்டு செட்டியின் குடும்பத்திற்கு நெருக்கமான எனது உறவினர் பிரயாக் மல்பானி மற்றும் பாண்டு ஆகியோர் இறுதி சடங்கிற்கு ஏற்பாடு செய்தனர்.

பாண்டுவின் ரோட்டரி கதை 1959இல் RC பெங்களூரில் அவர் சேர்ந்த போது தொடங்கியது. அவர் 1969–70இல் சங்கத்தலைவரானார். நான் அவரையும் அவரது மனைவி வசந்தாவையும் புளோரிடாவில் உள்ள போகா ரட்டானில் நான் குழு விவாத தலைவராக இருந்த போது சர்வதேச அசெம்பிளியில் சந்தித்தது மிகவும் இனிமையாக இருந்தது. அவர் கிருஷ்ணா மாவு ஆலையுடன் வணிகத்தைத் தொடங்கினார், மேலும் கால்நடை தீவனம் தயாரிக்கும் பணிக்கு விரிவுபடுத்தினார். அவர் தனது இளைய சகோதரர் ராமச்சந்திராவை ஆதரித்தார், சில ஆண்டுகளுக்குப் பிறகு மாவட்ட ஆளுநராக அவரது திட்டப்பார்வைக்காக, ராமச்சந்திராவிடம் கால்நடை தீவன ஆலையை கொடுத்துவிட்டு விலகினார்.

1979–80இல், RI தலைவர் ஜிம் போமார், இந்திய ரோட்டேரியன் களிடமிருந்து தடுக்கப்பட்ட தனிநபர் அமெரிக்க டாலர்கள் குறித்து கவலைப்பட்டார். அமெரிக்காவில் உள்ள RI-க்கு பணத்தை எப்படி அனுப்புவது என்று என்னிடம் கேட்கப்பட்டது. தனிநபர் நிதிக்கான தவணைக்கு என்னால் அங்கீகாரம் பெறமுடிந்தது. ஆனால் ரோட்டரி இதழ்களுக்கு பெறமுடியவில்லை. இந்தியாவில் ரோட்டேரியன் அச்சிடுவது குறித்து முடிவு செய்ய ஒரு குழுவிற்கு நான் தலைமை தாங்கினேன், மேலும் ஒரு பிராந்திய இதழ் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தேன். பிராந்திய இதழ் பெங்களூரில் இருக்க வேண்டும் என்று தெரிந்து பெங்களூர்




*RI தலைவராக ராஜேந்திர சாபூ இருந்த போது RI போர்ட் உறுப்பினராக பாண்டுரங்க செட்டி.*

சென்று பாண்டுவுடன் இணைந்து அதற்கான சாத்தியக்கூறுகளைத் தேடினேன். PDG டெபு ஹோசாலி முன்னர் ரோட்டரி இதழை வெளி யிட்டார், இது ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படாமல், எப்போதாவது வெளியிடப்பட்டது. ஹோசாலி ரமேஷ் பாயிடம் பத்திரிக்கையை விற்றதைக் கண்டுபிடித்தோம், அவருடன் பேச, ரோட்டரி நிறுவனத்திடம் பிரசுரத்தை மகிழ்ச்சியுடன் ஒப்படைத்தார்.

பாண்டுவும் நானும் ரோட்டரி அறக்கட்டளையின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பத்திரிகையின் கட்டுப் பாட்டை எடுத்து அதை மறு சீரமைப்பது குறித்து விவாதித்தோம். RI இயக்குநராக, நான் பிராந்திய இதழை எடுத்துக் கொண்டேன் மற்றும் ஒரு துணைக்குழுவின் பரிந்துரையுடன், RI வாரியம் அதற்கு ஒப்புதல் அளித்தது. 1983 வாக்கில், ரோட்டரி நியூஸின் முதல் இதழ் கல்கத்தாவில் உள்ள ஆசிய ஜோன்-II இன்ஸ்டிட்டியூட்டில் RI தலைவர் பில் ஸ்கெல்டனால் வெளியிடத் தயாரானது. RI குழுவில் உறுப்பினராக இருந்ததால், அந்த இதழை தெற்காசியாவிற்கான ரோட்டரி பிராந்திய இதழாக அங்கீகரித்து சான்றிதழைப் பெற முடிந்தது. பாண்டு பத்திரிகையின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் ஆனார்.

பாண்டு ஒரு ரோட்டரி சக ஊழியராக மட்டுமல்லாமல் நண்பராகவும் பின்னர் குடும்ப உறுப்பினராகவும் ஆனார். அவருக்கு ஜெர்மனியில் பெரும் செல்வாக்கு இருந்தது, எனக்கு ஜெர்மன் தொடர்புகள் இருந்த போதிலும், ஜெர்மனி வழியாக பயணம் செய்த என் உறவினர் ஒருவருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் போது அவர் உதவினார். அவர் உடனடியாக சில மூத்த அறுவை சிகிச்சை நிபுணர்களை ஏற்பாடு செய்தார்.

பாண்டு RI இயக்குனர் பதவியை சுதர்சன் அகர்வாலிடம் இழந்தார், ஆனால் அடுத்த முறை 1991–93க்கு தென்னிந்தியாவிலிருந்து முதல் முறையாக RI இயக்குநராக ஒரு மனதாக பரிந்துரைக்கப்பட்டார்.



*முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களுடன் PRID செட்டி.*

காத்மாண்டுவில் நடந்த இன்ஸ்டிட் யூட்டில், நான் ஏற்கனவே RI தலைவராக பரிந்துரைக்கப் பட்டிருந்தேன். என் RI தலைவர் பதவிக்கு சவால் விடப்பட்டது, RI இயக்குநர் நியமனத்தில் இருந்து பாண்டு ராஜினாமா செய்ய வேண்டும் என்பது எனக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை. இது அபத்தமானது, பாண்டு எனது குழுவில் ஒருவர் மற்றும் குழுவில் உள்ள எந்தவொரு திட்டத்திற்கும் எனது குரலாக இருந்தார்.

1991–92இல், RID 3080 தேர்தலில் எனது கண்டிப்பான வழிகாட்டுதல்களுக்கு எதிராக பிரச்சாரம் நடப்பதாக கேள்விப் பட்டதை பாண்டு தொலைபேசியில் தெரிவித்தார். எனது மாவட்ட மாநாட்டு பிரதிநிதி PDG P C தாமஸின் அறிக்கை தெளிவாக இருந்தது. P C தாமஸ்க்கு போன் செய்து உண்மையில் என்ன நடந்தது என்று கேட்டேன். பாண்டு என்னை எச்சரித்ததால், நான் உடனடியாகச் செயற்குழுத் தலைவர் பிச்சை



**PRIP K R ரவீந்திரன் (இடதில்) மற்றும் PRIP சாபூவுடன் PRID செட்டி (வலதில்).**



*மெக்ஸிகோ மாநாட்டில் PRIP சாபூ மற்றும் PRID செட்டி.*

ரட்டகுல்லை சண்டிகருக்குச் செல்லும்படி கேட்டுக் கொண்டேன், இதன் விளைவாக எந்த வேட்பாளரும் தகுதி நீக்கம் செய்யப்படாமல் தேர்தல் நடந்தது.

Y P தாஸின் ஆளுநர் நியமனம் ரத்து செய்யப்பட்டது, ஆனால் பின்னர் அவர் 1993–94க்கான கவர்னர்-வேட்பாளராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1991–92இல் பாண்டு RI கமிட்டியில் இருந்தார். பாண்டு மற்றும் அவரது மனைவி வசந்தா இருவரும் எவன்ஸ்டனில் உள்ள எங்கள் இல்லத்திற்கு வந்தனர். பிறகு அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள ஆர்லாண்டோ கன்வென்ஷன் நடந்தது, அப்போது பாண்டு என் குடும்பத்தை கவனித்துக்கொண்டார். போர்டு உறுப்பினர்களின் மனைவி களுக்கு ஒரு சமூகக் கூட்டத்தில் அணிய புடவைகளை வசந்தா கொண்டு வந்ததை என்னால் மறக்க முடியாது.

1992–93இல், பாண்டுவின் மீது மிகுந்த அபிமானம் கொண்டிருந்த கிளிஃப் டோக்டர்மேன், அவரை நிர்வாகக் குழுவின் தலைவராக்கினார், மேலும் அவரது செல்வாக்கு இலங்கையில் இருந்து முதல் முறையாக இன்டர்நேஷனல் அசம்ப்ளியில் பயிற்சித் தலைவராக K R ரவீந்திரன் நியமிக்கப்பட்டார். ரவீந்திரன் RI இயக்குநராகவும், இறுதியாக RI தலைவராகவும் ஆவதற்கு இதுவே முதல் படியாகும். ரவீந்திரன் பாண்டுவிடம் வாழ்க்கையிலும், மதிப்புகளிலும் ஒரு ஆசிரியரைக் கண்டார். நான் RI தலைவராக இருந்த காலத்தில் பாண்டு இலங்கைக்கு சென்று கண்டியில் செயற்கை கால் வசதி மையத்தை ஆரம்பித்து வைத்தார்.

பாண்டு தென்கிழக்கு ஆசிய பிராந்திய போலியோ பிளஸ் குழுவின் தலைவராக பணியாற்றினார் மற்றும் தென்கிழக்கு ஆசியா போலியோ இல்லாத சான்றிதழ் பெறுவதை உறுதிசெய்ய ஆண்டாண்டுகளாக வழிகாட்டினார். அவர் RI-இன் “சர்வீஸ் அபோவ் செல்ஃப்” விருதைப் பெற்றார்.

K R ரவீந்திரன் மற்றும் சமீபத்தில் கார்டன் மெக்னலி உட்பட RI தலைவர்களுக்கான அதிகபட்ச நியமனக் குழுக்களில் பாண்டு இருந்தார்.

வசந்தா மற்றும் பாண்டு இருவரும் தாராள மனப்பான்மை கொண்டவர்கள். அவர்களின் எளிமையான மற்றும் நேர்த்தியான வீட்டில் நாங்கள் தென்னிந்திய விருந்து சாப்பிடுவோம். பின்னர் வசந்தாவுக்கு கீல்வாதம் ஏற்பட்டு அதிகம் அசைய முடியாமல் போனார். முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி, பாண்டுவை தொழில் ரீதியாக மட்டுமல்லாமல், அமைப்பின் உயர்மட்ட ரோட்டேரியன் என்றும் வெகுவாகப் பாராட்டினார்.

பாண்டு மற்றும் வசந்தாவின் ரோட்டரி வாழ்க்கைப் பயணம் பல தசாப்தங்களாக உள்ளது. உஷாவும் நானும் அவர்களை எங்களுடைய சக பயணிகளாகவும் உண்மையான நண்பர்களாகவும் பெற்றதற்கு அதிர்ஷ்டசாலிகளாக உணர்கிறோம். பாண்டுவின் குணாதிசயங்கள் அவருடைய கருத்துக்களை எதிர்த்தவர்களும் அவரைப் போற்றுமாறு இருந்தது.

ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலராக பாண்டுவை என்னால் பெற முடியவில்லை என்பது எனது பெரும் ஏமாற்றம். வரவிருந்த RI தலைவர் ஜான் கென்னியின் காலத்தில், ஒரு அறக்கட்டளை மற்றும் பிற நிறுவனங்களை நிர்வகிப்பதில் அவருக்கு இருக்கும் பரந்த அனுபவத்தை வைத்து, பாண்டுவை அறங்காவலராக நியமிக்குமாறு நான் அவரிடம் கெஞ்சினேன். துரதிர்ஷ்டவசமாக, பாண்டுவுக்கு வயதாகிவிட்டதாக அவர் கூறி, எனது அடுத்த

பரிந்துரையை ஏற்றுக்கொண்டார், அசோக் மகாஜன் அறங்காவலரானார்.

சண்டிகரின் ரோட்டரி சங்கம், பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உட்பட குழந்தைகள் மற்றும் 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இதய அறுவை சிகிச்சைக்கான ஹார்ட் லைன் திட்டத்தைக் கொண்டிருந்தது. 2007ஆம் ஆண்டில், 13 வயதுடைய தௌசீப், என்ற சிறுவனுக்கு சங்கம் அறுவை சிகிச்சை செய்த PGI-க்கு வர முடியவில்லை. பல்மனரி வால்வு இல்லாத மற்றும் ஒரு நுரையீரலுக்கு இரத்த ஓட்டம் இல்லாத, பல்மனரி ஆர்டீசியா எனும் இதயநிலை இருந்தது. நான் PGI-இல் உள்ள அறுவை சிகிச்சை நிபுணரிடம் கேட்க, அவர்கள் பெங்களூரில் உள்ள டாக்டர் தேவி ஷெட்டி என்பவர் இந்த முக்கியமான அறுவை சிகிச்சையை செய்யக்கூடியவர் என்றார்கள். சிறுவனுக்கும் அவனது தந்தைக்கும் பாகிஸ்தானிலிருந்து சண்டிகருக்கு விசா இருந்தது. டெல்லியில் உள்ள ரோட்டேரியன்களின் கூட்டு உதவியுடன் பெங்களூருக்கான விசா ஆறு மணி நேரத்தில் கிடைத்தது, காலையில் அவர்கள் இருவரும் டெல்லிக்கும் பின்னர் பெங்களூருக்கும் விமானத்தில் சென்றனர்.



*தொழிலதிபர் Sir M விஸ்வேஸ்வரய்யாவுடன் PRID செட்டி.*

பாண்டுவிற்கு டாக்டர் ஷெட்டியை நன்கு தெரியும் என்பதால், உடனடியாக நடவடிக்கையில் இறங்கினார். நாராயண ஹிருதயாலயா மருத்துவ மனையிலிருந்து வந்த ஆம்புலன்ஸ் சிறுவனையும் அவனது தந்தையையும் விமான நிலையத்தில் சந்தித்தது, டாக்டர் ஷெட்டி 9 மணிநேரம் அறுவை சிகிச்சை செய்தார், தௌசீஃபுக்கு பாதி பாகிஸ்தானிய மற்றும் பாதி இந்திய இதயத்தை வழங்கினார், 72 மணி நேரத்திற்குப் பிறகு அவரது அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது - இந்த தனித்துவமான நிகழ்வு பாண்டுவால் நிறைவேறியது.

எங்கள் கடிகார வணிகத்திற்கு தனிப்பட்ட உதவி தேவைப்படும் போது, பாண்டு நாங்கள் விரும்பிய இடங்களை ஏற்பாடு செய்தார். பாண்டு ஒரு போதும் பதிலுக்கு எதையும் எதிர்பார்த்ததில்லை. அவர் ஒரு நண்பர், சிறந்த மற்றும் ஒப்பற்ற நபர். அவருடைய நட்பை நான் மிகவும் மதிக்கிறேன், அது கிடைத்தமைக்கு பெருமைப் படுகிறேன்.

டாக்டர் மேதா K பாண்டுரங்கா செட்டியை பாராட்ட பொதுமான உரிச்சொற்கள் இல்லை. அவர் ஒரு முன்மாதிரி, ஒரு ஊக்கமளிக்கும் மற்றும் நம்பகமான நண்பர்; பணிவு, நேர்மை மற்றும் ஒருமைப்பாடு கொண்ட தலைவர். அவர் கடல் போல ஆழமாகவும், வானத்தைப் போல உயரமாகவும், பூமியைப் போல நடைமுறையாகவும் இருந்தார்.

*மனைவி வசந்தாவுடன்.*



எழுத்தாளர் முன்னாள் RI தலைவர்.

# பள்ளி மாணவர்களுக்கு மேஜை, பெஞ்ச் வழங்க உதவிய சிங்கப்பூர் ரோட்டரி

ரஷீதா பகத்

1990-களின் பிற்பகுதியில், மத்தியப் பிரதேச மாநிலம், சோன்கட்ச் ரோட்டரி சங்கம், அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகள், தங்கள் பள்ளியில் சில அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்வதை உணர்ந்து கொண்டது. பாதுகாப்பான குடிநீர், சுத்தமான கழிப்பறைகள் மற்றும் பெஞ்சுகள் போன்ற அடிப்படை வசதிகள்கூட இந்தப் பள்ளிகளில் இல்லை.

இதன் விளைவு என்னவென்றால் மாணவர்களுக்கு ஆர்வம் குறைந்து போய் 5-ஆம் வகுப்பை எட்டும் முன்னரே அவர்கள் பள்ளிக்கு வருவது மெல்லமெல்ல நின்றுபோனது. இவர்களில் பலர் குழந்தைத் தொழிலாளர்களாக பணி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டனர். எனவே சோன்கட்ச் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அரசுப் பள்ளிகளில், RID 3040-க்கு உட்பட்ட பிற பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும் மாணவர்கள் பெஞ்சில் உட்கார்ந்து டெஸ்கில் எழுதுவதற்கான அடிப்படை வசதியை ஏற்படுத்த உறுதி மேற்கொண்டோம். மாணவர்கள் எவரும் தரையில் உட்கார்ந்து படிக்கக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். என்கிறார் சங்கத்தின் உறுப்பினரும் PDGயுமான டாக்டர் ஜமீன் ஹுசைன்.

25 ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் ரோட்டரி அறக்கட்டளை யிடமிருந்து பொருத்தமான மானியங்கள் மற்றும் உலகளாவிய மானியங்களைப் பெற்று அமெரிக்கா, ஆஸ்திரியா, ஜெர்மனி மற்றும் சிங்கப்பூரிலுள்ள ரோட்டரி சங்கங்களின் கூட்டாண்மையுடன் பள்ளிகளுக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வந்தோம். இந்த மானியங்களின் உதவியுடன் எங்கள் பகுதியில் உள்ள 1400-க்கும் மேலான பள்ளிகளில் அடிப்படை வசதிகள் செய்து தருவது, மாணவர்கள் படிக்க வசதியாக தளவாடங்களை வழங்குவது போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தோம். இவை தவிர பாதுகாப்பான குடிநீர் வழங்குவது, சுத்தமான கழிப்பறை தொகுதிகள் கட்டித் தருவது, அறிவியல் கூடங்கள் அமைத்துத்தருவது ஆகியவற்றிலும் கவனம் செலுத்தினோம் என்று அவர் கூறினார்.

*RC சிங்கப்பூர் உறுப்பினர் பீட்டர் புரோக் பள்ளி மாணவர்களுடன் சோன்கட்சில்.*





*PDG ஜமீன் ஹுசைன், ஷாஹுல் ஹமீது, RC சோன்கட்ச் தலைவர் தினேஷ் கார்பென்டர் மற்றும் பீட்டர் புரோக் ஆனந்த சொசைட்டி பள்ளியில்.*

மாணவர்கள் தரையில் அமர்ந்து கொண்டு குனிந்து கொண்டே பாடபுத்தகங்களை கவனிப்பதும், எழுதுவதுமான நிலையை மாற்றினோம். இதனால் அவர்கள் முதுகுத்தண்டுவட பிரச்னையிலிருந்து மீள முடிந்தது. இப்போதும் எதிர்காலத்திலும் அவர்கள் பெஞ்சில் நிமிர்ந்து உட்கார்ந்து பாடங்களை கவனிக்க முடியும். புத்தகங்களுக்கும் மாணவர்களின் கண்களுக்கும் இடையே 25 செ.மீ. இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொண்டோம். இதனால் அவர்கள் சிரமப்பட்டு எழுத்துகளை படிக்க வேண்டியதில்லை. மேலும் ஒளிவிலகல் பிரச்னையும் எழாது.

PDG ஹுசைன் மேலும் கூறுகையில், கடந்த சில வருடங்களாக சோன்கட்ச் ரோட்டரி சங்கம், சிங்கப்பூர் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து எழுத்தறி வின்மையை போக்க போராடி வருகிறது. சமீபத்தில் அவர்கள் உதவி மூலம் சோன்கட்ச், இந்தூர், உஜ்ஜைன், கார்கோன் நகரில் உள்ள பள்ளிகளுக்கு 1,300 செட் மேஜை, பெஞ்சுகளை நன்கொடையாக வழங்கியுள்ளோம். கோவிட் தொற்றுக்காலத்திலும் மருத்துவக் கருவிகள் வழங்க சர்வதேச மானிய உதவி மூலம் எங்களுக்கு உதவியளித்துள்ளனர்.

சமீபத்தில் DGND டாக்டர் ஷாகுல் ஹமீது தலைமையில் 6 ரோட்டேரியன்கள் அடங்கிய குழுவினர் சோன்கட்ச் பள்ளிக்குச் சென்று மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் ரோட்டேரியன் களை சந்தித்துப் பேசினர். அங்கு அரசு மருத்துவமனையில் சோன்கட்ச் ரோட்டரி சங்கம் மூலம் ஏற்படுத்தப்பட்ட ரோட்டரி வார்டையும் பார்வை யிட்டனர்.



நீர் ஆதாரங்களை பெருக்கும் விதமாக சிங்கப்பூர் ரோட்டரி சங்கம், 270-க்கும் மேலான மழை நீர் சேகரிப்பு அலகுகளை நிறுவ உதவியுள்ளது. மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்தும் சிங்கபூர் ரோட்டேரியன்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். இதன் மூலம் சமூகத்திற்கு நடைமுறையில் நிலையான பயனை அளிக்கும் என்று குறிப்பிட்டனர்.■

# உங்கள் கேள்விகளுக்கு கோர்டன் மெக்கினலி பதிலளிக்கிறார்

*ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக கோர்டன் மெக்கினலியின் வரவிருக்கும் ஆண்டைப் பற்றி நீங்கள் ஏதாவது கேட்டால், அவர் உடனடியாக உங்களைத் தடுத்து நிறுத்துவார். ''இது என் வருடத்தைப் பற்றியது அல்ல. இது ரோட்டரியின் ஆண்டுகளில் ஒன்றை பற்றியது என்று அவர் திருத்துகிறார். ''நான் தொடர்ச்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன், ஆண்டுகளை நான் தனிதனியாக பார்க்கவில்லை.''*



ஒரு அக்டோபர் நாளில், உலகெங்கிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்களிடமிருந்து சமூக ஊடகங்கள் வழியாக சேகரிக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க ரோட்டரியின் தகவல் தொடர்பு குழுவின் ஆறு உறுப்பினர்களுடன் மெக்கினலி (MAK'-ihn-al-ee என உச்சரிக்கப்படுகிறது) அமர்ந்தார். பூம் மைக்குகள், கேமராக்கள் மற்றும் லைட்களை ஒரு படக்குழு அமைக்க, அப்போது அவரின் விரைவான நகைச்சுவை உணர்வும், எளிதான கேலிப் பேச்சும், அறையை சிரிப்பால் நிரப்பியது. ஸ்காட்லாந்தின் ரோட்டரி கிளப் ஆஃப் சவுத் குயின்ஸ்பெரியின் உறுப்பினராக தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு, அவர் தனது தனித்துவமான பேச்சைப் பற்றி கேலி செய்தார்: ''ஸ்காட்டிஷ் உச்சரிப்பு இல்லாவிட்டாலும் நான் ஸ்காட்டிஷ் தான் என்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.''

மெக்கினலியின் ஸ்காட்டிஷ் பாரம்பரியம் அவரது அலுவலகத்தில் தெளிவாகத் தெரிகிறது, அங்கு ஸ்காட்டிஷ் கலைஞரான ஜான் லோரி மோரிசனின் பிரகாசமான வண்ணம் கொண்ட இயற்கை ஓவியம் ஒரு சுவரை அலங்கரிக்கிறது.

மெக்கினலி தனது 26வது வயதில் சவுத் குயின்ஸ்ஃபெரி சங்கத்தில் சேர்ந்தார். அவரும் அவரது மனைவி ஹீத்தரும் திருமணம் செய்து. எடின்பர்க்கிற்கு வெளியே உள்ள சமூகத்தில் வேரூன்ற விரும்பினர். அவர்கள் சந்தித்த ஒரு விவசாயி அவர்களை ஒரு ரோட்டரி சமூக நிகழ்வுக்கும் பின்னர் இரண்டு ரோட்டரி கூட்டங்களுக்கும் அழைத்தார், சிறிது காலத்திலே மெக்கினலி ரோட்டரி உறுப்பினருக்கான பாதையில் சென்றார். (ஹீதர் மெக்கினலியும் ஒரு ரோட்டேரியன், செல்கிர்க் ரோட்டரி சங்கத்தின் பார்டர்லேண்ட்ஸ் சாட்டிலைட் சங்கத்தை சேர்ந்தவர்.)

மன ஆரோக்கியத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட அவர் 2023–24 ரோட்டரி ஆண்டை பயன்படுத்த விரும்புகிறார். இது அவரது குடும்பத்தை நேரடியாகத் தொட்ட ஒரு பிரச்சினை மற்றும் பெரும் பாலும் மறைத்து வைக்கப்படும்

பிரச்சினை. மெக்கினலி பைபோலர் UKன் தூதராக உள்ளார், இது நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கும் ஆதரவளிக்கும் ஒரு அமைப்பாகும். கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் உள்ள ரோட்டரி இன்டர்நேஷனல் சமீபத்தில் நாடு முழுவதும் ஆதரவு குழுக்களின் மிகவும் வலுவான வலையமைப்பை உருவாக்க உறுப்பினர்களின் திறன்களைக் கொண்டுவருவதற்காக நிறுவனத்துடன் ஒரு கூட்டாண் மையை அறிமுகப்படுத்தியது. “ரோட்டரி உறுப்பினர்களின் காசோலைகளை மட்டுமல்லாமல், அவர்களின் திறமைகளை பயன் படுத்துவதில் நான் பெரிய நம்பிக்கை கொண்டவன்'' என்று கூறுகிறார்.



**உங்கள் முக்கிய மதிப்புகள் என்ன, நீங்கள் எவ்வாறு வழிநடத்துகிறீர்கள் என்பதை அவை எவ்வாறு வடிவமைக்கின்றன?**

நடராஜன் சுந்தரேசன், RC கூத்தப்பாக்கம்

எனது முக்கிய மதிப்பை ஒரே வார்த்தையில் வெளிப்படுத்தலாம், அது ''கவனிப்பு''. தொழில் ரீதியாக ஒரு பல் மருத்துவராக, நான் பல ஆண்டுகளாக மக்களை கவனித்து வந்தேன். இது என் பெற்றோரால் எனக்குள் விதைக்கப்பட்ட ஒன்று. இது எங்கள் குழந்தைகளிடம் நாங்கள் புகுத்திய ஒன்று. பெரிய விஷயம் என்னவென்றால், அது எங்கள் பேரக்குழந்தைகளுக்குள் புகுத்தப்படுவதை இப்போது நான் காண்கிறேன். உலகம் அதிக அக்கறையான, கனிவான இடமாக இருந்தால், அது மிகவும் மகிழ்ச்சியான, அமைதியான இடமாகவும் இருக்கும் என்று நினைக்கிறேன். நாம் முன்னிறுத்தும் பிரச்சினைகளில் அமைதியும் ஒன்றாக காண நான் விரும்புகிறேன்.

**''தங்களின் தீப்பொறியை'' இழந்து விட்டதாகத் தோன்றும் ரோட்டரியின் உறுப்பினர்களை எவ்வாறு மீண்டும் ஒளிரச்செய்வது?**

ஜானின் மற்றும் பால் பிர்ட்விஸ்டில், RC குர்ன்சி, சேனல் தீவுகள்

ஜானினையும் பாலையும் எனக்கு நன்றாகத் தெரியும், அவர் களிடமிருந்து ஒரு கேள்வியைப் பெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. ரோட்டரியின் சில உறுப்பினர்களிடம் இழந்த தீப்பொறியை மீண்டும் தூண்டுவதற்கான வழி, ரோட்டரி சங்கத்தின் அனுபவம் எவ்வளவு நன்றாக இருக்க முடியுமோ அவ்வளவு சிறப்பாகவும் அனைவருக்கும் பொருந்துவதாகவும் இருப்பதை உறுதி செய்வதாகும். இது ஒரு அளவு அனைத்திற்கும் பொருந்தக்கூடிய வகை அல்ல. சில சங்கங்கள் ஒரு கன்ட்ரி கிளப்பில் சந்தித்து மதிய உணவில் 2.5 மணிநேரம் செலவிட விரும்புகிறது. மற்ற சங்கங்கள் சனிக்கிழமை காலை 45 நிமிடங்கள் காபி மற்றும் ஒரு பேகலுடன் சந்தித்து பின்னர் வெளியே சென்று சேவை செய்ய விரும்புகின்றன.

இது அனைத்தும் சேவையைப் பொறுத்தது. நாம் ஒரு உறுப்பினர் அமைப்பு மற்றும் ஒரு சேவை அமைப்பு. நாம் சேவை செய்ய வேண்டும், ஏனென்றால் நாம் அதை அதிகமாக விரும்பு கிறோம் என்பதை தவிர, நம் சேவையை பார்க்க முடிவதால் பலர் நம்முடன் வந்து சேர விரும்புவதற்காகவும்.

**2023–24 காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ள ரோட்டரி என்ன உறுதியான திட்டங்களைக் கொண்டுள்ளது?**

அப்துர் ரஹ்மான், RC செகந்திராபாத், இந்தியா

இந்த நேரத்தில் நாங்கள் பணிபுரியும் பெரிய திட்டங்களில் ஒன்று உலகெங்கிலும் பல்வேறு இடங்களில் சதுப்புநிலங்களை நடவு செய்வதாகும், மேலும் பல திட்டங்கள் உள்ளன. ஆனால் ரோட்டரியால் மட்டும் காலநிலை மாற்ற பிரச்சனையை தீர்க்க முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்மால் செய்யக்கூடிய அளவில் வேலை செய்து, கால நிலை மாற்றத்தின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்பதை உறுதிப் படுத்த உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களை ஊக்குவிக்கவும், அவர்களுடன் வாதாடவும் வேண்டும்.

**ரோட்டரி சங்கத்தில் சேர அதிக ரோட்டராக்டர்களை நாம் எவ்வாறு ஊக்குவிக்கலாம்?**

டேல் கெர்ன்ஸ், RC நார்த் ஈஸ்ட், மேரிலாந்து

அவர்களை ரோட்டரி சங்கங் களுக்கு ரோட்டராக்டர்களாக கொண்டு வந்து, சங்கம் முன்னோக்கிச் செல்வதற்கு உதவ அவர்களை அனுமதிக்க

*பத்திரிக்கையாளர்களின் குழுவை ஒன்று திரட்டினால், அவர்களை சில கேள்விகளைக் கேட்க அனுமதிக்காமல் இருக்க முடியாது. ரோட்டரி இதழின் ஆசிரியர்கள் தெரிந்து கொள்ள விரும்பியது இங்கே:*

**உங்கள் தலைமையின் கருப்பொருள் பற்றி எங்களிடம் கூறுங்கள்.**

*உலகில் நம்பிக்கையை உருவாக்குவதல் என்பதே என் கருப்பொருள். எல்லாமே நம்பிக்கையுடன் தான் தொடங்கும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டவன். மக்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், அவர்களால் ஒருபோதும் முன்னேற முடியாது. இது செயலுக்கான அழைப்பு: உலகில் நம்பிக்கையை உருவாக்குங்கள்.*

**உங்கள் முன்னுரிமைகள் என்ன?**

*தொடர்ச்சியின் அடிப்படையில், பெண்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை நாங்கள் தொடர விரும்புகிறோம். மேலும், மெய்நிகர் பரிமாற்றங்களைச் செய்ய மக்களை ஊக்குவிக்கப் போகிறோம். அது அடித்தளத்தில் இருந்து அமைதியை கட்டியெழுப்ப செய்யும். இது போர்களை நிறுத்துவது பற்றியது அல்ல; இது போர்கள் ஆரம்பிப்பதை நிறுத்துவது பற்றியது. வரும் முன் காப்பதே சிறந்தது. நாம் கவனம் செலுத்தும் ஒவ்வொரு பகுதியும் அதைச் செய்வதற்கான திறனைக் கொண்டுள்ளது.*

*மூன்றாவது விஷயம் மனநல முன்முயற்சிகள். தொற்றுநோயிலிருந்து வெளியே வந்து, மோசமான மனநலத்துடன் போராடுபவர்கள் நிறைய பேர் உள்ளனர். இதுவே அடுத்த தொற்றுநோய் என்று நினைக்கிறேன். மோசமான மனநலம் பாதிக்கப்பட்ட நண்பர்களுடன் எனக்கு அனுபவம் உள்ளது. நாம் அனைவரும் சில சமயங்களில் மோசமான மன ஆரோக்கியத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். ரோட்டரி அந்த இடத்திற்குள் நுழை வதற்கும், நாம் எங்கு மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதைப் பற்றி பேசுவதற்கும் போதுமான அளவு பெரியதாகவும், தைரியமாகவும் இருக்க வேண்டும். மிக அடிப்படையான மட்டத்தில், இது மனநலம் பற்றிய உரையாடலைத் திறந்து மக்களுக்குத் தேவைப்படும் எந்தவொரு தொழில்முறை உதவியையும் அணுகுவதற்கு உதவுகிறது, பின்னர் அந்த பயணத்தின் மூலம் அவர்களுக்கு ஆதரவளிக்கிறது.*

*என் தம்பியை தற்கொலைக்கு இழந்தேன். அது இன்னும் எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காக நான் இதை பகிரவில்லை, ஆனால் இதுபோன்ற விஷயங்களால் அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மக்களுக்கு உணர்த்தவே இதைப் பகிர்கிறேன். நாம் அதை கார்பெட் கீழ் பெருக்கி தள்ளமுடியாது. 1.4 மில்லியன் மக்களைக் கொண்ட உலகளாவிய வலையமைப்பாக உள்ள நமக்கு, அதைத் தடையற்றதாகவும், களங்கமற்றதாகவும் மாற்றி ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.*

**நீங்கள் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகவும் பணியாற்றியுள்ளீர்கள். அந்த அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?**

*ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கும் வெவ்வேறு படுக்கைகளில் எப்படி தூங்குவது என்று கற்றுக்கொண்டேன் - அந்த ஆண்டில் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தைச் சுற்றி நான் நிறைய பயணம் செய்தேன். ரோட்டரி சங்கங்கள் அனைத்தும் வித்தியாசமானவை என்பதையும், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு ஆர்வம் இருப்பதையும் நான் அறிந்தேன். எல்லோரும் என்னைப் போல உணர்ச்சிவசப்படுவதில்லை - சில சமயங்களில் நான் ஒரு வைராக்கியம் கொண்டவனாக உணர்கிறேன். ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ இருக்கிறது. நாங்கள் உறுப்பினர்களை அழைத்து வந்து, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூற மாட்டோம். மாறாக, உறுப்பினர்களை வரவழைத்து, ரோட்டரி அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்று அவர்களிடம் கேட்கிறோம்.*

**நீங்கள் ஒரு பல் மருத்துவர். நீங்கள் ஒரு பல்லாக இருந்தால், எந்த பல்லாக இருப்பீர்கள்?**

*நான் அநேகமாக ஒரு இன்சிசொர் பல்லாக இருப்பேன், ஏனென்றால் அது வேலை செய்யும் பற்களில் முதல் பல். நீங்கள் எதையும் நேராக வாய் உள்ளே தள்ள மாட்டீர்கள். நீங்கள் உங்கள் இன்சிசொர் மூலம் ஆரம்பித்து வழிநடத்து கிறீர்கள், நான் முன்னால் இருந்து வழிநடத்துகிறேன் என்று நினைக்க விரும்புகிறேன். அதே நேரம் ஒரு இன்சி சொர் மற்ற பல்லை விட முக்கியமானது அல்ல; உண்ணும் செயல்பாட்டில் அனைத்து பற்களும் சமமான முக்கியதத்துவம் கொண்டவையே.*

வேண்டும். நாம் வழிகாட்டுதல் பற்றி பேசுகிறோம். ஆனால் மாற்று வழிகாட்டுதலும் இதில் உள்ளது. ரோட்டராக்டர்களிடமிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ளலாம். ரோட்டராக்டர்களை ரோட்டரியில் ஒருங்கிணைப்பதில் உலகின் மிக வெற்றிகரமான இடங்களில் ஒன்று ஹாங்காங்கில் உள்ளது. அங்கே ரோட்ராக்டிலிருந்து ரோட்டரிக்கு தடையின்றி நகர்கிறார்கள். இதன் விளைவு, அவர்களிடம் பிரிவு என்பதே இல்லை. ரோட்டராக்ட் மற்றும் ரோட்டரியை ஒருங்கிணைக்கும் அற்புதமான வழி அவர்களிடம் உள்ளது.

**எந்த இளைஞர் திட்டங்கள் உங்களுக்கு முக்கியமானவை?**

லிண்டி பீட்டி, RC பென் வேலி, கலிபோர்னியா

நான் RYLA Rotary Youth Leadership Awards-ன் சிறந்த ரசிகன். எங்கள் பகுதியில் மிகவும் வெற்றி கரமான RYLA-க்களை நாங்கள் பார்த்திருக்கிறோம். RYLA அனுபவத்திற்கு திறன் கொண்ட உயர்நிலைப் பள்ளி மாணவரை நீங்கள் எடுத்துக் கொண்டால், நிகழக்கூடிய மாற்றம் அற்புதமானது. சில சமயங்களில் RYLA அனுபவத் திற்குச் செல்லும் அமைதியான, உள்முகமான இளம் மாணவர்கள், அதன் முடிவில், மலர்கிறார்கள். RYLA அனுபவத்திற்கு திறன் கொண்டவர்களை நாம் அனுப்புவது முக்கியம் – வெற்றியாளர்களை அல்ல, ஏனென்றால் அவர்கள் எப்படியும் உயரப் பறக்கப் போகிறார்கள். நாம் உருவாக்கக்கூடிய திறன் கொண்டவர்கள் தான் நமக்கு தேவை.

நான் ரோட்டரி யூத் எக்ஸ்சேஞ்சில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன். யூத் எக்ஸ்சேஞ் திட்டத்தை மீண்டும் தொடங்கும் நிலையில் நாம் இருக்கிறோம் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த சில வாரங்களாக, வாழ்க்கையை மாற்றும் அனுபவத்திற்கு இளைஞர்கள் உலகம் முழுவதும் பறந்து செல்வதை நான் பார்த்தேன். இது மிகவும் அமைதியான உலகத்தை உருவாக்கும் பிரச்சினைக்கு மீண்டும் வருகிறது.

**ரோட்டரி தொடர்ந்து புதிய கூட்டாண்மைகளை உருவாக்கி புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது. ஒரு தலைவர் மற்றொருவரிடமிருந்து பதவியேற்க தொடர்ச்சியை எவ்வாறு உறுதி செய்வது?**

மரிசா டி லூனா, RC ஸ்வீட்வாட்டர் சான் டியாகோ, கலிபோர்னியா

தொடர்ந்து முன்னேறும் செயல்முறைகளை செய்ய, நாம் வெவ்வேறு திட்டங்களையும் வெவ்வேறு முயற்சிகளையும் நோக்க வேண்டும், ஏனென்றால் எந்த நேரத்திலும், வெவ்வேறு தேவைகள் மற்றும் வெவ்வேறு கோரிக்கைகள் நம்மீது வைக்கப்படுகின்றன. எனவே இரண்டும் ஒன்றுக்கொன்று பிரத்தியேகமானவை என்று நான் நினைக்கவில்லை.

**ஒரு அமைப்பாக ரோட்டரியில் முழுமையாக உணரப்படாத மிகப்பெரிய திறனாக நீங்கள் பார்ப்பது என்ன?**

கிளாடியா அரிஸ்மெண்டி, RC ஹெர்மோசில்லோ மிலினியோ, மெக்சிகோ

தொற்றுநோய்களின் போது தன்னார்வத் தொண்டில் பெரும் அதிகரிப்பைக் கண்டோம். அந்த மக்களுடன் தொடர்பு கொண்டு, ரோட்டரி மூலம் தன்னார்வத் தொண்டு செய்ய அவர்களை ஊக்குவிக்கவும் நமக்கு ஒரு சிறந்த வாய்ப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன். மற்றவர்களை கவனித்துக்கொள்வது ஒவ்வொருவரின் இயல்பிலும் இருப்பதாக நான் நம்புகிறேன். நம்மால் அதை மக்களிடமிருந்து வெளியே கொண்டு வர முடிந்தால், தொற்றுநோய்களின் போது நாம் கண்ட அக்கறையின் உணர்வை நம்மால் உருவாக்க முடிந்தால், என்ன ஒரு அற்புதமான மரபாக அது இருக்கும்.உலகெங்கிலும் சுமார் 6.5 மில்லியன் மக்கள் கோவிட் நோயால் இறந்துள்ளனர், எனவே அவர்களின் இறப்பு வீணாகக்கூடாது. அந்தக் காலக்கட்டத்தில் தன்னார்வ உணர்வை வெளிப்படுத்திய மக்களுடன் நாம் இணைந்தால், நாம் கண்டிப்பாக சாதிக்கலாம்.

படங்கள்: கெவின் சேர்னா

ரோட்டரியிலிருந்து நகலாக்கப்பட்டது.

---

# பரெய்லியில் நல ATM




RC பரெய்லி ஹைட்ஸ், RID 3110, பரெய்லி அருகில் உள்ள பித்ரிசய்ன்பூரில் இருக்கும் சமூக நல மையத்தில் ஒரு “நல ATM”ஐ நிறுவியது. PDGகள் ரவி பிரகாஷ் அகர்வால், தினேஷ் கோயல், வினய் கிருஷ்ணன் முன்னிலையில் மாவட்ட நீதிபதி சிவகாந்த் த்விவேதி இதைத் தொடங்கிவைத்தார்.

இந்துஸ்தான் ஆன்ட்டிபயாடிக்ஸ் தயாரித்துள்ள இந்த டிஜிட்டல் இயந்திரம், ரத்த அழுத்தம், குளுக்கோஸ், உடல் வெப்பநிலை, நாடித் துடிப்பு, SPO2, ஆக்சிஜன் செறிவூட்டல், உடல் நிறை குறியீட்டெண், சதை/எலும்பு நிறை மற்றும் கண் பார்வை போன்ற அவசியப் பரிசோதனைகள் உள்ளிட்ட ஒருவருடைய நலனைப் பற்றிய ஒட்டுமொத்தச் சுருக்கத்தை வழங்குகிறது. இதனால் மலேரியா, டெங்கு, கோவிட், டைஃபாய்டைக் கண்டறியவும் இயலும்.

இதில் மக்கள் தங்களுடைய நலனைப்பற்றி விரைவாகத் தெரிந்துகொள்ளலாம். நலப் பதிவுகள் மேகச் சேவையகத்தில் சேமிக்கப்படுகின்றன, இவற்றை மருத்துவர்கள் எளிதில் அணுகலாம்.■

Rotary PEOPLE OF ACTION

# பழங்குடியினர் நலனுக்காக சேவையாற்றும் நாக்பூர் ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்




*ரித்திகா சிங்வி, RC நாக்பூர் விஷன் தலைவர் ஷிவானி சுலே மற்றும் சுவாதி பெல்கடே கிராம பெண்களுக்கு புடவைகள் அளிக்கின்றனர்.*

RID 3030-க்கு உட்பட்ட நாக்பூர் விஷன் ரோட்டரி சங்கம், உள்ளூர் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து, நாக்பூரிலிருந்து 300 கி.மீ. தொலைவில், சத்புரா மலைத் தொடர்பகுதியில் மேல்காட் கிராமத்தில் அறுவை சிகிச்சைகளை உள்ளடக்கிய சேவைத் திட்டங்களை மேற்கொள்ள ஆலோசனை பெற்ற போது, சங்கத்தின் தலைவரும், கண் அறுவை சிகிச்சை நிபுணருமான ஷிவானி சுலே அதற்கான வாய்ப்பை பெற்றார்.

மகாராஷ்டிரத்தின் இந்த பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர் மிகவும் பின்தங்கியவர்கள். இங்குள்ள குழந்தைகளிடம் ஊட்டச்சத்து குறை பாடு உள்ளது. மேலும் தாய்-சேய் இறப்பு விகிதமும் அதிகமாக உள்ளது. சங்கத்தின் உறுப்பினரும் கண் மருத்துவருமான ராஜேஷ் சிங்வி, மருத்துவ தம்பதிகளான Dr கவிதா மற்றும் ஆஷிஷ் சதவ் ஆகியோருடன் இணைந்து MAHAN அறக்கட்டளை என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தை உருவாக்கி பழங்குடியின மக்களின் நல்வாழ்வுக்காக செயலாற்றி வருகிறார். மருத்துவ வசதி வாய்ப்புகள் குறைவாக உள்ள இப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியின நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள அறக்கட்டளையுடன் இணைந்து ஒரு கூட்டு திட்டத்தை நிறைவேற்றலாம் என்று அவர், சங்கத் தலைவருக்கு பரிந்துரைத்ததாக Dr சுலே நினைவு கூர்ந்தார். நான் 2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் சங்கத்தின் தலைவரானதும் அப்பகுதியில் அறுவை சிகிச்சையுடன் கூடிய ஒரு மெகா மருத்துவ முகாம் நடத்த திட்டமிட்டேன். அந்த இடத்தை 6 மணி நேர பயணத்தில் அடைய முடியும் என்றார்.



இரண்டு மருத்துவர்களும் மேல்காட்டில் உள்ள நான்கு கிராமங்களை தத்தெடுத்து சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கிராமத்தில் அறுவை சிகிச்சைக்கான வசதி களுடன் ஒரு மருத்துவ கிளினிக்கை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், தையல் போடுதல், தீக்காயங்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற சின்னச் சின்ன மருத்துவ நடைமுறைகளை மட்டுமே மேற்கொள்ள முடிந்தது. இங்குள்ள பழங்குடியினர் புகையிலை உள்ளிட்ட போதைப் பொருள்களுக்கு அடிமையாக இருந்ததால் அவர்களை அதிலிருந்து மீட்பதற்கான நடவடிக் கைகளையும் அறக்கட்டளை ஈடுபட்டு வந்தது.

அவ்வப்போது Dr ராஜேஷ் சிங்வி மற்றும் அவரது நண்பர்கள் சில அறுவை சிகிச்சைகளை செய்து வந்த போதிலும், கிராம மக்களுக்காக ரோட்டரி ஒரு மெகா அறுவை சிகிச்சை முகாமை நடத்த வேண்டும் என்று யோசனை கூறினார். கடந்த ஜனவரி 27-ஆம் தேதி லதா மங்கேஷ்கர் மருத்துவமனையிலிருந்து மருத்துவர்களும் மற்றும் சிலரும் ரோட்டேரியன்கள் நடத்தும் மருத்துவ முகாமுக்கு வந்து இறங்கினர். திட்டச் செலவு சுமார் ரூ.2 லட்சம். இதில் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களுக்கு தேவையான ரூ.1 லட்சத்தை ஒரு உறுப்பினர் நன்கொடையாக வழங்கினார். மீதித் தொகை இதர சங்க உறுப்பினர்கள் மூலம் பெறப்பட்டது.

ஜனவரி 27-ஆம் தேதி மருத்துவர்கள் குழுவினர் முகாமை அடைந்தவுடன் அங்கு ஒரு தாற்காலிக அறுவை சிகிச்சை அரங்கு அமைக்கப்பட்டது. முகாம் அருகே தங்குவதற்கு போதிய வசதிகள் இல்லாததால் 45 நிமிட பயணத்தில் உள்ள இடத்தில் இரு விருந்தினர் இல்லங்களில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களின் மருத்துவ இயக்குநரும் மகப்பேறு மருத்துவருமான டாக்டர் ரூபஸ்ரீ போயர், அவருக்கு தெரிந்த மகப்பேறு மருத்துவர்கள் சிலரை முகாமில் சேர்ந்துகொள்ளும்படி கூறியிருந்தார்.

இதையடுத்து அறுவை சிகிச்சை அரங்கு தயாரானது. சங்கத்தைச் சேர்ந்த நான்கு பேர் உள்பட 18 பேர் கொண்ட மருத்துவர்கள் முகாமில் 52 அறுவை சிகிச்சைகளை நடத்தினர். அவற்றில் 32 பெரிய அறுவை சிகிச்சைகள். ஒரே மருத்துவ முகாமில் 6 கருப்பை நீக்க அறுவைச் சிகிச்சைகள் நடந்தது சாதனையாகும். மஹன் அறக்கட்டளையைச் சேர்ந்த Dr ஆஷிஷ் மற்றும் கவிதா சடவ் குழுவினர் மருத்துவ உபகரணங்களை கொண்டு வருதிலும், இதர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதிலும் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து அறுவை சிகிச்சைக்கான நோயாளிகளை அடையாளம் காணபதிலும் முக்கிய பங்காற்றினர். மருத்துவ முகாமில் நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். ஆனாலும் அவர்கள் மனதில் நம்பிக்கை ஒளி இருந்ததை காண முடிந்த்து. மருத்துவக் குழுவினரும் அயராமல் பணியாற்றி இடைவெளியின்றி வெற்றிகரமாக அறுவை சிகிச்சை களை நடத்தி முடித்தனர் என்பதை

பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார் சுலே.

ஆனால், சங்க உறுப்பினர்கள் கிராமத்துக்கு குழந்தைகளுக்காக மருத்துவம் சாராத நிகழ்ச்சி களை நடத்தி மகிழ்ந்தனர். குழந்தைகளுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சங்க உறுப்பினர் சினேஹா, அவரது சார்பில் பெண்களுக்கு புடவைகளையும் குழந்தைகளுக்கு பைகளையும் வழங்கி திட்டத்தை நிறைவு செய்தார்.

குழந்தைகள் கபடி, கோ-கோ மற்றும் வாலிபால் விளையாட்டில் தங்களது திறமைகளை வெளிப் படுத்தி பார்வையாளர்களை பரவசப் படுத்தினர். இந்த நிகழ்ச்சிகளை சமூகசேவைக்கான இயக்குநர் சந்தீப் துராகர் ஒருங்கிணைத்தார். இத்திட்டத்திற்காக கடுமையாக உழைத்த சங்கத்தின் செயலர் ரிதிகா சிங்விக்கு சுலே நன்றி தெரிவித்தார். மேலும் மேல்காட் முகாம் வெற்றிக்கு தாராள மனப்பான்மையுடன் உதவிய உறுப்பினர்கள் ஆரெளனி வர்மா, பாஃர்னிபர்க் பாரூச்சா, ஸ்வாதி கெல்கடே, மதுமதி தார்வாட், சிராக் சிங்வி மற்றும் ஜெய்ஸ்ரீ


*கபடி விளையாடும் கிராமக் குழந்தைகள்.*


**MAHAN அறக்கட்டளையின் மருத்துவர்கள்.**


*விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகிறது.*









Dr *கவிதா சதவ் அறுவை சிகிச்சை முகாமில் கிராம மக்களிடம் உறையாற்றுகிறார்.*



*மருத்துவ முகாமில் ஒரு அறுவை சிகிச்சை.*

சாப்ரானி ஆகியோருக்கும் சுலே நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அடுத்து என்ன? என்று நான் சுலேவிடம் கேட்டேன். ஓ அதுவா நாங்கள் தொடர்ந்து இந்த பழங்குடியின கிராம மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறோம். ஒவ்வொரு முறையும் எங்கள் திட்டங்களை பெரிதாக்குவோம் என்று கூறினார். இன்னும் பல அறுவை சிகிச்சை முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளோம். மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் கண் அறுவை சிகிச்சை முகாமை நடத்த திட்டமிட்டுள்ளோம். சுமார் 80 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை நடத்தப்படும் என்றார்.

குழந்தைகள் விஷயத்திலும் அதிக கவனம் செலுத்த முடிவு செய்துள்ளோம். விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற குழந்தைகள் சிலர் டீ ஷர்ட்டுகள் இல்லாமல் தங்கள் முறை வந்த போது மற்றவர்களிடமிருந்து கடன் வாங்கி அணிந்து கொண்டனர். அடுத்த முறை விளையாட்டுப் போட்டிகள் நடக்கும்போது அவர்கள் அனைவருக்கு டீ ஷர்ட்டுகள் வழங்கப்படும். இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தினர் பழங்குடியின குழந்தைகளுக்கு சத்தான பானங்களை கொடுத்து உதவினர். இதுபோன்ற மேலும் சில திட்டங்களைச் செயல்படுத்த நாங்கள் விரும்புகிறோம் என்றார்.

குழந்தைகளுக்கு அவர்களுக்கு பிடித்தமான ஒன்றை கொடுக்க வேண்டும் என்ற பாடத்தை கற்றுக்கொண்டோம். உதாரணமாக நாங்கள் அவர்களுக்காக கிரிக்கெட் விளையாட்டு கிட், வாலிபால், கால்பந்து, கூடைப்பந்து உபகரணங்களை எடுத்துச் சென்றோம். ஆனால், அவர்களுக்கு பிடித்தமான விளையாட்டு கபடி மற்றும் வாலிபால் மட்டுமே என்பது தெரியவந்தது. அடுத்த முறை அதுபோன்ற விளையாட்டுகளில் நாங்கள் அதிகம் கவனம் செலுத்துவோம் என்று சுலே சுட்டிக் காட்டினார்.■

# வார்காரி குழந்தைகளுக்கு கல்வி

ஜெய்ஸ்ரீ

வார்காரி பக்தி இயக்கம் 13ம் நூற்றாண்டிலிருந்து மகாராஷ்டிராவில் இந்து கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. பந்தர்பூரில் உள்ள பழமையான கோவிலில் கிருஷ்ணருடன் அடையாளப்படுத்தப்பட்ட வித்தோபாவின் வழிபாடு இதில் அடங்கும். இந்து மாதமான ஆஷாதாவில் (ஜூன்-ஜூலை) ஏகாதசி நாளில் முடிவடையும் கோவிலுக்கான யாத்திரை (வாரி என குறிப்பிடப்படுகிறது) வார்காரிகளின் உச்ச மத நிகழ்வு ஆகும். மஹாராஷ்டிரா மற்றும் வட கர்நாடகா முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் ஏகாதசி நாளில் பந்தர்பூர் வித்தோபா கோவிலை அடைய ஆலந்தி (சந்த் தயானேஸ்வருடன் தொடர்புடையவர்) மற்றும் தேஹு (சந்த் துகாராமுடன்) இருந்து வார்காரிகளால் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் பல்லக்குடன் இணைந்து செல்கின்றனர்.

இந்த சமூகத்தின் குழந்தைகளும் சிறு வயதிலிருந்தே பாரம்பரியத்தைப் பின்பற்றும் வகையில் வளர்க்கப் படுகிறார்கள். சன்ஸ்தாக்களில் பஜனைகள், சங்கீதம் மற்றும் இசைக் கருவிகளை கற்றுக்கொள்வதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் முறையான கல்விக்காக உள்ளூர் ஜில்லா பரிஷத் பள்ளிகளில் படிக்கின்றனர். அவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக, புனேவைச் சேர்ந்த ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமான டோர்ஸ்டெப் ஸ்கூல், பள்ளி வளாகத்தில் பள்ளி நேரத்திற்கு பிறகு செயல்பாட்டு வாசிப்பு, எழுதுதல் மற்றும் எண்கணிதத்தில் வகுப்புகளை வழங்குகிறது.

டிசம்பரில் RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி, RID 3131, ஆலந்தியில் உள்ள 25 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்தது. இதன் மூலம் ஆசிரியர்கள், வார்காரி சமூகத்தைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு செயல்பாட்டு கல்வியறிவை வழங்குவார்கள். “எங்கள் சங்கத்தின் நீண்டகால நன்கொடையாளரும் நலம் விரும்பியுமான நிதின் கரியா, இந்த திட்டத்திற்காக எங்கள் அறக்கட்டளைக்கு ரூ.6 லட்சம் நன்கொடை அளித்துள்ளார்” என்று சங்க உறுப்பினர் சந்தேஷ் சாவந்த் கூறுகிறார்.

செயல்பாட்டு கல்வியறிவு வகுப்புகள் தவிர, அடிப்படை சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மாணவர்களுக்கான ஊடாடும்



*டோர்ஸ்டெப் ஸ்கூல் நிறுவனர் ரஜனி பரஞ்ச்பெ மற்றும் நிதின் கரியாவுடன் குழந்தைகள்.*

திறன்கள் ஆகியவற்றில் பாடங்களை கற்பிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தைகள் ஆறு மாதங்களில் 120 அமர்வுகளை மேற்கொள்வார்கள். அதற்குள் அவர்கள் மராத்தி வாசிப்பு, எழுதுதல் மற்றும் கூட்டல், கழித்தல், வகுத்தல் மற்றும் பெருக்கல் போன்ற அடிப்படை எண் செயல்பாடுகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பார்கள்,'' என்று அவர் கூறுகிறார். ஒவ்வொரு அமர்வும் 90 நிமிடங்கள் இருக்கும். "வகுப்புகள் தொடர்ந்து இருக்காது, ஏனென்றால் குழந்தைகள் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக திருவிழாக்கள் மற்றும் பிற சடங்குகளில் பங்கேற்க வேண்டும். அவர்கள் தங்கள் அன்றாட சடங்கு களுடன் சேர்த்து கல்வி கற்க வேண்டும், மேலும் அவர்களின் நாள் அதிகாலை 4 மணிக்கு தொடங்குகிறது,'' என்று சாவந்த் கூறுகிறார்.

கோவிட் தொற்றுநோய் மற்றும் அதன் பின்விளைவுகள் குழந்தைகளின் கற்றல் திறன்களை பாதித்துள்ளது. அவர்களில் பலர் பின்தங்கியும் மற்றும் கல்வியில் அக்கறையின்றியும் இருக்கின்றனர் என்று அவர் விளக்குகிறார். "எவ்வாறாயினும், ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட கவனத்தை வழங்குவதால், இந்த அமர்வுகளை அவர்கள் எதிர்நோக்கி இருக்கிறார்கள். இதை பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.'' சங்க உறுப்பினர்கள் அவ்வப்போது அமர்வுகளுக்குச் சென்று குழந்தைகளை வேடிக்கை யான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார்கள்.

ஆலந்தியில் தற்போது 9–14 வயதுடைய ஐம்பது மாணவர்கள் இந்த வகுப்புகளை பயின்று வருகின்றனர். சிறப்புப் பயிற்சி பெற்ற 14 ஆசிரியர்களால் கையாளப்படும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். கற்றல் தாக்கத்தை அதிகரிக்க ஃபிளாஷ் கார்டுகள் மற்றும் பிற கற்பித்தல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சர்வதேச கூட்டாளியான RC துவாய்-சுட், பிரான்ஸ்-இன் உதவியுடன் ஒரு GG மூலம் திட்டத்தை தொடர சங்கம் திட்டமிட்டுள்ளது. "நாங்கள் முன்பு அவர்களுடன் இணைந்து இரண்டு ஹாப்பி ஸ்கூல் திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம்,'' என்கிறார் சாவந்த்.

சங்கத்தலைவர் கென்னடி சாமுவேல், பிரிஜ் சேத்தி மற்றும் சங்கத்தின் எழுத்தறிவு குழு தலைவர் மோனா சாவந்த் ஆகியோர் இந்த திட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். குழந்தைகளுக்கு முழுமையான பாடங்களை வழங்குவதாலும், கல்வியில் அவர்களின் ஆர்வத்தைத் தக்கவைப்பதாலும் இந்த அமர்வுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று சாமுவேல் குறிப்பிடுகிறார்.■



வகுப்பு ஒன்றில் குழந்தைகள் இந்தியில் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள்.

# கோவில் வளாகத்தை சுத்தம் செய்த நாசிக் இன்டராக்டர்கள்



கோவில் வளாகத்தில் குப்பைகளை சேகரிக்கும் இன்டராக்டர்கள்.

இன்டராக்ட் கிளப் ஆஃப் விஸ்டம் ஹை இன்டர்நேஷனல் ஸ்கூல் மற்றும் ஜூனியர் கல்லூரியின் 15க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், RC நாசிக், RID 3030 உதவியுடன், நகரத்தில் உள்ள சோமேஷ்வர் கோவிலில் 25 பைகள் குப்பைகளை சேகரித்தனர். பின்னர் நாசிக் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பிரிவு மூலம் அந்த பைகள் அகற்றப்பட்டன.

இந்த கோவிலுக்கு தினமும் பல பக்தர்கள் வருகின்றனர், மேலும் முக்கிய இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தும், இந்த வளாகம் முழுவதும் குப்பைகள் எங்கும் குவிந்து கிடப்பதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது என்று RC நாசிக் உறுப்பினர் விநாயக் தியோதர் கூறினார். பின்னர் பக்தர்களுடன் உரையாடிய இன்டராக்டர்கள், குப்பைத் தொட்டிகளில் குப்பைகளை வீசுமாறு அவர்களை தூண்டினர்.■

# ரோட்டரி பொதுமக்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்

V முத்துகுமரன்

நீங்கள் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களை ரோட்டரியுடன் இணைத்துள்ளீர்களா முக்கியமாக, உங்கள் சங்க உறுப்பினர்கள் மற்றும் மாவட்டங்கள் முழுவதும் உள்ள மற்ற ரோட்டேரியன்களுடன் நீங்கள் இணைந்திருக்கிறீர்களா என்று RI வாரியத்தின் நிர்வாகக் குழுவின் தலைவர் மற்றும் RI இயக்குநர் எலிசபெத் உசோவிச், RID 3232-ன் டிஸ்கான் சர்வம்-இல் உரையாற்றும் போது கேட்டார்.

ரோட்டரியின் எதிர்காலம் DEI (பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்), சுயத்திற்கு மேலான சேவை, கூட்டுறவு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. "பொது தோற்றத்தை உருவாக்குவதன் ஒரு பகுதியாக நமக்குள்ளும் பொதுமக்களுடன் ஆழமான உறவுகளை உருவாக்க வேண்டும்,'' என்று அவர் கூறினார்.

ஏழு கவனம் செலுத்தும் பகுதிகள் தொடர்பாக, அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கார்ப்பரேட்டுகள் மற்றும் ரோட்டரி சங்கங்களுக்கு இடையேயான கூட்டாண்மையை எளிதாக்கும் வகையில் 130 ஸ்டால்களுடன் கூடிய ரோட்டரி திட்ட கண்காட்சியும் இந்த மாநாட்டில் நடைபெற்றது. "திட்ட கண்காட்சியின் தொடக்க விழாவின் எனது அனுபவத்தை வட அமெரிக்காவிற்கு கொண்டு செல்வேன், மேலும் எனது நாட்டில் உள்ள சங்கங்களில் நிலைத்தன்மை மற்றும் ஆரோக்கியம் பற்றிய செய்தியை பரப்புவேன்,'' என்று எலிசபெத் கூறினார்.

உறுப்பினர் வளர்ச்சி குறித்த தனது உரையில், RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி, RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸை மேற்கோள் காட்டி, "நம் உறுப்பினர்களின் சவுகரியம் மற்றும் கவனிப்பு, உறுப்பினர் களின் திருப்தியின் மிகப்பெரிய இயக்கி மற்றும் உறுப்பினர்களை அவர்களின் சங்கத்தில் ஈடுபட வைப்பதற்கான நம்மின் மிகவும் சக்தி வாய்ந்த கருவி. உறுப்பினர் அனுபவம், DEI கொள்கை, விரிவாக்கம், பங்கேற்பாளர்களின் ஈடுபாடு, அனைவருக்கும் ஏற்ற வகையில் நெகிழ்வான புதிய வடிவம் மற்றும் காரண அடிப்படையிலான சங்கங்களை பட்டயப்படுத்துவதன் மூலம் புதிய அனுபவங்களை வழங்குதல் ஆகியவை முன்னோக்கி செல்லும் வழி ஆகும் என்றார்.

**அடுத்த பெரிய கார்ப்பரேட் திட்டம்**

கூட்டத்தில் உரையாற்றிய RIDE அனிருதா ராய்சௌத்ரி, குறைந்து வரும் உறுப்பினர் எண்ணிகையை நிறுத்த, மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறு சங்கங்களை மாற்றியமைக்க வேண்டும் என்றார்.

போலியோவை ஒழிப்பதற்கான RIயின் வேட்கை நன்கு ஆவணப் படுத்தப்பட்டிருந்தாலும், 1994ல் போலியோவை ஒழித்ததால் எண்ணிக்கையில் செங்குத்தான சரிவை எதிர்கொண்டுள்ள மேற்கத்திய நாடுகளில் புதிய உறுப்பினர்களை ஈர்க்கும் அடுத்த பெரிய கார்ப்பரேட் திட்டத்தை நாம் அடையாளம் காண வேண்டும். அவர்கள்




DG N *நந்தகுமார் 'வாழும் கலை' நிறுவனத் தலைவர் ரவி சங்கரை நிகழ்ச்சியில் கௌரவப்படுத்துகிறார். உடன் (இடமிருந்து) சுமேதா,* RIDs *எலிசபெத் உசோவிச் மற்றும்* A S *வெங்கடேஷ், மற்றும்* RIDE *அனிருதா ராய்சௌத்ரி ஆகியோரும் உள்ளனர்.*




DG நந்தகுமார் மற்றும் சுமேதா RID உசோவிச் அவர்களை (இடமிருந்து) PDGs ISAK நாசர், G சந்திரமோகன், நிகழ்ச்சித் தலைவர் M அம்பலவாணன், RIDE அனிருதா ராய்சௌத்ரி மற்றும் PDG S முத்துபழநியப்பன் முன்னிலையில் கௌரவிக்கின்றனர்.

முக்கியமானவர்களாக உணர பெரிய உலகளாவிய திட்டம் ஒன்று தேவை.'' மேலும், உறுப்பினர் சேர்க்கை மிகவும் முக்கியமானது. ''உறுப்பினரைத் தக்கவைக்க புதிய கார்ப்பரேட், காரணம் சார்ந்த சங்கங்கள் மற்றும் இளம் உறுப்பினர்களை ஈர்ப்பதற்காக இ-சங்கங்களை நாங்கள் முயற்சி செய்கிறோம்'' என்று அவர் மேலும் கூறினார்.

மற்ற டிஸ்கான்களைப் போல் அல்லாமல், சர்வம் ஒரு நிலைத் தன்மை மற்றும் ஆரோக்கியம் கண்காட்சியை ரோட்டரி திட்ட கண்காட்சியுடன் நடத்துகிறது, இது அரசு மற்றும் பிற பங்குதாரர்களுடன் கூட்டாண்மைக்கு வழி வகுக்கும் என்று DG N நந்தகுமார் கூறினார். ''ரோட்டரி கவனம் செலுத்தும் பகுதிகள் மற்றும் சேவைகள் முழுவதும் பல திட்டங்களைச் செய்வதற்கு ஒரு பெரிய தன்னார்வத் தளத்தைக் கொண்ட ஆர்ட் ஆஃப் லிவிங் அறக்கட்டளையுடன் நாங்கள் கூட்டு சேருகிறோம்'' என்று அவர் கூறினார். ''தலைமைத்துவம் என்பது ஒரு தொடர்ச்சியான செயலாகும், மேலும் மாவட்ட ஆட்சியராக நான் மாவட்டத்திலுள்ள அனைத்து ரோட்டரியர்களுடனும் தீவிரமாக ஈடுபடுவேன்,'' என்று அவர் கூறினார். மார்ச் 19-ஆம் தேதி, இசையமைப்பாளர் A R ரஹ்மானின் சூஃபி இசைக் கச்சேரி நடத்தப்பட்டு அதன் மூலம் RID3232 நிதி திரட்டும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, வாழும் கலை குரு ரவிசங்கர் டிஸ்கானைத் திறந்து வைத்துப் பேசுகையில், சேவை என்பது மனித இயல்பின் மிக உயர்ந்த வெளிப்பாடு. உலகில் உள்ள மக்கள் ஏதாவது ஒரு சேவை அல்லது பிற பயனுள்ள செயல்களில் ஈடுபட்டால், வன்முறை மற்றும் மோதல்கள் மிகக் குறைவாக இருக்கும் என்றார். நம் உலகில் மனச்சோர்வு மற்றும் பதட்டம் அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டிய அவர், மனிதர்களாகிய நாம் பிறர் உயிரைப் பறித்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்றார். நம் சமூகங்களில் மன அழுத்தம் மற்றும் பதட்டங்கள் உள்ளன. ஆனால், வன்முறை இல்லாத உலகம், நோயற்ற உடல் மற்றும் குழப்பமில்லாத மனதுக்கு நாம் பாடுபட வேண்டும் என்றார்.

தற்சமயத்தில், இந்திய அரச ாங்கம் மன ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவில் ஏற்கனவே 108 பல்கலைக்கழகங்கள் மனநலம் குறித்த படிப்புகளை வழங்குகின்றன, அதே சமயம் அமெரிக்க காங்கிரஸ் தனது அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தியானம் குறித்த பட்டறையில் கலந்துகொள்ள பணம் செலுத்துகிறது என ரவிசங்கர் கூறினார்.

மனச்சோர்வு மற்றும் பதட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டுத் திட்டங்களுக்காக RID 3232 உடன் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அவர், ரோட்டரி சங்கங்கள் ''நதி மறுசீரமைப்பு திட்டங்களில் எங்கள் தன்னார் வலர்களுடன்'' சேர வேண்டும் என்றார். திருவண்ணாமலை யிலிருந்து வேலூர் வழியாகப் பாய்ந்து காஞ்சிபுரத்தில் உள்ள பாலாற்றில் கலக்கும் நாகநதி ஆற்றுக்குப் புத்துயிர் அளித்த ஆர்ட் ஆஃப் லிவிங் தன்னார்வலர்களின் பணியை அவர் மேற்கோள் காட்டினார். 20 ஆண்டுகளுக்கு முன்பு முற்றிலும் வறண்டு போயிருந்தது, ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மக்களின் ஒத்துழைப்புடன் ஆண்டு முழுவதும் பாயும் நதியாக மாற்றினோம்.

ரோட்டரி திட்டங்களுக்கான CSR மானியங்கள் குறித்து PDG R கணபதி அவர்களால் நடத்தப்பட்ட ஒரு குழு விவாதத்தில், தொழில்துறையினர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை வர்த்தக நிறுவனங்களுடன் இணைந்து செயல்புரியுமாறு வலியுறுத்தினர். ரோட்டரி மற்றும் தொழில்துறை இணைந்து பணியாற்ற அழைப்பு விடுத்தவர்களின் குழுவில் உள்ளவர்கள் – கமல் பாலி, MD வோல்வோ இந்தியா; P பிரதீப் குமார், தலைவர், கர்நாடகா வங்கி; M முரளி, MD ஸ்ரீராம் பிராபர்டீஸ்; மற்றும் V நாகப்பன், தலைவர், ஹிந்துஸ்தான் சேம்பர் ஆஃப் காமர்ஸ்

- கடந்த ஆண்டு மட்டும் ரூ.25,000 கோடி பயன்படுத்தப்படாத CSR தொகை இருந்தது. இது முக்கியமாக தொழில்துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு இடையே இணைந்த செயல்பாடு இல்லாததால் ஏற்பட்டது. எனவே, தொடர்ந்து நெட்வொர்க்கிங் தேவை என்றனர்.

### நிலைத்தன்மை, ஆரோக்கியம்

ரோட்டரி சங்கங்கள் தமிழ்நாட்டின் 38 வருவாய் மாவட்டங்களில் உள்ள மாவட்ட வன அலுவலர்களுடன் (DFOs) கைகோர்த்து நர்சரிகள் மற்றும் பூர்வீக மரக்கன்றுகளை வளர்த்து தமிழ்நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் பசுமை படர்வை 23.7 சதவீதத்தில் இருந்து தேசிய சராசரியான 33 சதவீதமாக உயர்த்தி அதன் கிரீன் TN மிஷனுக்கு உதவவேண்டும் என்று சுற்றுச்சூழல் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ வேண்டுகோள் விடுத்தார். முதல் ஆண்டில் மாநிலம் முழுவதும் 2.8 கோடி மரங்களை நட்டுள்ளோம் என்றார்.

உடல்நலம், ஆரோக்கியம் மற்றும் நிலைத்தன்மை குறித்த சர்வம் எக்ஸ்போவில் உரையாற்றிய அவர், கடந்த ஆண்டு செப்டம்பரில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆதரவுடன் மெகா நிலையான்மை கண்காட்சியை நடத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு என்று நினைவு கூர்ந்தார். அந்த கண்காட்சியில் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகளை ஊக்குவிக்கும் 200 ஸ்டால்கள் அமைக்கப்பட்டன. "2018-ஆம் ஆண்டில் 14 வகையான பிளாஸ்டிக்குகளை தடை செய்த முதல் மாநிலமாக தமிழகம் இருந்தது, சில ஆண்டுகளுக்குப் பிறகு மற்ற மாநிலங்களும் இதைத் பின்பற்றின" என்று அவர் கூறினார்.

ஐந்தாண்டுகளில் சுமார் 100 சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பது மற்றும் புதுப்பிக்கக்கூடிய பசுமை ஆற்றலை, நாட்டிலேயே அதிகபட்சமான 51 சதவீதத்தில் இருந்து அடுத்த சில ஆண்டுகளில் 60 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்த்துவதற்கான இலக்குகளை T N சதுப்புநிலம் மற்றும் கால



RID மகேஷ் கோட்பாகியுடன் DG நந்தகுமார் மற்றும் சுமேதா.

நிலை மாற்ற இயக்கங்கள் கொண்டுள்ளன. சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தியில் நமது மாநிலம் முன்னணியில் உள்ளது. காடுகள் நமது நுரையீரல் என்றால், ஈரநிலங்கள் நமது சிறுநீரகங்கள், அவை மாசுபடுத்திகளை வடிகட்டி, கார்பனை சரிசெய்து சுற்றுச்சூழலை மீட்டெடுக்கின்றன" என்று சாஹூ விளக்கினார். சென்னையிலுள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை மீட்டமைத்த பிறகு, வாக்கர்ஸ் டிராக்கைக் கொண்ட சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கப்பட்டது, "ஒவ்வொரு மாதமும் முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோர் உட்பட சுமார் 15,000 பேர் சுத்தமான காற்றிற்காக இங்கு வருகிறார்கள்," என்று அவர் கூறினார்.

கோயம்புத்தூரில் உள்ள ஓடந்துறை கிராமத்தில் அப்போதைய ஊராட்சி மன்றத் தலைவர் R சண்முகம், வீடுகளுக்கு மின்சாரம் தயாரிக்க சமூக காற்றாலை நிறுவிய வெற்றிக் கதையை தொடர்ந்து, அதே முறையை 10 கிராமங்களில் தமிழக அரசு செயல் படுத்தி மாற்றியுள்ளது. கிராமம் இப்போது உபரி மின்சாரத்தை மாநில கட்டத்திற்கு விற்கிறது மற்றும் சூரிய சக்தியையும் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.



"மாதிரி கிராமங்களில், தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யப்படும், பிளாஸ்டிக் பயன்படுத்தப்படாது, சுற்றுச் சூழல் நட்பு வாழ்க்கை குறித்து குழந்தைகளுக்கு கற்பிக்கப்படும், மேலும் பசுமை ஆற்றல் மட்டுமே பயன்படுத்தப்படும்" என்று சாஹூ மேலும் கூறினார்.

டிஸ்கான் தலைவர் M அம்பலவாணன் கூறுகையில்,



DG *நந்தகுமார்,* Dr M R *ராஜசேகருக்கு விருது வழங்குகிறார்.*
*உடன்* Dr *சஞ்சய் கந்தசாமி அவர்களும் உள்ளார்.*



**இடமிருந்து:** DG *நந்தகுமார்,* PDG S *கிருஷ்ணசாமி,* RIDE *அனிருதா ராய்சௌத்ரி மற்றும்* DGE *ரவி ராமன்.*

முதல் முறையாக ஒரு ரோட்டரி கண்காட்சி பொதுமக்களுக்கு திறக்கப்பட்டுள்ளது. ஆனால் எட்டு சங்கங்கள் மட்டுமே தங்கள் திட்டங்களைக் காட்சிப்படுத்துகின்றன. அடுத்த ஆண்டு முதல், குறைந்தபட்சம் 100 சங்கங்கள் தங்கள் ஸ்டால்களை வைக்க வேண்டும்,'' என்றார். DG நந்தகுமார், மக்களின் மனநிலையை மாற்ற, நிலைத்தன்மை பற்றிய செய்தியை பரப்ப வேண்டும் என்று ரோட்டேரியன்களை வலியுறுத்தினார்.

அசோக் லேலண்டின் மூத்த துணைத் தலைவர் கிருஷ்ணன் சடகோபன், சூரிய ஒளி, காற்று மற்றும் எத்தனால் கலவை போன்ற சுத்தமான, பசுமையான புதுப்பிக்கத்தக்க பொருட்கள் மூலம் இந்தியாவின் மின் கட்டமைப்பை சீர் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். காலநிலை மாற்றத்தால் பூமி வெப்பமடைவதால், அதன் தீங்கான தாக்கங்கள் சமூகங்களில் உணரப்படும். பசுமை ஹைட்ரஜன் இயந்திரம் மற்றும் உயிரி எரிபொருள் போன்ற பல கண்டுபிடிப்புகள் நாம் எளிதாக வாழ்வதற்குத் தேவை. புதைபடிவமற்ற ஆற்றலுக்கான அணுகல் பற்றி இந்திய அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளதால் பல முயற்சிகளை எடுத்து வருகிறது என்று அவர் மேலும் கூறினார். சர்வம் எக்ஸ்போ தலைவர் ஜெய்சங்கர் உன்னிதன் பங்கேற்பாளர்களை வரவேற்றார்.

இந்தியாவின் முதல் வெற்றிகரமான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மற்றும் இதர முக்கியமான, அதிக ஆபத்துள்ள அறுவை சிகிச்சைகளுக்கான சிறப்புமிக்க சேவை விருதைப் பெற்ற மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் Dr M R ராஜசேகர், ரோட்டரி விருதைப் பெறுவதில் நான் பெருமைப்படுகிறேன், உண்மையில் இதுவே நான் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ததற்கான முதல் பொது அங்கீகாரம் என்றார். ரோட்டேரியரான தனது மனைவி டாக்டர் வசுதாவின் பங்களிப்பையும், தனது மகனின் ஆதரவையும், தன்னுடன் தங்கள் அறிவைப் பகிர்ந்து கொண்ட தனது ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்தார்.

அவர் 2,000-க்கும் மேற்பட்ட சிறுநீரக அறுவை சிகிச்சைகள், 650-க்கும் மேற்பட்ட கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் 700-க்கும் மேற்பட்ட லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சைகளை செய்துள்ளார்.

நோய்வாய்ப்பட்ட 20 மாத குழந்தை சஞ்சய் கந்தசாமி 1998-இல் டெல்லியில் உள்ள இந்திரபிரஸ்தா அப்பல்லோ மருத்துவமனையில் டாக்டர் ராஜசேகரால் வெற்றிகரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டதன் மூலம் மறுபிறப்பு பெற்றார். தற்போது, 25 வருட இடைவெளிக்குப் பிறகு அவர் டாக்டராகி, ரோட்டரி மேடையை டாக்டர் ராஜசேகருடன் பகிர்ந்து கொண்டார், அங்கே இருவருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

ரோட்டரியின் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் பின்னணிப் பாடகி K S சித்ரா மற்றும் A P மெட்டெக் ஜோன்னின் தலைமை நிர்வாக அதிகாரி ஜிதேந்திர ஷர்மா ஆகியோருக்கு வழங்கப்பட்டது. திரைப்பட தயாரிப்பாளரும் நடிகையுமான சுஹாசினி மணிரத்னம் உலகளாவிய வளர்ச்சி நோக்கங்களை பூர்த்தி செய்ய 50-க்கும் மேற்பட்ட நிபுணர்களுடன் நிலையான சமூக மாற்றத்தை நோக்கி உழைத்ததற்காக ஃபீட்பேக் அறக்கட்டளையின் CEO அஜய் சின்ஹாவுக்கு குறிப்பிடத்தக்க சாதனையாளர் விருதை வழங்கினார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

விளம்பரம்



**Pawan & Prachi Agarwal**
District Governor & First Lady

# District 3110

## Rotary Youth Leadership Award (RYLA)






## CSR Projects

**PROJECT 1 :** Under the 9th CSR Project of the District, the corporate donor contributed Rs 47.77 Lacs towards the surgeries of 35 children suffering from Congenital Heart Disease (CHD). These surgeries will be performed on the needy children from economically weaker section of society from 26 cities of our District 3110 at Shri Sathya Sai Sanjeevani Hospital, Palwal (Haryana).

**PROJECT 2 :** Under the 10th CSR Project of the District, the M/S Kashi Vishwanath Textile Mills (P) Ltd. contributed Rs 20.52 Lacs towards the surgeries of 15 children suffering from Congenital Heart Disease (CHD). These surgeries will be performed on the needy children satisfying following criteria, at Shri Sathya Sai Sanjeevani Hospital, Palwal (Haryana) :

a) Children from a family of Armed Forces Personnel (including BSF, CISF and CRPF)
b) Children from Indian Border Areas Cities (India-Pakistan Border, India-China Border)
c) Children of Uttarakhand State.




## TRF Symposium (Zone 6) at Kathmandu






Do follow us: @Rotary3110

## Inauguration of 4 CSR Projects

**Inauguration of 4 CSR Projects worth Rs 1.57 Crores by RID A.S. Venkatesh at Kashipur**









CATARACT OPERATION


WOOLLEN CLOTH DISTRIBUTION


BLANKETS DISTRIBUTION


FOOD DISTRIBUTION


BLOOD DONATION CAMP


BREAST CANCER AWARENESS PROGRAM

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புற கர்ப்பிணிகளுக்கு பிரசவத்துக்கு முந்தைய சுகாதாரம்

## கிரண் ஜெஹரா

மகாராஷ்டிர மாநிலம், சிந்தல்சி வாடி கிராமத்தில், RID 3131 மாவட்டம், பன்வெல் எலைட் ரோட்டரி சங்கம் நடத்திய பிரசவத்திற்கு முந்தைய முகாம்களில் ஆதிவாசி கர்ப்பிணிப் பெண்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட இரும்புச்சத்து கொண்ட ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளை (ரத்த சோகையை தடுக்கும் வைட்டமின் பி மாத்திரைகள்) சாப்பிடாமல் தூக்கி எறிந்தது அதிர்ச்சி அளித்தது. அந்த மாத்திரையை சாப்பிட்டால் பிறக்கும் குழந்தையின் எடை அதிகரிக்கும், பிரசவம் சுகப் பிரசவமாக இருக்காது என்று அவர்கள் நம்பியது தான் இதற்கு காரணம். மேலும் அறுவை சிகிச்சை மூலம் பிறக்கும் குழந்தைகள் பலவீனமாகவும், சிறு குறைகளுடன் பிறக்கலாம் என்ற பயமும் இதற்கு காரணம் என்கிறார் சங்கத்தலைவர் சுவாதி லிகிடே.

மும்பைக்கு அருகே 13 கிராமங் களில் குழந்தைகள் உடல்நலன் தொடர்பாக சங்கம் முகாம்கள் நடத்திய போது கிடைத்த தகவல்கள் எங்களுக்கு தடுமாற்றத்தை ஏற்படுத் தியது. 12 வயதுக்குட்பட்ட 1,000 குழந்தைகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அந்த குழந்தை களுக்கு ஹீமோகுளோபின் குறைபாடு இருப்பது தெரியவந்தது. சங்கத்தின் தலைவர் குழந்தை மருத்துவர் என்பதால் மேலும் ஆராய்ச்சி செய்த போது இதற்கு புழுக்கள் இருப்பதே முக்கிய காரணம் என்பது தெரியவந்தது. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துபோனதால் குழந்தைகள் பலவீனமாக இருப்பதும் கண்டறியப்பட்டது. இதையடுத்து 1,500 குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவத்துக்கு முந்தைய மருத்துவ பராமரிப்பு முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது. முகாமில் 90 சதவீத கர்ப்பிணிகளுக்கு இரத்த சோகை நோய் இருப்பது தெரிய வந்தது. இதற்காக அவர்களுக்கு இரண்டு மாத்த்திற்கு தேவையான இரும்புச்சத்து கொண்ட ஃபோலிக் ஆசிட் (இரத்த சோகையை தடுக்கும் வைட்டமின் பி மாத்திரைகள்) மாத்திரைகள் வழங்கப்பட்டன. ஆனாலும், எந்த முன்னேற்றமும் இல்லை. அப்போதுதான் அவர்கள் அந்த மாத்திரைகளை சாப்பிடாமல் தூக்கி எறிந்தது தெரியவந்தது.

ஆஷா பணியாளர்கள் இந்த கர்ப்பிணிப் பெண்கள் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்களுக்குச் சென்று

*இரும்புச்சத்து கொண்ட ஃபோலிக் ஆசிட் மாத்திரைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வு முகாம்.*





RC பன்வெல் எலைட் அளித்த நோட்டுபுத்தகங்களுடன் பள்ளி குழந்தைகள்.

உடலை பரிசோதனை செய்து கொள்ளுமாறு ஊக்கப்படுத்தினார். இரும்புச்சத்து கொண்ட ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளை சாப்பிட வேண்டியதன் அவசியத்தையும், அதை சாப்பிடாவிட்டால் ஏற்படும் பாதிப்புகளையும் விளக்கமாக எடுத்துக் கூறினார். ஒருசில பெண்கள் மட்டுமே வழிகாட்டு தலை பின்பற்றி பரிந்துரைக்கப்பட்ட மாத்திரைகளை எடுத்துக்கொள் கிறார்கள். ஆனால், அந்த கிராமத்தைச் சேர்ந்த வயதான பெண்கள் அவர்களை ஊக்கப்படுத்தாமல் தடுக்கிறார்கள். நாங்கள் அவர்களின் முயற்சியைத் தகர்க்க போராடி வருகிறோம். எங்களால் விழிப் புணர்வைத்தான் ஏற்படுத்த முடியும் என்றார் சுவாதி.

இரும்புச்சத்து கொண்ட ஃபோலிக் ஆசிட் மாத்திரைகளால் ஏற்படும் பயன்களை புரிந்துகொள்ள கர்ப்பிணிப் பெண்களுடன் நாங்கள் பேச்சு நடத்தினோம். இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளையும் அவர்களிடம் விரிவாக எடுத்துக் கூறினோம். அவர்கள் நம்புவது போல் அல்லாமல் குறைப் பிரசவம் ஏற்படாமல் தடுக்க இந்த மாத்திரைகள் உதவுவதையும் எடுத்துக் கூறினோம். இந்த இரும்புச் சத்து மாத்திரைகளை சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப் பதுடன், எலும்புருக்கி நோய் ஏற்படாமல் தடுப்பதுடன், காதுகேளாமை பிரச்னை ஏற்படாமலும் தடுக்கிறது என்று தெளிவுபடுத்தினோம்.

மெதுவாக, ஆனால் சீராக பெண்கள் இந்த மாத்திரைகளை சாப்பிடத் தொடங்கினர். இப்போது நாங்கள் RCC குழுவை உருவாக்கி வருகிறோம். இதன் மூலம் கிராமப்புற பெண்கள் சமூகத்தினர் சந்தித்து வரும் தனித்துவமான சவால்களை புரிந்து கொண்டு செயல்பட இது உதவும். கர்ப்பிணிப் பெண்களுக்கான வழக்கமான மருத்துவப் பரிசோதனை முகாம்கள், யோகா வகுப்புகள் நாங்கள் நடத்தி வருகிறோம்.

மேலும் 800 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு டைஃபாய்டு தடுப்பூசி போடும் நடவடிக்கையையும் சங்கம் மேற்கொண்டது. இதற்காக ரூ.56,000 செலவிடப்பட்டது. சமீபத்தில் 750 பெரியவர்களுக்கு ஹெபடிடிஸ் பி தடுப்பூசி ரூ.45,000 செலவில் போடப்பட்டுள்ளது. எங்கள் சங்கம் இதுவரை 132-க்கும் மேலான மருத்துவச் சேவை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார். ■




சங்கத்தலைவர் சுவாதி லிகிடே டைஃபாய்டு தடுப்பூசியை ஒரு குழந்தைக்கு அளிக்கிறார்.

# 50வது ஆண்டைக் கொண்டாடும் RC கொடைக்கானல்

ஜெய்ஸ்ரீ



கொடைக்கானல் ரோட்டரி சங்கம், RID 3000, தன்னுடைய பொன்விழாவை முன்னிட்டு இங்குள்ள 100 வயது அரசுப் பள்ளி ஒன்றில் ரோட்டரி கல்வி மையம் ஒன்றை அமைக்கிறது. இதன்மூலம் பல பள்ளிகளைச் சேர்ந்த நலிந்த பின்னணி கொண்ட மாணவர்களுக்குக் கூடுதல் பாடங்கள் வழங்கப்படும், இளைஞர்கள் போட்டித் தேர்வுகளைத் தன்னம்பிக்கையுடன் சந்திக்க வழிகாட்டப்படும். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மேம்பட்ட வேலை வாய்ப்புள்ள படிப்பைத் தேர்ந்தெடுக்க உதவும் பணி, வாழ்க்கை வழிகாட்டல் திட்டத்தையும் இந்தச் சங்கம் நடத்துகிறது.

இந்தச் சங்கத்தின் மைல்கல் ஆண்டைக் கொண்டாடும் வகையில் கால்பந்துப் போட்டி, சிலம்பப் போட்டி, வேறு பல போட்டிகள் நடத்தப்பட்டன. இவற்றில் 1,700க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றார்கள், 400க்கும் மேற்பட்டோர் பரிசுகளை வென்றார்கள்.

1973ல், பெரும்பாலும் மலைப்பகுதிகளில் குடியேறிய வெளிநாட்டவர்களைக் கொண்டு 18 உறுப்பினர்களுடன் தொடங்கிய இந்தச் சங்கத்தில் இப்போது 8 பெண் ரோட்டரியன்கள் உள்பட 54 உறுப்பினர்கள் உள்ளார்கள். கழிப்பறைத் தொகுதிகளைக் கட்டுதல், வகுப்பறை அமர் பொருட்களை வழங்குதல் உள்பட, பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இச்சங்கம் முதன்மைக் கவனம் செலுத்தி வருகிறது என்றார் சங்கத் தலைவர் MRPA கார்த்திகேயன். இந்த ஆண்டு, பொன்விழாவை முன்னிட்டு, “நாங்கள் தேவையுள்ள நோயாளிகளுக்கு ரூ.2 லட்சம் மதிப்புள்ள மருத்துவ உதவி, மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையும் வழங்கினோம்.” என்றார்.

இந்தச் சங்கம் 2015லிருந்து ஒவ்வோர் ஆண்டும் RYLA நிகழ்ச்சி நடத்தி வருகிறது. இந்த ஆண்டு மூன்று நாள் RYLA-ல் 60 மாணவர்கள் பங்கேற்றார்கள். பெருங்காடு

***கீழே:*** *சங்கத்தின் ஐம்பதாண்டு விழாவில் DG I ஜெரால்டு, PDG சாம் பாபு மற்றும் RC கோடைக்கானல் தலைவர் M R P A கார்த்திகேயன் மற்றும் சங்கத்தினர்.*





பள்ளிக் குழந்தைகளுக்கு பரிசு வழங்கப்படுகிறது.

என்ற பழங்குடியினக் கிராமத்தில் உள்ள ஆதரவற்றோர் இல்லம் ஒன்றை இந்தச் சங்கம் 2018லிருந்து ஆதரித்துவருகிறது. “அங்கு வசிக்கும் 27 குழந்தைகளுக்கு நாங்கள் மளிகைப் பொருட்கள், அடிப்படைத் தேவைப் பொருட்கள், ஆடைகளைத் தொடர்ந்து வழங்குகிறோம்” என்றார் கார்த்திகேயன். 2017ல் வளங்காவி கிராமத்துக்குச் சூரிய ஒளி விளக்குகளை இந்தச் சங்கம் வழங்கியதை அவர் நினைவுகூர்கிறார். “கொடைக்கானலில் இருந்து 40 மைல் தொலைவில் உள்ள இந்தப் பழங்குடியினக் குக்கிராமத்தில் வசதிகள் அவ்வளவாக இல்லை. நாங்கள் முதன்முறை அங்கு சென்ற போது, ஊரில் நிறைந்திருந்த இருளைக் கண்டு நாங்கள் திகைத்தோம், வீடுகளுக்குச் சூரிய ஒளி விளக்குகளைத் தரவேண்டும், அங்கு சூரிய ஒளித்தெரு விளக்குகளை நிறுவவேண்டும் என்று தீர்மானித்தோம்.”

இந்தச் சங்கம் 8 இன்டராக்ட் சங்கங்கள், 3 ரோட்டராக்ட் சங்கங்களைப் பதிவுசெய்துள்ளது. PDG சாம் பாபு இந்தச் சங்கத்தின் உறுப்பினர் ஆவார். ■



**இடமிருந்து:** *கோடை இன்டர்நேஷனல் பள்ளி தலைமை ஆசிரியர் கோரி ஸ்டிக்ஸ்ருட், DG I ஜெரால்டு சங்கத்தலைவர் கார்த்திகேயன் மற்றும் PDG சாம் பாபு ரோட்டரி கல்வி மையம் திறப்பு விழாவில்.*

# கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை: பெண்கள் கார் பேரணி

V முத்துகுமரன்

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட கார் பேரணி, அதன் நான்காவது பதிப்பை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் பயணத்துடன் நிறைவு செய்துள்ளது. 15 RI மாவட்டங்களில் உள்ள 45 இடங்களில் 150 சங்கங்களில் இருந்து சிறப்பான வரவேற்பைப் பெற்றதால், இந்த பயணம் மகிழ்ச்சிகரமாக இருந்தது" என்று RC சென்னை மெராக்கி, RID 3232-இன் பட்டயத்தலைவர் மற்றும் திட்டத்தலைவர் சிவபாலா ராஜேந்திரன் கூறுகிறார்.

15 நாள் பேரணியானது 5,500 கிமீ சவாலான நிலப்பரப்புகள், சீரற்ற காலநிலைகள் வழியாகச் சென்றது, கடவுளின் கிருபையால், எங்கள் காரில் எந்த இயந்திரக் கோளாறுகளும் இல்லை, எங்கள் ஆரோக்கியம் மிகவும் நன்றாக இருந்ததால் பல்வேறு நிலப்பரப்பில் ஒவ்வொரு தருணத்தையும் நாங்கள் அனுபவித்தோம், என்று சிவபாலா நினைவு கூர்ந்தார். RI தலைவரின் கருப்பொருளுடன், கார் பேரணியில் 'இமேஜின் இம்பாக்ட் டூர்' என்ற கோஷம் இருந்தது, மேலும் பெண்கள் குழுவினர் தாங்கள் பார்வையிட்ட அனைத்து சங்கத் திட்டங்கள் மற்றும் சமூக முன் முயற்சிகள் குறித்து குறிப்பெடுத்துக் கொண்டனர். இதன் மூலம் ரோட்டரியின் பொது உருவத்தை நாடு முழுவதும் மேம்படுத்த நாங்கள் பரப்புவோம் , என்று அவர் கூறுகிறார்.

சென்னை ஷெனாய் நகர் பகவதி அம்மன் கோவிலில், செப்., 29 அன்று ஜவுளி அதிபர் நல்லி குப்பு சாமி செட்டி முன்னிலையில், RI இயக்குனர் A S வெங்கடேஷ் மற்றும் DG N நந்தகுமார் ஆகியோர் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தனர். சுமார் 20 ரோட்டேரியர்கள் அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்ப, அதிகாலையில் கன்னியாகுமரியை அடைந்தனர். அடுத்த நாள், DG V R முத்து, RID 3212 அதிகாரிகளுடன் இணைந்து இந்தியாவின் தென்கோடி முனையிலிருந்து பேரணியைத் துவக்கி வைத்தார்.

### அபாயங்கள் குறித்து எச்சரிக்கை

அவர்கள் வட இந்தியா முழுவதும் பயணம் செய்வது இதுவே முதல் முறை என்பதால், பெண்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லாத ஆபத்தான இடங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று எங்கள் குடும்பத்தினரும்,

*வைஜாக் இன்ஸ்டிட்யூட்டில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் அவர்களுடன் (இடமிருந்து) சென்னை மேராக்கி செயலாளர் ப்ரீதா மகேஷ், கோத்தாங்கி சுஜித்ரா, சிவபாலா ராஜேந்திரன் மற்றும் சங்கத்தலைவர் ஸ்ரீகலா கோபி.*






RID A S *வெங்கடேஷ் கொடியசைத்து பேரணியை துவக்கி வைக்கிறார்.*

ரோட்டரியின் ஒரு பகுதியினரும் ஆரம்பத்தில் எச்சரித்தனர். ஆனால் நாங்கள் பெண்களாக மட்டும் பயணிக்காமல் ரோட்டேரியன்களாக பயணிக்கிறோம், தளவாடங்களை கவனித்துக்கொள்வதற்கும் தங்குவதற்கும் சங்கங்களுடன் முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறி அவர்களை நம்பவைத்தோம். எங்களின் உறுதியை உணர்ந்து எங்களைப் போக அனுமதித்தார்கள் என்று விளக்குகிறார் சிவபாலா.

திட்ட ஒருங்கிணைப்பாளர் கோத்தாங்கி சுசித்ரா அதிக நேரம் வாகனத்தை ஓட்டினார், மேலும் அவரது துணை ஓட்டுநர் சங்க செயலாளர் ப்ரீத்தா மகேஷ், சிவபாலா மற்றும் சங்கத்தலைவர் ஸ்ரீகலா கோபி ஆகியோர் நால்வர் குழுவின் மற்ற உறுப்பினர்களாக இருந்தனர். கோ கிரீன், என்ட் போலியோ நவ், DEI கொள்கை, புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பெண்கள் நலன் ஆகிய ஐந்து-மைய பிரச்சாரத்தை அவர்கள் தங்கள் பயணத்தில் மேற்கொண்டனர்.

ஜான்சியிலிருந்து குவாலியர் செல்லும் வழியில் உள்ள ஒரு தொலைதூர கிராமத்திற்கு கூகுள் மேப்ஸ் அவர்களுக்கு தவறான வழிகாட்டியதை நினைவு கூர்ந்த அவர், “இது நேரான நெடுஞ் சாலை என்பதால், நாங்கள் GPS குறியீடுகளைப் பின்பற்றினோம். ஆனால் அது எங்களை ஒரு பழங்குடி குக்கிராமத்திற்கு அழைத்துச் சென்றது. எங்களுக்கு பயமாக இருந்தது. ஆனால் அவர்களின் விவசாயம் மற்றும் பழமையான வாழ்க்கையை எங்களால் காண முடிந்தது.

ஜம்முவில், DG துஷ்யந்த் சௌத்ரி, RID 3070 மற்றும் பிற ரோட்டேரியன்களால் அக்டோபர் 13 அன்று அவர்கள் வரவேற்கப் பட்டு அடுத்த நாள் ஸ்ரீநகரை அடைந்தனர். பள்ளத்தாக்கில், RC ஸ்ரீநகர் சிட்டி செயலாளர் சஃபூரா ஜாவேத் மற்றும் அவரது குடும்பத்தினர் பேரணியாளர்களுக்கு விருந்தளித்தனர்; DGயுடன் சங்கத் தலைவர் பூபிந்தர் சிங் ஜம்முவில் இருந்தார். ஜம்முவிலிருந்து ஸ்ரீநகருக்கு 250 கிமீ தூரம் குறுகிய சாலைகள் கொண்ட செங்குத்தான மலைகளில் வாகனம் ஓட்டுவது அவர்களுக்கு பெரும் பயத்தை அளித்தது. தென்னிந்தியாவில் உள்ள மலைப்பாதைகளில் பள்ளத் தாக்குகளுக்கு தடுப்புச் சுவர்கள் இருப்பதைப் போல், அத்தகைய பாதுகாப்பு அல்லது சாலைத்




RID *மகேஷ் கோட்பாகியுடன் பேரணி குழுவினர்.*




*நல்லி குப்புசாமி செட்டியார் முன்னிலையில், PDG ராஜா சீனிவாசன், Rtn வினோத் சரோகி, DG N நந்தகுமார் ஆகியோருடன் பேரணி துவக்கி வைக்கப்படுகிறது.*

தரங்கள் எதுவும் காஷ்மீரில் இல்லை. எதிர்புறத்தில் லாரிகள் வரும் போது, இடதுபுறம் பள்ளத்தாக்கை எதிர்கொள்ளும் தடுப்பு சுவர்கள் இல்லாததால் நாங்கள் கவனமாக கடக்க வேண்டியிருந்தது, என்று அவர் கூறுகிறார். காஷ்மீர் சாலைகள் தவிர, மற்ற தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்தும் உயர்தரத்தில் இருந்தன என்கிறார் சுசித்ரா.

**சென்னையிலிருந்து வைசாக்கிற்கு**

நான்கு பேர் கொண்ட குழுவினர், விசாகா விஸ்டா இன்ஸ்டிட்யூட்டில் பங்கேற்பதற்காக காரில் சென்னையில் இருந்து விசாகப் பட்டினத்திற்கு, 850 கிமீ பயணம் செய்து ஐந்தாவது பயணத்தை மேற்கொண்டனர். அங்கு RI தலைவர் ஜெஃனிபர் ஜோன்ஸ், எங்களை ஊக்கப்படுத்தினார். அவர்களின் முதல் பேரணியில், நால்வர் அணி 2018-ல் சென்னையில் இருந்து ராமேஸ்வரத்தில் உள்ள தனுஷ்கோடிக்கு சென்றனர். இதைத் தொடர்ந்து ரோட்டரி இந்தியாவின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக சென்னை முதல் கொல்கத்தா வரை பயணம் செய்தனர். தொற்றுநோய்க்குப் பிறகு, 2021–22 ஆம் ஆண்டில், அவர்கள் கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் உள்ள தலக்காவேரியிலிருந்து தொடங்கி தமிழ்நாட்டில் காவிரி ஆறு வங்காள விரிகுடாவில் இணையும் பூம்புகார் வரை காவேரி ஆற்றை ஒட்டி பயணித்தனர். “நதியை மீட்டெடுப்பது, காடுகளை வளர்ப்பது மற்றும் சுற்றுச்சூழலைக் காப்பாற்றுவது ஆகியவை பிரச்சாரத்தின் பிரச்சினைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன,” என்கிறார் சிவபாலா.

அவர்களின் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் பயணத்தின் போது, RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் அமிதா புனேவில் அவர்களுக்கு விருந்தளித்தது அவர்களின் நேசத்துக்குரிய தருணங்களில் ஒன்றாகும்.■

*பீடார் கோட்டை முன் பேரணியினர், ரோட்டரி மற்றும் இன்னர் வீல் சங்கத்தினருடன்.*



## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல்

உள்ள Junk folder-க்கு

செல்கிறதா?






ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை **ஒவ்வொரு உறுப்பினருக்கும்** e-mail மூலம் அனுப்புகிறோம்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

---

# மங்களூரில் ஆதரவற்றோருக்கான ஒலிம்பிக்ஸ்

### ரோட்டரி செய்திக் குழு

10 குழந்தைப் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு மையங்களைச் சேர்ந்த 400 குழந்தைகள் நாள்முழுக்க மகிழ்ச்சியாக விளையாடிய நிகழ்ச்சி, கனரா உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 22வது சின்னரா உத்சவா, "ஆதரவற்றோர் ஒலிம்பிக்ஸ்" என்ற பெயரில் புகழ் பெற்றுள்ள, ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விளையாட்டு, பண்பாட்டுச் சந்திப்பை RC மங்களூர் சென்ட்ரல், RID 3181 மற்றும் RAC மங்களூர் சிட்டி இணைந்து நடத்தினார்கள். இது ஆதரவற்றோர் இல்லங்களில், வாழும் நலிந்த குழந்தைகள் பலர் முன்னிலையில் தங்கள் திறமையைக் காண்பிக்க ஒரு தளத்தை வழங்குகிறது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மங்களூர் பல்கலைக்கழக இணை வேந்தர் P S யெடபாதிதயா சிறப்பு இல்லங்களைச் சேர்ந்த நலிந்த குழந்தைகள் தங்கள் திறமைகளைக் காண்பிக்க வாய்ப்பு அளிக்கும் ரோட்டரியைப் பாராட்டினார். பல ஆண்டுகளாக இந்தச் சங்கம் செய்துவரும் சமூகத் திட்டங்கள், சிறப்பு முன்னெடுப்புகளையும் அவர் பாராட்டினார். "தன்னார்வலர் அமைப்புகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்திச் சமூகச் சமநிலையின்மை, சமூகப் பிற்போக்குத்தனத்தை நீக்கப் பாடுபடவேண்டும்" என்றார் அவர்.

குழந்தைகளுடைய முகங்களில் ஒருநாளாவது சிரிப்பைக் கொண்டு வருவதும், தாங்கள் தனியாக இல்லை என்ற உணர்வை உண்டாக்குவதும் தான் இந்த நிகழ்ச்சியின் நோக்கங்கள் என்றார் நிகழ்ச்சிக் குழுத் தலைவர் PDG தேவ்தாஸ் ராய். முன்னதாக, RC மங்களூர் சென்ட்ரல் தலைவர் சாய் பாபா ராவ் வரவேற்பு உரை



PDG *தேவ்தாஸ் ராய் (வலமிருந்து 3வது) ஒலிம்பிக்ஸ் போட்டி துவக்க விழாவில்.*

வழங்கினார். A G ராஜ்கோபால் ராய், தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ராஜேஷ் ஷெட்டி, சங்கச் செயலாளர் பிரதீப் குலால் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள், சான்றிதழ்கள், வென்ற அணிக்கு நிகழ்ச்சிக் கோப்பை ஆகியவற்றை DGN விக்ரம் தத்தா வழங்கினார்.■

# இலங்கையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார் RI தலைவர் ஜோன்ஸ்






**மேலே:** RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் DGN நிக் க்ரயாசிச், இலங்கைத் தலைவர் ரானில் விக்ரமசிங்கே அவர்களுடன் ரோட்டரி நிகழ்ச்சியில்.

**வலதில்:** UNICEF பிரதிநிதி கிரிஸ்டியன் ஸ்கூக் அவர்களுடன், RIதலைவர் ஜோன்ஸ் மருந்து பெட்டிகளை இலங்கை சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலியா ரம்புக்வெல்லாவிடம் அளிக்கிறார். உடன் PRIP K R ரவீந்திரன், DG புபுடு டீ சொய்ஸ்ஸா, RID விக்கி புலிஸ், PRID சங்க்கூ யுன், RC துபாய் காஸ்மோபோலிடன் தலைவர் டேவிட் ஜிப்ஸன்-மூர் ஆகியோரும் உள்ளனர்.

## ரோட்டரி செய்திக் குழு

இலங்கைக்கு சென்றிருந்த ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், அங்கு ரோட்டேரியன்கள் பங்கேற்ற கூட்டத்தில் உரையாற்றினார். பின்னர் அவரை கௌரவிக்கும் வகையில் நடைபெற்ற இரவு விருந்தில் பங்கேற்றார். இந்த பிரத்யேக விருந்தில் இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது மனைவி மைத்ரி மற்றும் 400-க்கும் மேலான விருந்தினர்கள் பங்கேற்றனர்.

இலங்கை ரோட்டரி சங்கங்கள் சார்பிலான பல்வேறு சேவைத் திட்டங்களை பார்வையிட்ட ஜோன்ஸ், ரோட்டரியின் 10 லட்சம் மரங்கள் நடும் திட்டத்தை, மரக்கன்று நட்டு தொடங்கிவைத்தார். நாட்டை பசுமைப்படுத்துவது மட்டும் இத்திட்டத்தின் நோக்கம் அல்ல, இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் 40 சதவீதத்தை ரோட்டரி அறக்கட்டளைக்கு அளிப்பதையும் உள்ளடக்கியது. கொழும்பு பங்குச் சந்தை வளாகத்தில் மரக்கன்று நட்டு இத்திட்டத்தை தொடங்கிவைத்தார் என்றார் PRIP K R ரவீந்திரன்.

கொழும்பு பங்குச் சந்தை, ரோட்டரி மற்றும் இயக்குநர்கள் கழகம் மற்றும் சிலோன் வர்த்தக சங்கம் ஆகியவை இணைந்து சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான நடவடிக்கையாக இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தன என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உயிர்காக்கும் பொருள்கள் வழங்கும் யுனிசெப் மற்றும் ரோட்டரி இன்டர்நேஷனல் கூட்டு முயற்சியிலான திட்ட நிகழ்ச்சியிலும் ஜெனிஃபர் பங்கேற்றார். இந்த கூட்டாண்மை மூலம் ரோட்டரி இன்டர்நேஷனல் மூலமான வலைத்தொடர்பு மூலம் நிதி திரட்டி முக்கியமான மருந்துபொருள்களை கொள்முதல் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் மருந்து பொருள்களின் முதல் தொகுதியை ஜெனிஃபர் ஜோன்ஸ், சுகாதார அமைச்சகத்திடம் வழங்கினார்.

ஜம்ப் ஸ்டார்ட் ஸ்ரீலங்கா என்பது மற்றொரு சேவைத்திட்டமாகும். இத்திட்டம் இலங்கை ரோட்டரி, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் கூட்டு முயற்சியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தகுதியான 500 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிக்கான உதவித்தொகை வழங்குவதாகும். பிலிப்பின்ஸ் ரோட்டரி சங்கங்கள் கூட்டு முயற்சியுடன் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 50 மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்துக்கான உதவித் தொகை பெறுவதற்கான கடிதங்களை வழங்கினார் ஜெனிஃபர் ஜோன்ஸ்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் இலங்கை பயணத்தின் முக்கிய அம்சம் என்னவெனில், முதல் முறையாக ரோட்டரி இன்டர்நேஷனல் பெண் தலைவர் ஜெனிஃபரின் வருகையை முன்னிட்டு அவரை கௌரவிக்கும் வகையில் தபால் துறை சிறப்பு தபால்தலை வெளியிட்டதுதான். இந்நிகழ்ச்சியில் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனே கலந்துகொண்டார். ■




இலங்கை ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்னா RI தலைவர் ஜோன்ஸ் படம் கொண்ட தபால்தலை வெளியீட்டு விழாவில். உடன் PRIP ரவீந்திரன், DG புபூடு, PDGs பாஷ்குமார் ராஜன், கௌரி ராஜன், கிரிஷ் ராஜேந்திரன் மற்றும் அஜித் வீரசிங்கே ஆகியோரும் உள்ளனர்.





*RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் RID புலிஸ், கொழும்பு பங்கு சந்தை வளாகத்தில் மரம் நடு விழாவில். உடன்: ஜிப்ஸன்-மூர், நிக் க்ரயாசிச், பங்கு சந்தை தலைவர் ராஜீவா பண்டார நாயகே, PDG கௌரி மற்றும் DG புபூடு ஆகியோரும் உள்ளனர்.*



# ஜல்னாவில் உள்ளூர்ப் பொருளாதாரத்தை மேம்படுத்திய ரோட்டரி கண்காட்சி

ரோட்டரி செய்திக் குழு

டிசம்பரில் ஜல்னா மற்றும் ஜல்னா மிட்-டவுன் RCகள், RID 3132, இணைந்து நடத்திய மூன்று நாள் ரோட்டரி ஜல்னா கண்காட்சிக்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வந்தார்கள், ரூ.5 கோடிக்குப் பொருட்களை வாங்கினார்கள்.

இந்தப் பெரிய திருவிழா உள்ளூர்ப் பொருளாதாரத்தை, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை மேம்படுத்தியது, பிளாஸ்டிக் அச்சுறுத்தலைப்பற்றிய சமூகச் செய்தியைப் பரப்பியது, இளம் மனங்களுக்குச் சமீபத்திய தொழில்நுட்ப மேம்பாடுகளைக் கற்றுத்தந்தது, அத்துடன், இந்த இரு சங்கங்களும் நல்ல தொகையையும் திரட்டின. “இந்தக் கண்காட்சியின் முதன்மை நோக்கம், சமூக முன்னெடுப்புகளுக்கு நிதி திரட்டுவதுதான், அது நன்கு நிறைவேறியது” என்றார் RC ஜல்னா மிட்-டவுன் தலைவர் தவால் மிஷ்ரிகொட்கர். ஏழு ஏக்கர்களுக்குப் பரந்து விரிந்திருந்த இந்தத் தொழில் கண்காட்சியில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் உள்ளிட்ட 250க்கும் மேற்பட்ட காட்சிப்படுத்துனர்கள் பங்கேற்றார்கள், அப்ரொகூலின் குளிர்க்கருவி, விக்ரம் தேநீர் நிறுவனத்தின் டீ தந்த்ரா என்ற இரண்டு தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டன, கோளரங்கம், நடமாடும் அறிவியல் ஆய்வகம், இயந்திர மனிதரியல், 3D அச்சிடுதல் மற்றும் ஏரோமாடலிங் காட்சிப்படுத்தல் போன்ற குழந்தைகளுக்கான செய்முறை விளக்க அரங்குகள் இருந்தன, இவற்றை 25,000க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பார்த்தார்கள். குறிப்பாக, ஒரு தரைவிரிப்பு அரங்கம் 3 நாட்களில் ரூ.10 லட்சத்துக்குமேல் விற்பனை செய்தது, “கண்காட்சிக்குப்பிறகும் மக்கள் இந்த அரங்கில் கூட்டமாக நிறைந்திருந்தார்கள்.




*ISRO ஏவுகணை செலுத்துவான் அரங்கில் பள்ளி மாணவிகள்.*

ஜல்னா மாவட்ட ஆட்சித்தலைவர் விஜய் ரதோட், DG ருக்மேஷ் ஜகோடியா முன்னிலையில் மெர்சிடிஸ் பென்ஸ் இந்தியத் தலைவர் வியான்கடேஷ் குல்கர்னி இந்தக் கண்காட்சியைத் தொடங்கிவைத்தார். இங்கு, குப்பையிலிருந்து திரட்டப் பட்ட ஏழு டன் பிளாஸ்டிக்கிலிருந்து உருவாக்கப்பட்ட 4,700 சூழியல்-செங்கற்களால் ஆன ISRO ஏவுகணை செலுத்துவான் என்ற உயரமான காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இதன் மூலம், சுற்றுச்சூழலில் இருந்து சுமார் ஏழு டன் $CO_2$ நீக்கப்பட்டது. கோளரங்கக் காட்சி, இயந்திர மனிதரியல் செய்முறை விளக்கங்களை ஆயிரக்கணக்கான மாணவர்கள் பார்த்தார்கள், Rtn பூஜா




*ரோட்டரி ஜல்னா எக்ஸ்போவை மெர்சிடிஸ் பென்ஸ் (இந்தியா) தலைவர் வியாங்க்டேஷ் குல்கர்னி DG ருக்மேஷ் ஜகோடியா முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

ரதி அவர்களைத் திட்டத் தலைவராகக் கொண்ட ஆர்யா வளைத்தல் உலகம் ஆதரித்த குழந்தைகள் ஜிம்னாஸ்டிக் திறமை நிகழ்ச்சியைக் கண்டு வியந்தார்கள்.

இந்த ரோட்டரி கண்காட்சிக்கு RC ஜல்னா தலைவர் கிஷோர் தேஷ் பாண்டெ, செயலாளர் பிரசாந்த் மகாஜன் இருவரும் மிஷ்ரிகோட்கர், RC ஜல்னா மிட்-டவுன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிக் நானாவதி மற்றும் Rtn யஷ்ராஜ் பீட்டி-யுடன் இணைந்து பணியாற்றினார்கள்.

இந்தத் தனித்துவமான முன்னெடுப்பு சிறிய மற்றும் வீட்டுத் தொழில்களை முன்னிறுத்த உதவியது, ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தியது என்றார் மிஷ்ரிகோட்கர். RC ஜல்னா 2007ல் இந்தக் கண்காட்சியைத் தொடங்கியது, அதன்பிறகு, 2011, 2017லும் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது.■

# குவஹாத்தியில் மகிழ்ச்சிப் பள்ளி




DG *குஷாநவா பாபி (வலதிலிருந்து 5வது) மற்றும் சங்கத்தினர் சீரமைத்த பள்ளியில்.*

குவஹாத்தியில் உள்ள பன்பஜார் அரசு உயர்நிலைப் பள்ளியின் இளையோர் பிரிவு புதுப்பிக்கப் பட்டுள்ளது, ரோட்டரியின் TEACH முன்னெடுப்பின் கீழ் RC குவஹாத்தி லுயிட், RID 3240, தன்னுடைய அறக்கட்டளை வழியாக இந்தப் பள்ளியை “இன்னும் மேம்பட்ட இடமாக, குழந்தைகளைக் கற்பதற்கு வரவேற்கிற இடமாக'' மாற்றியுள்ளது என்கிறார் சங்கத் தலைவர் ராஜீவ் ஜெயின்.

“நாங்கள் 2 பழைய வகுப் பறைகள், தண்ணீர் வசதி இல்லாத 2 கழிப்பறைத் தொகுதிகளைச் சரிசெய்ய வேண்டியிருந்தது. கூரைக்குக் கைப்பிடிச் சுவர் தேவைப்பட்டது. அது மட்டுமின்றி, இந்தப் பள்ளியில் பாதுகாப்பான, தூய்மையான குடிநீர் வசதி இல்லை'' என்றார் சங்கத்தின் எழுத்தறிவுப் பிரிவுத் தலைவர் மோனா ஷா.

3 மாதங்களுக்குள் ரூ.3.75 லட்சம் செலவில் இந்தச்சங்கம் இந்தப் பணியை நிறைவுசெய்தது. PDG அரிஜித் என்டௌ, சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் DG குஷாநவா பாபி இந்த மகிழ்ச்சிப் பள்ளியைத் தொடங்கி வைத்தார். ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பயிலகம் ஒன்றும் நடத்தப்பட்டது. இந்தச் சங்கம் இந்தப் பள்ளியில் ஓர் இன்டராக்ட் சங்கத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்கு முன் இந்தச் சங்கம் தன்னுடைய WinS திட்டத்தின் கீழ் இந்தப் பள்ளியில் 5 கழிப் பறைகளைக் கொண்ட ஒரு கழிப்பறைத் தொகுதியைப் புதுப்பித்தது.■

# காசிப்பூரில் தொடங்கப்பட்ட நான்கு CSR திட்டங்கள்

ரோட்டரி செய்திக் குழு



*ஒரு மகிழ்ச்சி பள்ளியில் RI இயக்குனர் A S வெங்கடேஷ் மற்றும் வினிதாவுடன்* **(இடமிருந்து)** *PDG ராஜீவ் சர்மா, DGN நீரவ் நிமேஷ், DG பவன் அகர்வால், அவர் மனைவி ப்ராச்சி, PDG ஷரத் சந்திரா மற்றும் அஞ்சனா.*

RC காசிப்பூர், RID 3110, அடிப் படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு, நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை ஆகிய துறைகளில் ரூ 1.57 கோடி செலவில் நடத்தும் நான்கு திட்டங்களை RI இயக்குநர் A S வெங்கடேஷ் ஒரு பெரிய CSR நல்கை விழாவில் தொடங்கி வைத்தார்.

காசிப்பூரிலும் அதைச் சுற்றியும் உள்ள வித்யா பாரதி பள்ளிகளில் காசி விஸ்வநாத் துணி ஆலைகளுடைய ரூ.25 லட்சம் பங்களிப்பின் மூலம் 8 கணினி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டன. சந்திராவதி திவாரி சிறுவர் பள்ளி, சந்திராவதி திவாரி மேல்நிலைப் பள்ளியில் இரண்டு ஆய்வகங்களை வெங்கடேஷ் மற்றும் வினிதா தொடங்கிவைத்தார்கள்.

CSR கொடையாளர்கள் கல்வாலியா இஸ்பாத் உத்யோக் மற்றும் KVS பிரீமியர் அறக் கட்டளை காசிப்பூரில் உள்ள LD பட் துணை மாவட்ட மருத்துவமனையின் பல பிரிவுகளுக்கு ரூ.52.57 லட்சம் மொத்தச் செலவில் மருத்துவக் கருவிகளை வழங்கினார்கள். இந்த மேம்படுத்தலின் ஒரு பகுதியாக, இந்த மருத்துவமனையில் 3 படுக்கைகளைக் கொண்ட NBSU (புதிதாகப் பிறந்த குழந்தைகளை நிலைப்படுத்தல் பிரிவு) 12 படுக்கைகளைக் கொண்ட SNCUஆக (சிறப்புப் புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் பராமரித்தல் பிரிவு) மாற்றப்பட்டது. வெங்கடேஷ் மற்றும் வினிதா புதிய SNCU வசதியையும், புதிதாகக் கட்டப்பட்ட பிரசவ அறையையும், SNCU விரிவாக்கப் பிரிவையும் முறையே தொடங்கிவைத்தார்கள், SNCU அறைப்புதுப்பிப்பு மற்றும் அதன் விரிவாக்கத்தை நைனி பேப்பர்ஸ் பங்களிப்புடன் காசிப்பூர் இன்னர் வீல் கிளப் செய்தது. இந்த மருத்துவமனையில் செய்யப் பட்டுள்ள CSR திட்டங்கள் ஆண்டு தோறும் 2,000க்கும் மேற்பட்ட புதிய நோயாளிகளை ஈர்க்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சங்கம் நைனி பேப்பர்ஸ் ஆதரவுடன் 3 மகிழ்ச்சிப் பள்ளிகளைத் தொடங்கியது (ரூ.79.79 லட்சம்). PDGகள் ராஜீவ் சர்மா, தேவேந்திர குமார் அகர்வால், சரத் சந்திரா, ரவி பிரகாஷ் அகர்வால், கிஷோர் காட்ரு, DGN நீரவ் நிமேஷ், RID 3110 CSR தலைவர் லாலேஷ் சக்சேனா பங்கேற்ற இந்த விழாவில், RID 3110 இந்த ஆண்டு ரூ.7 கோடி மதிப்புள்ள 11 திட்டங்களை நிறைவேற்றுவதாக DG பவன் அகர்வால் சொன்னார். ■

# சுற்றுச்சூழல், நீருக்காக மிதிவண்டிப் பயணம்



ரோட்டரி செய்திக் குழு

RC ஜலந்தர் ஹெல்ப்பிங் ஹேன்ட்ஸ், RID 3070, இந்நகரில் உள்ள 13 மற்ற சங்கங்களுடன் இணைந்து 'சுற்றுச்சூழலையும் நீரையும் காப்பதற்கு மிதிவண்டி ஓட்டுங்கள்' என்ற செய்தியுடன் நடத்திய சைக்ளத்தான் 2.0 என்ற பெரிய மிதிவண்டிப் பேரணியில் பல வயது களைச் சேர்ந்த 550க்கும் மேற்பட்ட ரோட்டரியன்களும் மக்களும் பங்கேற்றார்கள்.

இந்த மிதிவண்டிப் பேரணி நகரின் வெவ்வேறு பகுதிகளைக் கடந்து சென்றது, சுற்றுச் சூழலைக் காத்தல், நீரைப் பாதுகாத்தலின் தேவையைப்பற்றிய விழிப்புணர்வைப் பரப்பியது.

பேரணியின் நிறைவில், ஜலந்தரைச் சேர்ந்த மூத்த தடகள வீரர்கள், ககன் குமார், சுனில் சர்மா, பால்ராஜ் சிங் சௌகான் மற்றும் பால்ஜித் மகாஜன் பெருமைப்படுத்தப்பட்டார்கள். மிதிவண்டி ஓட்டிய அனைவருக்கும் டி-சட்டைகள், சான்றிதழ்கள், பதக்கங்கள், தொப்பிகள், நாட்காட்டிகள், தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

DG துஷ்யந்த் சௌத்ரி, IPDG U S கய், மனீந்தர் சிங் சதா, AGகள் ராஜேஷ் பாஹ்ரி, நரேஷ் சாதா, PDGகள் சுரேந்தர் சேத், SPS க்ரோவெர், சங்கத் தலைவர் ருசி சிங் கௌர், திட்ட இயக்குநர் நிகில் அனெஜா, மற்ற சங்கங்களின் உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ■

---

மாநாடு 2023



# மெல்பர்னில் மட்டும்

EVA ரெமிஜன்-டோபா

மே 27 முதல் 31 வரை நடைபெறும் RI மாநாட்டுக்காகத் திட்டமிடப்படுகிற, மெல்பர்னின் பண்பாடு, விளையாட்டு, விருந்தோம்பலைக் காட்சிப்படுத்தும் தனித்துவமான நிகழ்ச்சிகளில் பிடித்தவற்றைத் தேர்ந்தெடுங்கள்.

மாநாட்டுக்குமுன் இங்கு வரும் கால்ஃப் வீரர்கள் கால்ஃப் விளையாட்டுக்கு ஏற்ற, மணல் நிறைந்த நிலத்தில் அழகான அமைப்புகளைக் கொண்ட மெல்பர்ன் மணற்தொகுப்பில் உள்ள விக்டோரியா கால்ஃப் சங்கத்தின் ரோட்டரி நாளில் (26 மே) கலந்துகொள்ளலாம். இந்த நிகழ்ச்சியில் திரட்டப்படும் பணம் போலியோ ஃபண்டிற்கு பயன்படுத்தப்படும்.

27 மே அன்று, அருங்காட்சியகத்தில் இரவு வரவேற்புப் பண்பாட்டு நிகழ்ச்சியின்போது ரோட்டரி நண்பர்களுடன் மெல்பர்னின் அருங்காட்சியகத்தைச் சுற்றிப் பார்த்து இந்த நகரின் வரலாற்றைப்பற்றி அறிந்துகொள்ளுங்கள்.

29 மே அன்று, "விருந்தளிப்பவர் விருந்தோம்பல்" மாலை, மெல்பர்ன் பெருநகரத்தில் வசிக்கும் ரோட்டரி உறுப்பினர்கள் மாநாட்டுக்கு வரும் தோழர் களுக்கு இரவு உணவு விருந்து அளிக்கவுள்ளார்கள்.

மே 29, 30 நாட்களில் தெற்குக் கப்பல் துறை மேடை உணவகப் பகுதியில் ரோட்டரி உறுப்பினர்கள் மட்டும் தான் அனுமதிக்கப்படுவார்கள்.

30 மே அன்று, புகழ் பெற்ற ஃப்ளெமிங்டன் பந்தயப் பாதையில் மாலைச் சந்திப்புக்குச் செல்லலாம். இங்கு பந்தயக் குதிரைகளுடன் புகைப்படம் எடுக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

உங்களுடைய தனித்துவமான நிகழ்ச்சிகளுக்கு இங்கு பதிவு செய்துகொள்ளுங்கள்: *rotarymelbourne2023.org/events.*

மேலும் விபரங்களுக்கு **convention.rotary.org** காண்க.

# ரோட்டரி ஆளுநர்



## ராஜசேகர் ரெட்டி தல்லா

சிட் பண்ட், RC நரசராவ்பேட்டை, RID 3150

### தெலங்கானா கிராமத்தில் மாற்றம்

ராஜசேகர் ரெட்டிக்கு ஒவ்வொரு நாளும் உந்துதலாகவும் கற்றல் அனுபவமாகவும் உள்ளது. எனது சங்கங்கள் கிராம விகாஸ் திட்டத்தின் கீழ் மெகா கிராம மேம்பாட்டுக்கான முயற்சிகளை எடுத்துள்ளன. கிராமங்களை தத்தெடுத்து ஆய்வு மேற்கொண்டபின் இவை முன்னெடுக்கப்பட்டுள்ளன என்கிறார் அவர்.

தற்போது 64 சங்கங்கள் கிராம வளர்ச்சித் திட்டங்களை படிப்படியாகச் செயல்படுத்தி வருகின்றன. கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் குண்டூரில் உள்ள செயின்ட் ஜோசப் பொது மருத்துவ மனையில் ரூ.1.5 கோடியில் 10 கருவிகளுடன் டயாலிஸ் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் BHEL-GE அளித்த ரூ.46 லட்சம் மானிய உதவியில் ஹைதராபாதில் உள்ள MNJ புற்றுநோய் மருத்துவமனையில் டாப்லர் சிடி ஸ்கேன் கருவி நிறுவப்பட்டுள்ளது.

இவை தவிர கடந்த ஆண்டு புற்றுநோய் கண்டறியும் சிகிச்சை வசதிகளுடன்கூடிய இரண்டு நடமாடும் மருத்துவ வாகனங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. 85 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. எங்களது TRF பங்களிப்பு இலக்கு 650,000 டாலர். 1,500 மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள்கள் மற்றும் 600 பெண்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. கிராம விகாஸ் திட்டத்துக்கு நன்றி. கிராம மக்கள் இப்போது தங்களின் அடிப்படைத் தேவைகளுக்கு அரசியல்வாதிகளுக்கு பதில் ரோட்டரியின் உதவியை நாடுகின்றன என்று புன்னகையுடன் தெரிவித்தார் ரெட்டி.■



## வோம்மினா சதீஷ் பாபு

தொழில்நுட்பக் கல்வி, RC நெல்லூர் சௌத், RID 3160

### GG நடைமுறைகளை தெளிவுபடுத்துங்கள்

RID 3160-இன் வரலாற்றில் இதுவரை 6 அல்லது 7 சர்வதேச மானிய உதவித் திட்டங்கள் தான் செயல்படுத்தியிருக்கலாம் என்று மதிப்பிடுகிறார் DG வோம்மினா சதீஷ் பாபு. இவரது குடும்பம் கடந்த 70 ஆண்டுகளாக ரோட்டரி சேவையில் ஈடுபட்டு வந்துள்ளது. சர்வதேச மானிய உதவித் திட்டத்துக்கு எப்படி விண்ணப்பிப்பது என்பது பற்றிய நடைமுறை தெரியாதது, DDF-க்கு பொருத்தமான தொகையை பெற TRF-க்கு பெரிய தொகையை பங்களிப்பது தொடர்பான விழிப்புணர்வு இல்லாமை ஆகியவைதான் முக்கிய தடைகளாக இருந்ததாக அவர் கூறுகிறார்.

சர்வதேச மானிய உதவிக்கான நடைமுறை பற்றி தெரிந்து கொள்வதற்காக 19 உறுப்பினர்களுடன் மூன்றாண்டு காலமானிய நிர்வாக குழுவை ஏற்படுத்தியுள்ளார் பாபு. இக்குழுவினர் *rotary.org* என்னும் மின்கற்றல் தளம் மூலம் அவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர் எடுத்த முன்முயற்சி மூலம் தாவண்கரேயில் உள்ள இரண்டு மருத்துவமனைகளுக்கு சர்வதேச மானிய உதவி மூலம் கர்ப்பப்பை வாய்புற்றுநோய் கண்டறியும் கருவியும் மற்றும் பிறந்த குழந்தைகளுக்கான நோய் கண்டறியும் கருவியும் நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளன. ரோட்டேரியனான தந்தை வோம்மினா சுப்பிரமணியம் கொடுத்த ஊக்கத்தின் பேரில் பாபு, 1997ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். மேலும் RID 3160ல் பெற்றோர்கள் பெயரில் 25,000 டாலர் மதிப்பீட்டில் அறக்கட்டளை ஏற்படுத்திய முதல் நபர் இவர்தான். அவரது TRF பங்களிப்புத் தொகை இலக்கு 250,000 டாலர்.■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





### ஸ்ரீகாந்த் பாலகிருஷ்ண இந்தானி

சங்கிலித் தொடர் சூப்பர்ஸ்டோர்ஸ்
RC தொண்டைச்சா, RID 3060

## 100 கிராமங்களில் கிராம கல்யாண் திட்டம்

உலகின் மிகப்பெரிய சேவை அமைப்பின் உறுப்பினராக இருப்பதும், லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றும் திட்டங்களுக்கு பங்களிப்பதும் என்னை ஊக்குவிக்கிறது என்கிறார் DG ஸ்ரீகாந்த் இந்தானி. கல்லூரி படிப்பை முடித்தபின் 1997ம் ஆண்டு ரோட்ராக்டர் ஆனார். பின்னர் 2006 இல் ரோட்டரி உறுப்பினர் ஆனார். DG என்ற முறையில் கிராம கல்யாண் திட்டத்தை வடிவமைத்தார். இது கிராம மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறார்.

பிப்ரவரி முதல் 100-க்கும் மேலான சிறிய மருத்துவ அறுவைச்சிகிச்சை முகாம்கள் மூலம் 10,000 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். எங்களது TRF பங்களிப்புத் தொகை இலக்கு 1.5 மில்லியன் டாலர். ரோட்டரியில் PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் PDG ஆஷிஷ் அஜ்மீரா ஆகியோர்தான் எங்களுக்கு வழிகாட்டியாக உள்ளனர். இந்த ஆண்டு 800 புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில் உறுதியாக இருக்கிறார்.

RID 3060-ல் உள்ள முக்கிய சங்கங்கள் நிரந்தர திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அவை ஆண்டு முழுவதும் இடைவெளி இல்லாமல் சமூகத்திற்கு சேவை செய்து வருவதால் மனித குலத்தின் கோயில்கள் என அவர்களை நான் அழைக்கிறேன் என்று அவர் குறிப்பிட்டார்.■

### P சரவணன்

போக்குவரத்து,
RC நாமக்கல் பௌல்ட்ரி டௌன், RID 2982

## பொது நன்மைக்காக பேரணிகள்

மேட்டூர் மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் இருந்து காவிரியில் இரசாயன கழிவுகள் மற்றும் குப்பைகள் கலந்து மாசுபடுதலை தடுக்கும் நோக்கில் பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் காவிரியை காப்பாற்றுங்கள் பேரணி நடைபெற்றது. நதிகள் மாசுபடுதல் குறித்தும் அவற்றை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் இந்த பேரணியில் ஆயிரத்துக்கும் மேலானவர்கள் பங்கேற்றனர் என்றார் சரவணன்.

1990ஆம் ஆண்டு, 25 வயதில் அவர் ரோட்டரியில் சேர்ந்தார். அரசு மருத்துவமனைகளில் சர்வதேச மானிய உதவி (1,75,000 டாலர்) மூலம் ஐந்து டயாலிஸிஸ் மையங்கள் படிப்படியாக ஏற்படுத்தப்படும். மலர் திட்டத்தின் கீழ் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட மானிய உதவி மூலம் (210,000 டாலர்) 10 மருத்துவ மனைகளுக்கு கர்ப்பபை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவிகள் வழங்கப்பட உள்ளன. TRF பங்களிப்பு நிதியாக 750,000 டாலர்கள் நிதி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து 19 மண்டலங்களிலும் AG-க்கள் மூலம் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான பயிற்சி வகுப்புகள் நடந்து வருகின்றன. இதனால் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். RYLA ஜனவரி மாதத்தில் 62 ரோட்ராக்டர்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டிருந்தாலும் மண்டலம் மற்றும் பிராந்திய அளவில் தொடர்ச்சியான திட்டமாக கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றார்.■

# தனிமையை சமாளித்தல்

**டேவ் கிங்**

80 வயதான வெரா க்ரான்மர் மற்றும் சில்வியா வேர்டன் ஆகிய இரு நண்பர்கள், இங்கிலாந்தின் தெற்கு கடற்கரையில் உள்ள உள்ளூர் கல்லூரியில் டீன் ஏஜ் மாணவர்களுடனான வழக்கமான சந்திப்புகளை அவர்கள் எவ்வளவு எதிர்பார்க்கிறார்கள் என்பதை மிகைப்படுத்துவது கடினம். ''நீண்ட காலம் கழித்து நண்பர் களுடன் மீண்டும் இணைவது போன்ற இந்த சந்திப்புகளை நாங்கள் அனுபவிக்கிறோம்,'' என்று வேர்டன் கூறுகிறார்.

கடல் அருகே உள்ள அழகிய கதீட்ரல் நகரமான சிசெஸ்டரில் இந்த பெண்கள் தங்கள் வீடுகளில் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஒரு காலத்தில் அங்கு ஆசிரியராகப் பணி புரிந்த வேர்டன், சில ஆண்டுகளுக்கு முன்பு விதவையானார், மேலும் அவர் நகரத்திற்குச் செல்வது மிகவும் குறைவு. க்ரான்மரும் தனிமைப் படுத்தப்பட்ட உணர்வுகளை சமாளிக்க வேண்டியிருந்தது.

இன்று, இரண்டு பெண்களும் ஒரு டஜன் பெரியவர்கள் உள்ளடக்கிய குழுவில் இணைந்து, சிசெஸ்டர் கல்லூரியில் மாணவர்களுடன் அரச குடும்பத்தைப் பற்றி கலகலப்பான விவாதம் செய்கிறார்கள். ''நான் அநேகமாக அங்குள்ள இளைய முதியவர்களில் ஒருவராக இருக்கலாம், 92 வயதான ஒரு பெண்ணுடன் நான் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொண்டேன். பல வயதானவர்களுக்கு இது ஒரு சிறந்த இடமாகும்.'' என்கிறார் வேர்டன்.

''சில நேரங்களில் நான் வெளியே செல்ல வேண்டுமா என்று எனக்கு தோன்றும், ஆனால் நான் வீட்டிற்கு திரும்பி வரும்போது, நான் ஒரு நல்ல காலையை அனுபவித்தேன் என்று உணர்ந்திருப்பேன். என்னைப் போன்ற மற்றவர்களைச் சந்திப்பது மகிழ்ச்சி அளிக்கிறது, ஆனால் இளைஞர்களைச் சந்திப்பது, அவர் களின் வித்தியாசமான பக்கத்தைப் பார்ப்பது மற்றும் நல்ல உணர்வுடன் திரும்புவது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என 88 வயதான கிரான்மர் கூறுகிறார். கிரான்மர் ஒரு காலத்தில் தொழில் சார் சிகிச்சையாளராக பணியாற்றினார், பெருமூளை வாதம் உள்ளவர்களை கவனிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர். இந்த நாட்களில் அவர் நடக்க சிரமப்படுகிறார், மேலும் கல்லூரிக்கு செல்வதற்கு மினிபஸ் போக்குவரத்தையே சார்ந்திருக்கிறார்.

RC சிசெஸ்டர் ப்ரைரி ஏற்பாடு செய்த பிரிட்ஜிங் ஜெனரேஷன்ஸ், கல்லூரி மாணவர்களை வயதானவர் களுடன் இணைப்பதன் மூலம் தனிமையை சமாளிக்கிறது. இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, கல்லூரி கேன்டீனில் காபி, கேக், மற்றும் மாணவர்களுடன் அரட்டையடிக்கிறது பெரியவர்கள் குழு. அதன்பிறகு, உணவுகலை மாணவர்களால் சமைக்கப்படும் மதிய உணவிற்காக பல முதியவர்கள் பின்தங்குகின்றனர். ரோட்டரி சங்கம் போக்குவரத்துக்கு பணம் செலுத்த, சிசெஸ்டர் கல்லூரி இடம் மற்றும் சிற்றுண்டிகளை வழங்குகிறது.

இதன் செலவும் மிகக் குறைவு, ஆனால் வெகுமதிகள் ஏராளம். இலாப நோக்கற்ற நிறுவனங்களான ஜெனரேஷன்ஸ் யுனைடெட் மற்றும் ஈஸ்னர் அறக்கட்டளையின் 2018 அறிக்கை, இன்டர்ஜெனரேஷனல் திட்டங்கள் நல்வாழ்வை வளர்ப்பதில் பயனுள்ளதாக இருக்கும் என்று சுட்டிக் காட்டியுள்ளது. அத்தகைய ஒரு திட்டத்தில் பங்கு பெற்ற பெரியவர்களில், 97 சதவீதம் பேர் தாங்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந்ததாக அறிவித்தனர். இதனால் இளையவர்களுக்கும் நன்மைகள் உண்டு. சிசெஸ்டர் கல்லூரி, வளாகம் முழுவதும் உள்ள மாணவர்களை பிரிட்ஜிங் ஜெனரேஷன்ஸ் கூட்டங்களில் பங்கேற்க அழைத்துள்ளது, மேலும் இந்தத் திட்டம் மாணவர்களின் தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்களை வளர்ப்பதற்கான மதிப்புமிக்க கருவியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

பிரிட்ஜிங் ஜெனரேஷன்ஸ் என்பது ரோட்டேரியன் மைக் ஹார்வியின் யோசனையாகும், அவர் இந்த யோசனையுடன் 2013ல் சிசெஸ்டர் கல்லூரியை அணுகினார். தனிமை மற்றும் தனிமைப்படுத்து தலை ஒரு குறிப்பிடத்தக்க சமூக சவாலாக அவர் நோக்கினார். அதிக நேரம் தனிமையாக இருப்பவர்களை அடையாளம் கண்டு, அவர்களில் தொடர்பு கொள்ளத் தயாராக இருப்பவர்களைக் கண்டறிவதில்



Bridging Generations-*ன் ஒரு கூட்டத்தில் வெரா க்ரான்மர்.*

இருந்து தேடுதல் தொடங்குகிறது.

சிசெஸ்டர் பிரைரி சங்கத்தின் உறுப்பினரான ஹார்வி, ஏஜ் யுகே மற்றும் ஹெல்த் அண்ட் இன்டிபென்டன்ட் லிவிங் சப்போர்ட் போன்ற சமூக அமைப்புகளுடன் பேசி பங்கேற்பாளர்களைக் கண்டறிந்தார். ‘‘தனிமையில் இருப்பவர்கள் நல்ல நேரத்தை அனுபவிப்பதும், அவர்களை விட இரண்டு, மூன்று தலைமுறை இளைய மாணவர்களுடன் பேசுவதை பார்ப்பதும் மிகவும் உற்சாகமாக இருக்கிறது.’’ என்கிறார் அவர்.

Covid-19 தொற்றுநோயால் தனிமைப்படுத்தப்பட்டதால், தனிமை உலகளாவிய பொது சுகாதார நெருக்கடியாக மாறியுள்ளது. அமெரிக்காவில், தொற்றுநோய்க்கு முன்பே, 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அமெரிக்கர்களில் கால் பகுதியினர் தங்களை சமூக ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என்று விவரித்தனர், 2011 ஆய்வின்படி இதில் 4 சதவீதம் அல்லது 1.3 மில்லியன் மக்கள் கடுமையான சமூக தனிமைப்படுத்தலை அனுபவிக்கின்றனர். மேலும் தனிமை வயதானவர்களை மட்டும் பாதிக்காது. பிரிட்டனில், 5 சதவீத பெரியவர்கள் அல்லது 2.6 மில்லியன் மக்கள் 2020ம் ஆண்டில் தொற்றுநோய்களின் ஆரம்ப நாட்களில் ஒரு மாதத்தில் அடிக்கடி அல்லது எப்போதும் தனிமையை உணர்ந்ததாக அரசாங்க கணக்கெடுப்பில் தெரிவித்துள்ளனர். கடந்த வாரத்தில் தனிமையாக உணர்ந்ததன் மூலம் தங்களின் ஆரோக்கியம் பாதிக்கப் பட்டுள்ளதாக சுமார் 14 சதவீதம் பேர் உணர்ந்துள்ளனர்; இது பிரிட்டன் முழுவதும் சுமார் 7.4 மில்லியன் மக்கள். அவர்களை தேசிய புள்ளியியல் அலுவலகம் ‘‘லாக்டவுன் லோன்லி’’ என்று குறிப்பிடுகிறது.

UK-வில் அதன் மேல் உள்ள கவலை காரணமாக, 2018ம் ஆண்டில் தனிமைக்காக ஒரு அமைச்சரை அரசாங்கம் நியமித்தது. ‘‘தனிமையை சமாளித்தல்’’ உத்தியின் ஒரு பகுதியாக, பல தொண்டு கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக 50 மில்லியன் பவுண்டுகளுக்கு மேல் (சுமார் 59 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பல நாள் தனிமையை மோசமான உடல் ஆரோக்கியத்துடன் இணைக்கின்றன மற்றும் டிமென்ஷியா, கரோனரி இதய நோய் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றின் அபாயத்தை அதிகரிக்கின்றன என்று கூறுகிறது. ஆராய்ச்சியாளர்கள், தனிமையை உயர் இரத்த அழுத்தம் அல்லது தினமும் 15 சிகரெட்டுகளை புகைப்பது போன்ற மரணத்திற் கான ஆபத்து காரணியுடன் ஒப்பிடு கின்றனர். நன்கு அறியப்பட்ட ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வு, 724 பேரை அவர்களின் முழு வாழ்க்கையிலும் கண்காணித்துள்ளது, அது ஒரு நபரின் நீண்ட கால உடல் மற்றும் மனநல நல்வாழ்வின் சிறந்த முன்கணிப்பாளராக சமூக உறவுகளை தெளிவாக தீர்மானித்துள்ளது. மோசமான உடல் ஆரோக்கியத்திற்கும் தனிமைக்கும் இடையே உள்ள தொடர்பு மிகவும் தெளிவாக உள்ளதால் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, கொரியா, நெதர்லாந்து மற்றும் பிற இடங்களில் உள்ள மருத்துவர்கள் தனிமையில் இருக்கும் தங்கள் நோயாளிகளை தொடர்ந்து பரிசோதித்து, அவர்களுக்கு சமூக நடவடிக்கைகளை பரிந்துரைகின்றனர். ஒரு பைலட் திட்டத்தில், சுகாதாரப் பாதுகாப்பு வழங்குநர்கள் நோயாளிகளின் தனிமை உணர்வை 49 சதவிகிதம் குறைத்துள்ளனர்.



*வேல்ஸ் நகரில் ஒரு மெம்மரி கஃபேயில் மக்கள்.*

பிபிசி தனிமை பரிசோதனை கணக்கெடுப்பின்படி, அதில் 16 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களும் 75 வயதுக்கு மேற்பட்டவர்களும், பாச்சுளர் மற்றும் விதவை மக்களும் அடங்குவர். ஆண்களை விட பெண்கள் அதிக தனிமையைப் புகாரளிக்கின்றனர், இருப்பினும் சில ஆராய்ச்சியாளர்கள் தனிமை போன்ற விரும்பத்தகாத உணர்வுகளைப் பற்றி பேச ஆண்கள் தயக்கம் காட்டுவதால் பாலின வேறுபாடு இருக்கலாம் என்று எச்சரிக்கின்றனர். மனநோய் மற்றும் மோசமான உடல் ஆரோக்கியம் ஆகியவை தனிமைக்கான கூடுதல் ஆபத்து காரணிகள்.

ஜூன் 2022ல், தனிமை விழிப் புணர்வு வாரத்தின் தொடக்கத்தில், UK அரசாங்கம் மேலும் ஒரு ஆராய்ச்சியை வெளியிட்டது, இது நீண்ட தனிமையின் தொடக்கத் துக்கும், தொடர்ச்சிக்கும் மனநலக் கோளாறு எவ்வாறு முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை நிரூபிக்கிறது. அறிக்கை ஒரு தீர்வையும் பரிந்துரைக்கிறது: இலக்குடனான விரைவு தலையீடு. ‘‘நீண்ட தனிமையை அனுபவிக்கும் நபர்கள் அது இல்லாதவர்களை காட்டிலும் கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகமாக மன உளைச்சலில் இருப்பதாக எங்கள் ஆய்வில் காட்டப் பட்டுள்ளது’’ என்று லண்டனை தளமாகக் கொண்ட தேசிய

சமூக நல மையத்தின் சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு இணை இயக்குநர் சோக்ரடிஸ் டினோஸ் விளக்குகிறார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப்பட உள்ள இலக்குடனான தலையீட்டிற்கான திருத்தப்பட்ட மூலோபாயத் திட்டத்தை உருவாக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் ஒன்றிணைந்தனர், அந்த தொண்டு நிதிக்கு 750 மில்லியன் பவுண்டுகள் (சுமார் 895 மில்லியன்) ஆதரவளிக்கப்பட்டது. ‘‘தனிமை நம் அனைவரையும் பாதிக்கும், இளம் வயதோர், ஊனமுற்றோர், நீண்ட காலம் உடல்நலமற்றவர்கள் ஆகியோர் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்பதை ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகிறது’’ என்று முன்னாள் தனிமை அமைச்சர் நைஜல் ஹடில்ஸ்டன் ஆராய்ச்சியின் அறிவிப்பில் கூறினார். ‘‘ தனிமைப்படுத்தப்பட்டதாக நினைக்கும் ஒருவரை அணுகு மாறு அனைவரையும் நான் ஊக்கு விக்கிறேன். தொற்றுநோய் காலத்தில் தனிமையைக் கையாள்வதில் அரசாங்கம் முன்னுரிமை அளித்தது, மேலும் ஆபத்தில் உள்ளவர்களைப் பாதுகாப்பதற்கான எங்கள் முயற்சி களை இப்போது இரட்டிப்பாக்குவோம்.

ரோட்டரி சங்கங்கள் தனிமைக்கான இயற்கையான மாற்று மருந்தாகும். கோவிட்-19 தொற்றுநோயின் தொடக்கத்தில், நேரில் சந்திப்புகள் குறைக்கப்பட்ட போது, ரோட்டரி உறுப்பினர்கள் முதியவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுடன் தொலைபேசி அழைப்புகள் மூலம் தொடர்பு கொண்டனர், அவர்களுக்காக வேலைகளை செய்தனர், மருந்துகளை வாங்கிக்கொடுத்தனர் மேலும் அவர்களின் நாய்களை நடை பயிற்சிக்காக கொண்டு சென்றனர்.

RC மெய்டன்ஹெட் பிரிட்ஜின் உறுப்பினரான லிசா ஹண்டர், தொற்றுநோய்களின் போது தேவைப் படும் குடும்பங்களுக்கு தனது சங்கத்தின் உதவியை திரட்டியதற்காக குயின்ஸ் 2022 புத்தாண்டு விருதுகள் பட்டியலில் பிரிட்டிஷ் எம்பயர் மெடலைப் பெற்றார்.

ரோட்டரி அல்லாத உறுப்பினர்கள் உட்பட 120 தன்னார்வலர்களைக் கொண்ட குழுவுடன், சங்கம் 150க்கும் மேற்பட்ட குடும்பங்களை ஆதரித்தது, 3,800க்கும் மேற்பட்ட வேலைகளைச் செய்தது. இது சுமார் 6,500 தன்னார்வ மணிநேரங்களுக்கு சமம்.

ரோட்டரி சங்கங்கள் UK முழுவதும் டஜன் கணக்கான மெமரி கஃபேக்களை நடத்துகின்றன. ஆரம்பகால டிமென்ஷியா உள்ளவர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்கள் சந்திக்க, விளையாட, அரட்டை அடிக்க, திரைப்படங்களைப் பார்க்க மற்றும் பாடுவதற்கு அவை மையப் புள்ளிகளாக இருக்கின்றன. 1990களில் நெதர்லாந்தில் முதலில் உருவாக்கப் பட்டது, RC வேட்பிரிட்ஜின் உறுப் பினரான டிம் ஜோன்ஸ் 2008-ல் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் உள்ள RI-க்கு இந்த அணுகுமுறை அறிமுகப்படுத்தினார்.

‘‘அந்த நேரத்தில், நான் கார்ன்வாலில் மனநல சேவைகளை நிர்வகிக்கும் தேசிய சுகாதார சேவைக்காக வேலை செய்து கொண்டிருந்தேன்’’ என்று ஜோன்ஸ் கூறுகிறார். அவர் அருகிலுள்ள லான்செஸ்டனில் உள்ள ஒரு மெமரி கஃபே பற்றி கேள்விப்பட்டார். பின்னர் வேட்பிரிட்ஜில் ரோட்டரி நடத்தும் முதல் மெமரி கஃபேவை நிறுவினார்.

இந்த நிகழ்வு மிகவும் வெற்றி கரமாக அமைந்தது, பின்னர் மற்ற ரோட்டரி சங்கங்கள் தங்கள் சமூகங்களில் மெமரி கஃபேக்களை ஏற்பாடு செய்ய ஜோன்ஸ் உதவியுள்ளார். ‘‘மெமரி கஃபேக்களின் யோசனை சக ஆதரவை வழங்குவதாகும். இதன் எளிய தத்துவம் நேர்மறையான அனுபவத்தை மக்களுக்கு கொடுத்து, ஒருவரையொருவர் ஆதரிக்க மக்களை ஒன்றிணைப்பது ஆகும்.’’

தற்போது தேசிய சுகாதார சேவை யிலிருந்து ஓய்வு பெற்ற ஜோன்ஸ், மெமரி கஃபேக்களின் நன்மைகள் குறித்து தனது சொந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகிறார். அவர் தனது கண்டு பிடிப்புகளை இன்னும் வெளியிட வில்லை என்றாலும், மற்றவர்களுடன் பழகுவதும் ஈடுபடுவதும் மூளையில் நன்மை பயக்கும் மாற்றங்களை உருவாக்குகிறது என்பதற்கான ஆதாரங்களைக் காண்கிறார். நினைவாற்றல் இழப்பு உள்ளவர்களுக்கு, இந்த அணுகு முறை அறிவாற்றல் தூண்டுதல் சிகிச்சையின் இலக்குகளுடன் ஒத்துப்போகிறது.

‘‘அல்சைமர் நோய்க்கு எந்த சிகிச்சையும் இல்லை. ஆனால் நாம் மீள்தன்மையை உருவாக்க முடியும், இது அல்சைமர்ஸின் முன்னேற்றத்தை மெதுவாக்கும் மற்றும் பிற டிமென்ஷியா கொண்டவர்களுக்கு ஆதரவளிக்கும் என்று சான்றுகள் காட்டுகின்றன. டிமென்ஷியா உள்ளவர்களிடையே மட்டுமல்லாமல், அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் கூட மெமரி கஃபேக்கள் தனிமையைச் சமாளிக்கும் அற்புதமான சரணாலயமாகும்.

பராமரிப்பாளர்களைக் கவனித்துக் கொள்வது பெரும்பாலும் கவனிக்கப் படாத சவாலாகும். தொற்றுநோயின் மற்றொரு விளைவு, நோய் காரணமாக ஒரு துணைவர், குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை கவனித்துக் கொள்பவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஆகும்.

இப்போது UK-வில் 10 மில்லி யனுக்கும் அதிகமான ஊதிய மற்ற பராமரிப்பாளர்கள் உள்ளனர் என லண்டன் இலாப நோக்கற்ற கேரர்ஸ் UK மதிப்பிட்டுள்ளது. அவர்களில் இளைஞர்கள் முதல் ஓய்வு பெற்றவர்கள் வரை உள்ளனர். 2020 முதல், கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் உள்ள RI இந்த சிக்கலை முன்னிலைப்படுத்த கேர்ஸ் UK உடன் கூட்டு சேர்ந்துள்ளது. கேரர்ஸ் UK தொலைபேசி உதவி எண், ஆன்லைன் சந்திப்புகள் மற்றும் பரஸ்பர ஆதரவை வழங்குவதற்காக பராமரிப்பாளர்கள் இணைக்கக்கூடிய ஆன்லைன் மன்றம் ஆகியவற்றை வழங்குகிறது.

பெர்ரியின் கூற்றுப்படி, 100க்கும் மேற்பட்ட ரோட்டரி சங்கத் தூதர்கள் மற்றும் மாவட்ட தலைவர்கள் தங்கள் சமூகங்களில் ஆயிரக்கணக்கான பராமரிப்பாளர்களை கேரர்ஸ் UK வழங்கும் இலவச சேவைகளுடன் இணைத்துள்ளனர்.

ஆகஸ்ட் 2022-இல், 2022–23 ரோட்டரி ஆண்டின் இறுதிக்குள் ஆதரவு மற்றும் ஆலோசனைக்காக 1 மில்லியன் பராமரிப்பாளர்களை அடையும் குறிக்கோளுடன் RIBI, ரோட்டரி மில்லியன் அன்பேயிட் கெரரஸ் பிரச்சாரத்தைத் தொடங்கியது.

©ரோட்டரி

புகைப்படங்கள்: செரினா ப்ரெளன்

# மேட்டுப்பாளையத்தில் செயற்கைக் கை பொருத்தல் முகாம்

ரோட்டரி செய்திக் குழு

மேட்டுப்பாளையம் நஞ்சையா லிங்கம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் RC மேட்டுப்பாளையம் பிரைம், RID 3203, RC பூனா டௌன்-டவுன், இனாலி அறக்கட்டளை இணைந்து நடத்திய செயற்கைக் கை பொருத்தல் முகாமில் கை இழந்த 250 பேருக்கு (இவர்களில் சிலருடைய செயற்கைக் கைகள் செயல்படாமல் இருந்தன) மோட்டார் பொருத்திய செயற்கைக் கைகள் வழங்கப்பட்டன.

“இந்தப் புதிய, மோட்டார் பொருத்திய செயற்கைக் கைகள் மின்கலன்மூலம் இயங்குகின்றன, அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன, கை இழந்தோர் இயற்கைக் கைகளைப் போல் பலவிதமான அசைவுகளைச் செய்ய மிகவும் நெகிழ்வுத் தன்மை கொண்டுள்ளன” என்றார் RC மேட்டுப்பாளையம் பிரைம் பதிவுத் தலைவரும், இந்த திட்டத்தின் தலைவருமான டாக்டர் அரவிந்த் கார்த்திகேயன்.

“பலன் பெற்றவர்களில் சிலர் பக்கத்து மாநிலங்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் அனைவருக்கும் புதிதாகப் பொருத்தப்பட்ட கைகளைச் செயல்திறனுடன் பயன்படுத்துவது எப்படி என்று கற்பிக்கப்பட்டது. தங்களுடைய புதிய செயற்கைக் கைகளைக் கொண்டு பலவிதமான அசைவுகளைச் செய்தபின் அவர்களுடைய முகங்களில் வந்த புன்னகை எங்களுக்கு மிகுந்த மன நிறைவை அளித்தது” என்றார் கார்த்திகேயன்.

இத்துடன், முகாமுக்குப் பிறகும் இந்தப் பலன் பெறுவோருக்குத் தொடர்ந்த சேவைக்கும் இச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் ஓர் உதவித் தொலைபேசி எண் வழங்கப்பட்டுள்ளது, “செயற்கைக் கை பொருத்தப்பட்டவர்கள் இனாலி அறக்கட்டளையைத் தொலைபேசியில் அழைத்தால் பழுதான உதிரி பாகங்கள், மின்கலனை மாற்றிக்கொள்ளலாம்.” முகாமை முறையாக நடத்துவதற்கு அறக்கட்டளையின் தன்னார்வலர் குழு ஒன்று மும்பையிலிருந்து வந்தது. திட்டத் தலைவர் கார்த்திகேயன், சங்கச் செயலாளர் ஜெயராமன், பிற உறுப்பினர்கள் நன்கு ஒருங்கிணைத்து இந்தச் செயற்கைக் கை பொருத்தல் முகாமைப் பெரிய வெற்றியடையச் செய்தார்கள். DG B இளங்குமரன் முகாமுக்கு வந்தார், இச்சங்கத்தின் சேவையைப் பாராட்டினார்.■



*செயற்கைக் கை பொருத்தப்பட்ட ஒருவருடன் DG B இளங்குமரன், திட்டத்தலைவர் அரவிந்த் கார்த்திகேயன் மற்றும் RC மேட்டுப்பாளையம் பிரைம் உறுப்பினர்கள்.*



# இரண்டு தேதிகளின் கதை

சந்தியா ராவ்


ஜனவரி 26 மற்றும் பிப்ரவரி 18. முதலாவது குடியரசு தினம். 1950ல் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த தேதி குடியரசு தினம் என கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு, ஆகஸ்ட் 15, 2022 அன்று வெளியிடப்பட்ட ஒரு புத்தகத்தைப் நான் படிக்க ஆரம்பித்த நாள் அதுதான். P சாய்நாத் எழுதிய தி லாஸ்ட் ஹீரோஸ்: ஃபூட் சோல்ஜர்ஸ் அஃப் இந்தியன் ஃபிரீடம். மகாராஷ்டிராவின் குண்டல், சாங்லி, டூபன் சேனாவின் தலைவர் கேப்டன் பாவ் (ராமச்சந்திர ஸ்ரீபதி லாட்) என்பவரின் மேற்கோள்களை இது கொண்டுள்ளது. கேப்டன் பாவ் யார், அவர் என்ன சொன்னார் என்று நீங்கள் கேட்கலாம். ஒரு சுதந்திரப் போராட்ட வீரரான அவர், 2022ல் தனது 100வது வயதில் காலமானார். “நாங்கள் சுதந்திரம் மற்றும் சுய ஆளுமை ஆகிய இரண்டு விஷயங்களுக்காகப் போராடினோம். “நாம் சுய ஆளுமை அடைந்தோம்.” சற்று பொறுமையாக சிந்தியுங்கள், அவருடைய வார்த்தைகளின் அர்த்தம் நம் மனதுக்குள் இறங்கும். நமது தேசம் சுய ஆளுமையுடையது, ஆனால் நாம் சுதந்திரமான மக்களா?

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் எஞ்சியிருக்கும் சில வீரர்களின் அனுபவங்களை பல ஆண்டு களாக கண்காணித்து பதிவுசெய்து, விருது பெற்ற பத்திரிகையாளர் சாய்நாத், நாடு முழுவதும் உள்ள அவர்களின் எழுச்சியூட்டும் கதைகளைக் கண்டெடுத்துள்ளார். அவர்கள் அறியப்படாத ஹீரோக்கள், அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் துணிச்சல் இல்லாமல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் நாம் பெற்றிருக்க சாத்தியமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள் இல்லாமல் எந்த ஒரு புரட்சியும் இல்லை. தலைவர்களும் இல்லை. துரதிர்ஷ்டவசமாக, அவர்களில் பலர் சுதந்திரத்திற்குப் பிறகு மறக்கப்பட்டனர், அவர்கள் பெரும் கஷ்டங்களைச் சகிக்க வேண்டியிருந்தது. சுதந்திரப் போராட்ட வீரர்களை ஆதரிப்பதற்காக அரசு திட்டம் இருந்தாலும், இழப்பீடு குறைவாக இருக்கிறது அது மட்டுமல்லாமல், ஆதரவைப் பெறுவதற்கான அளவுகோலும் கடுமையாக உள்ளது.

ஒடிசாவின் கோராபுட்டில் உள்ள ஜெய்ப்பூரைச் சேர்ந்த லக்ஷ்மி இந்திரா பாண்டாவை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் சிறைக்குச் சென்றதில்லை. நான் துப்பாக்கி சூட்டில் பயிற்சி பெற்றேன், ஆனால் யாரையும் துப்பாக்கியால் சுடவில்லை, அதனால் நான் சுதந்திரப் போராட்ட வீரர் இல்லை என்று அர்த்தமா?’ என்று அவர் கேட்கிறார். பழைய பர்மாவில் ரயில் பாதைகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பெற்றோருக்குப் பிறந்த லக்ஷ்மி, தனது பெற்றோர் பிரிட்டிஷ் குண்டு வீச்சில் கொல்லப் பட்டதாக கூறுகிறார். அதன் பிறகு அவர் ஆங்கிலேயர்களுடன் சண்டையிட விரும்பினார், எனவே அவர் தனது இளமை பருவத்தில் நேதாஜியின் INA (இந்திய தேசிய இராணுவம்)இல் சேர்ந்தார். அந்தப் புத்தகத்தில் அவர் துப்பாக்கியைப் பிடித்திருப்பது போன்ற புகைப்படம் உள்ளது, மேலும் அவரைப் பற்றி நாம் கேள்விப்பட ஒரே காரணம், ஒரு இளம் நண்பரைக் கொண்டிருந்த ஒரு பத்திரிகையாளரால் தான், அந்த இளம் நண்பர் சில சமயங்களில் தனது பாட்டிக்கு மருந்துகள் வாங்க உதவுவதற்காக பணம் கேட்டுள்ளார். ஆர்வத்துடனும் சற்றே சந்தேகத்துடனும் பத்திரிக்கையாளர் விசாரித்ததில் அந்தப் பாட்டி வேறு யாருமல்ல, லக்ஷ்மி தான் என்பதை கண்டுபிடித்தார், அவர் 13 வயதில், INAவின் வன முகாம்களில் சண்டையிடச் சென்றவர்களுக்காக சமைத்துள்ளார். தற்போது, பல வருடங்களாக வீட்டு வேலை செய்து வந்துள்ளார்.

சாய்நாத் நிறுவிய ஆன்லைன் ஆதாரமான, பீப்பிள்ஸ் ஆர்க்கிவ் ஆஃப் ரூரல் இந்தியா (PARI) மூலம் தொகுக்கப்பட்ட இந்தக் கதைகளைப் படிக்கும் போது நீங்கள் நெகிழ்ந்தும் உத்வேகமும் அடைவீர்கள். சுவாரஸ்யமாக, புத்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் PARI சுதந்திரப் போராளிகள் கேலரிக்கான QR குறியீட்டுடன் முடிவடைகிறது. கிளிக் செய்தால் மேலும் அறிந்து கொள்வீர்கள். தற்போது கேப்டன் பாவ்விடம் திரும்பலாம். 1943இல், வங்காளப் பஞ்சம் தலைவிரித் தாடுகையில், அவரும் அவரது சக புரட்சியாளர்களும் ஆங்கிலேயர்களின் சம்பளத்தை ஏற்றிச் சென்ற புனே-மிராஜ் ரயிலை மறித்து ஆக்கிரமித்தனர். அவர்கள் கடத்திச் சென்ற தொகை ரூ.19,175; அந்த நேரத்தில் அது 60,000 கிலோ அரிசியை வாங்கியிருக்கும். ரயிலைக் கொள்ளையடித்தோம் என்று சொல்வது நியாயமற்றது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்திய மக்களிடமிருந்து திருடிய பணத்தைத்தான் நாங்கள் திரும்பப் பெற்றோம்” என்று கேப்டன் பாவ் கடுமையாக கூறுகிறார்.

மல்லு ஸ்வராஜ்யம் ஆங்கிலேயர் களை உண்டிக்கோல் மூலம் எதிர் கொண்டார்; பாஜி முகமது அவரது குழுவை புரட்சிமிக்க உபதேசத்



துடன் தலைமை தாங்கினார் — நாம் இறப்போம், ஆனால் கொல்ல மாட்டோம்; தேமாட்டி தேய் 'சாலிஹான்' தனது கிராமத்தை எரித்து சூறையாடிய பிரிட்டிஷ் அதிகாரிகளை லத்தியால் விரட்டி யடித்தார். காந்தியவாதி H S துரை சாமிக்கு அவரது பேனா தான் லத்தி: பிரிட்டிஷ் ராஜ் செய்தித்தாள்கள் மூலம் வீழ்த்தப்பட்டது, 'நான் ஏன் இவ்வளவு செய்தித்தாள்களை பதிவு செய்கிறேன் என்று கலெக்டர் விசாரிக்கவில்லை. அவர்கள் ஒரு தலைப்பை நிறுத்திய போது, இன்னொன்றை மீண்டும் தொடங்கினேன். அவர்கள் "பௌரவாணி'யை நிறுத்த, நான் "பௌரவீரா"வைத் தொடங்கினேன்." அவர்களின் உத்திகள் மனதைக் கவருகிறது, அவர்களின் மன உறுதி நம்மை வியக்க வைக்கிறது. படித்தால்தான் தெரியும், இத்தகைய மண்ணின் மக்களாகிய நாம் அவர்களின் நினைவை போற்றுவதற்கு ஒரே வழி அனைவருக்கும் அனை வரிடமிருந்தும் சுதந்திரத்தை செயல்படுத்துவது. அது தான் உண்மையில் ஜனவரி 26.

பிப்ரவரி 18, இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற இயற்கை ஆர்வலர், எழுத்தாளர் மற்றும் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் ஒருவரின் நினைவு நாளைக் குறிக்கிறது. 1950ஆம் ஆண்டு, இந்தியா குடியரசு நாடாக மாறிய ஆண்டு முதல், அவர் இறந்த 1996 வரை, 46 ஆண்டுகளாக இடைவிடாது, தி ஸ்டேட்ஸ்மேன் செய்தித்தாளில் "கன்ட்ரி நோட்புக்" என்ற இயற்கை வரலாறு குறித்து கட்டுரையை எழுதினார். M கிருஷ்ணன் கருப்பு வெள்ளை புகைப்படம் எடுத்தல், வனவிலங்குகள் மற்றும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆர்வமாக இருந்தார். இதில் கடைசி விஷயத்தின் பெருமை அவரது தந்தையை சேரும். கடந்த 1898ஆம் ஆண்டு தமிழில் முதல் யதார்த்த நாவலான "பத்மாவதி சரித்திரம்" வெளியிட்டது அவரது தந்தை, A மாதவையா. கிருஷ்ணன், மெட்ராஸில் உள்ள மயிலாப்பூரில் பசுமையான சூழலில் வளர்ந்தார். அங்குள்ள பறவைகள் மற்றும்



*லஷ்மி இந்திரா பான்டா*

எப்போதாவது தென்படும் பிளாக்பக் மற்றும் குள்ளநரி ஆகியவற்றுடன் ஒரு உறவை வளர்த்துக் கொண்டார். 11 வயதில், அவர் தனது செல்லப் பிராணியாக ஒரு கீறிபிள்ளையை வைத்திருந்தார்.

ஒரு வழக்கறிஞராக பயிற்சி பெற்ற அவர், பல்வேறு வேலைகளை செய்தார், இது இறுதியில் அவரை தற்போதைய கர்நாடகாவில் உள்ள சண்டூர் என்ற சிறிய சமஸ்தானத்திற்கு அழைத்துச் சென்றது. இந்த பள்ளத் தாக்கின் மலைகள், காடுகள், வயல்வெளிகள் மற்றும் புதர்கள் இயற்கையின் மீதான அவரது அன்பை ஊட்டி வளர்த்தது. சண்டூர் 1949-இல் இந்திய ஒன்றியத்தில் இணைக்கப் பட்டது, அதன் பிறகு கிருஷ்ணன் மெட்ராஸ் திரும்பினார். முழுநேர இயற்கை ஆர்வலர், எழுத்தாளர் மற்றும் புகைப்படக் கலைஞராக தனது வாழ்க்கையை அர்ப்பணித்து கொண்டார்.

அவரது படைப்புகள் அதிகம் அச்சில் இல்லை. ஆனால், அவரது புகைப்படங்கள் மற்றும் எழுத்துக் களின் நினைவுப் புத்தகமான ஐ இன் தி ஜங்கிள் என்ற பெயரில், TNA பெருமாளுடன் ஆஷிஷ் மற்றும் சாந்தி சந்தோலா ஆகியோரால் தொகுக்கப்பட்டு, யுனிவர்சிட்டிஸ் பிரஸ் (இந்தியா) 2006இல் வெளி யிட்டது. அவரது மறைவுக்கு சற்று முன்பு,கிருஷ்ணனை நேர்காணல் செய்யும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. மிக குறைவாக அலங்கரிக்கப்பட்ட அவர் அறை நெகடிவ் சுருள்கள், கருப்பு வெள்ளை புகைப்படங்கள், இயற்கை பற்றிய புத்தகங்கள் ஆகியவற்றை கொண்டு சூழப்பட்டிருந்தது. அவர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பகிர்ந்துகொண்ட நிஜக் கதைகளால் மெஸ்மரிசம் செய்யப்பட்டேன். அவர் ஒரு தலைசிறந்த கதை சொல்லி. குறிப்பாக ஒரு யானையுடன் அவர் நேருக்கு நேர் வந்ததையும், மனித வாசனை தெரியாமல் இருக்க யானையின் சாணத்தை தனது உடலில் தேய்த்ததும் குறிப்பாக என் நினைவில் நிற்கிறது.

இந்த புத்தகத்தில் ராமச்சந்திர குஹாவால் எழுதப்பட்ட விரிவான வாழ்க்கை வரலாறு, அழகான புகைப்படங்கள் மற்றும் கிருஷ்ணனின் எழுத்துக்களில் இருந்து முக்கியமான சில பகுதிகள் உள்ளன. 'தி மிசாந்த்ரோபாய்டு' என்ற தலைப்பில் குரங்கு இனமான சவுத் மக்காக் பற்றிய ஒரு பகுதி இங்கே: 'அது அதன் குரங்கு சேட்டைகளால் சோர்வடையும் போது, மக்காக் ஒரு பாறையின் மீது அல்லது உயரமான கொம்பு மீது பதுங்கி அமர்ந்திருக்கும். அது உண்மையில் எவ்வளவு கோபமாகவும் அதிருப்தியாகவும் இருக்கிறது என்பதை நீங்கள் காண்பீர்கள். அது அப்படியே மகிழ்ச்சியற்று, அமைதியின்றி அமர்ந்து அடிவானத்தில் வெறித்துப் பார்க்கிறது. சூரியன் இனிமையாக பிரகாசிக்கும், மேலும் அதை சுற்றி அனைத்தும் பிரகாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும், ஆனால் அங்கே அது அமைதியாகவும், மந்தமாகவும் அமர்ந்து, அதன் துக்கங்களின் இருளில் மூழ்கி இருக்கும். புத்தி மற்றும் பகுத்தறிவின் முதல் மினுமினுப்புகளால் ஒருவேளை அது தொந்தரவு செய்யப்படலாம். அது இன்னும் கொஞ்சம் பரிணாம வளர்ச்சியடைந்திருந்தால்– அது மிகவும் திருப்தியாக உணர்ந் திருக்கும், அதன் பல சொந்தங்களை போலவே!'

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# விருதுநகரில் பெண்களுக்கு புதிய கழிப்பறை பிளாக்

V முத்துகுமரன்

தமிழ்நாட்டில், விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் சர்வதேச மானிய உதவித் திட்டத்தில் மகளிர்க்கு என கழிப்பறை தொகுதி (பிளாக்) நிறுவப்பட்டது பள்ளி மாணவிகளுக்கும் ஆசிரியர் களுக்கும் மன உறுதியை ஏற்படுத் தியுள்ளது. இந்த ஆண்டு குடியரசு தினவிழாவை பள்ளியில் நாங்கள் கொண்டாடியபோது மாணவிகள் முகமலர்ச்சியுடன் வாழ்த்தியது எங்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது என்கிறார் RID 3212-க்கு உட்பட்ட ராஜபாளையம் கிங்க்ஸ் சிட்டி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும் மாவட்ட துணை கமிட்டியின் பணிக்குழு தலைவருமான N கோபாலகிருஷ்ணன்.

மூன்று மாதத்துக்கு ஒருமுறை சங்கத்தின் மானியக்குழு N A அன்னப்ப ராஜா நினைவு உயர் நிலைப் பள்ளிக்குச் சென்று ரோட்டரி செய்து கொடுத்த வசதிகளை ஆய்வு செய்கிறது. மகளிர்க்கான கழிப்பறை, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், தொடுதிரையுடன்கூடிய தொடர்பு பலகை, வைஃபை இணைப்பு, உடற்பயிற்சி நிலையம், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவை ரூ.48.57 லட்சத்தில் செய்துதரப்பட்டுள்ளன. PDG P N B முருகதாஸ் (2020–21) பதவிக் காலத்தில் சர்வதேச நிதியுதவியிலான இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பள்ளியின் பிரதிநிதிகளுடன் மானியக்குழுவினர் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, சர்வதேச மானிய உதவி கேட்டு விண்ணப்பிக்கப் பட்டது. மாவட்ட ஆளுநர் முருகதாஸ் DDF நிதியிலிருந்து 17,500 டாலரை விடுவித்தார். சிவகாசி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன் S மகேஸ்வரன் 30,000 டாலருக்கு ஏற்பாடு செய்தார். மேலும் RID 3221 உட்பட்ட 8 சங்கங்களிடமிருந்து பங்களிப்பும், நன்கொடைகளும் பெறப்பட்டன. புதிய பிளாக்கில் 25 மாணவிகளுக்கு ஒரு கழிப்பறை என்ற வழிகாட்டு முறை கடைபிடிக்கப்பட்டது மற்றும் அமெரிக்காவில் உள்ள RID 5580 மாவட்டத்தின் பர்கோ மூர்ஹெட் A M ரோட்டரி சங்கம் சர்வதேச கூட்டாளியாக செயல்பட்டது.

பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் தமிழ்ச்செல்வி கூறுகையில், புதிய கழிப்பறை தொகுதி நவீனமாகவும், நேர்த்தியாகவும் உள்ளது. அங்குள்ள கைகழுவும் நிலையமும் சிறப்பாக உள்ளது என்றார். மகளிர்க்கு புதிய கழிப்பறை கட்டப்பட்டுள்ளதால் மேலும் புதிதாக மாணவிகள் பள்ளியில் சேரும் வாய்ப்பு உள்ளது என்று பள்ளி தலைமை ஆசிரியர் ரமேஷ் நம்பிக்கையுடன் கூறினார். பள்ளியில் மாணவர்கள் 820 பேரும், மாணவிகள் 630 பேரும் படித்து வருகின்றனர். பள்ளியில் இருக்கும் இரண்டு கணினி பலகைகள் மூலம் மாணவர்கள் டிஜிட்டல் முறையில் கல்வி கற்க முடிகிறது. விளையாட்டு உபகரணங்கள், இசைக் கருவிகள் இருப்பதால் மாணவர்கள் பல நிகழ்வுகளிலும் பங்கேற்க்க முடிகிறது.

நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெற்றோர்களின் குழந்தைகள் படிக்கும் இப்பள்ளியில் சர்வதேச மானிய திட்டத்தை செயல்படுத்தியது குறித்து சங்கத்தின் தலைவர் B குமார் ராஜா மகிழ்ச்சி தெரிவிக்கிறார். PDG முருகதாஸ், மாவட்ட மானிய துணைக்குழு தலைவர் A S P ஆறுமுகசெல்வன், பள்ளியின் செயலாளர் N R கிருஷ்ணமூர்த்தி மற்றும் AG A K பாஸ்கரன் முன்னிலையில் புதிய வசதிகளை DG V R முத்து தொடங்கிவைத்தார். ■

*பள்ளியில் விளையாட்டு உபகரணங்கள் சங்கம் அளித்து, அதன் துவக்க விழாவில் DG V R முத்து.*



# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## பிவாடி-யில் நெருக்கடி நேர மருத்துவ உதவி வண்டி



*ஜோத்பூர் நகராட்சி ஆணையர் ரோஹிதஷ்வா டொமார் திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

ஹைனான் காலநிலை அமைப்பின் CSR நிதி உதவியுடன் RC பிவாடி, RID 3053, பிவாடி ரோட்டரி அறக்கட்டளைக்கு ஒரு நெருக்கடி நேர மருத்துவ உதவி வண்டியை வழங்கியது. இத்திட்டத்தை ஜோத்பூர் நகராட்சி ஆணையத்தின் ஆணையர் ரோஹிதஷ்வா டொமார் தொடங்கிவைத்தார்.■

## வல்சாட்-ல் மருத்துவ முகாம்



RC சூரத் டாபி, RID 3060, கோபால் தொண்டு அறக் கட்டளை, லோக் மங்களம் தொண்டு அறக்கட்டளை இணைந்து வல்சாட்-ல் உள்ள ஜமாலியா கிராமத்தில் ரூ.2.1 லட்சம் செலவில் ஒரு மருத்துவ முகாமை நடத்தின. இதில் 1,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பலன் பெற்றார்கள். இந்தச் சங்கம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இந்த முகாமை நடத்துகிறது.■

## ரூர்கேலா-வில் ரோட்டரி கடிகாரம்



*RC ரூர்கேலா ராயல்ஸ் நிறுவிய கடிகாரக் கூண்டு.*

RC ரூர்கேலா ராயல்ஸ், RID 3261, ரூர்கேலா நகரில் ரோட்டரியின் பொதுத்தோற்றத்தை மேம்படுத்த 22 அடி கடிகாரக் கூண்டு ஒன்றை நிறுவியது. இந்தக் கூண்டின் மீது நான்கு அடி விட்டம் கொண்ட, GPS தொழில்நுட்பம் உள்ள கடிகாரம் ரோட்டரி சின்னத்துடன் அமைந்துள்ளது. நான்கு முகங்களைக் கொண்ட இந்தக் கடிகாரத்தை எல்லாப் பக்கங்களில் இருந்தும் காணலாம்.■

## மூட்பிட்ரியில் டயாலிசிஸ் மையம்



*டயாலிசிஸ் மையம் திறப்பு விழாவில்.*

RC மூட்பிட்ரி, RID 3181, மூட்பிட்ரியில் உள்ள G V பாய் மருத்துவமனையில் மூன்று இயந்திரங்கள் கொண்ட ஒரு டயாலிசிஸ் மையத்தை $36,000 மதிப்பிலான GG மூலம் RC நியு டம்பா நூன், RID 6890, USA, உதவியுடன் நிறுவியுள்ளது.■

# வாணி ஜெய்ராம்

இசை & மெல்லிசை

## ஒரு வயதற்ற குரல் அமைதியானது.

**S R மது**

அக்டோபர் 1983-இல், பாடகி வாணி ஜெய்ராம், அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியுடன் ஒரு திடீர் சந்திப்பு நேர்ந்தது. டெல்லியில் நடக்கும் விஸ்வ ஹிந்து சம்மேளனத்தில் சரஸ்வதி வந்தனம் (ஆவாஹனம்) பாட இந்திரா விரும்புவதாக அவரிடம் கூறப்பட்டது. அவரது நேர்த்தியான தொகுப்பு உற்சாக மான கைதட்டலைப் பெற்றது. மேடையில் அவரைப் பாராட்டிய பிறகு, “ஒவ்வொரு கலைஞரும் என்னை அழைக்கிறார்கள், நீங்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை?” என்று பிரதமர் கேட்க, அதிர்ச்சி யடைந்த வாணி, நான் ஒரு சாதாரண குடிமகள், நீங்கள் தான் பிரதமர். நான் உங்களை எப்படி தொந்தரவு செய்ய முடியும்?”என்றார். பிரதமர் தனது உதவியாளர் பக்கம் திரும்பி, “தயவுசெய்து வாணி ஜெயராமுக்கு திங்கட்கிழமை அப்பாயின்மென்ட் கொடுங்கள்” என்றார். பின்னர், இந்திரா அவரை மிகவும் அன்பாக வரவேற்று பேசினார்.



*வாணி ஜெய்ராம்*

வாணியின் 50 ஆண்டுகால வாழ்க்கையில் பல விஜபி சந்திப்புகளில் இதுவும் ஒன்று. 1945ஆம் ஆண்டு வேலூரில் பிறந்த இவர், தனது 78ஆவது வயதில் இந்த ஆண்டு பிப்ரவரி 4ஆம் தேதி தனது இல்லத்தில் தவறி விழுந்து உயிரிழந்தார். இந்த விஷயம் அறிந்த இசை உலகம் அதிர்ச்சியடைந்தது. அவர் 19 மொழிகளில் 10,000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, மூன்று தேசிய விருதுகள், இரண்டு பிலிம்பேர், ஒரு டான்சென் சம்மான், பல மாநில அரசு விருதுகள், எண்ணற்ற தனியார் விருதுகள் மற்றும் கடந்த ஆண்டு நியூயார்க்கில் ஒன்றையும் வென்றுள்ளார். இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அவருக்கு பத்ம பூஷன் விருது அறிவிக்கப்பட்டது.

வாணிக்கு கோடிக்கணக்கான ரசிகர் கூட்டம் உண்டு. ஒருமுறை டெல்லியில் உள்ள பெங்காலி சங்கத்தில் அவர் பாடினார். முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் வாணியிடம் அவரது ‘Guddi’ பாடலான ஹம் கோ மன் கி சக்தி தேனா பாடல் உத்வேகம் அளிப்பதாகவும், அதை தினமும் கேட்பதாகவும் கூறினார். வாணியை தன் வீட்டிற்கு மதிய உணவுக்கு அழைத்தார். அவரது

வீட்டில், சுஷ்மா வாணியிடம் பாடலைப் பாடச் சொன்னார், மேலும் அவரது கணவரையும், மகளையும் – அவரது நாயையும் கூட – கேட்க வைத்தார்.

தமிழ்நாட்டின் பல முதல்வர் களான காமராஜ், பக்தவத்சலம், கருணாநிதி, எம்.ஜி.ஆர்., மற்றும் ஜெயலலிதா ஆகியோரால் வாணிக்கு பாராட்டும் கிடைத்துள்ளது.

எம்.ஜி.ஆர்., அதிமுகவைத் தொடங்கியபோது, வாணி ஜெயராம் பாடிய வாசல் எங்கும் ரெட்டை இலை கோலமிடுங்கள் என்ற பாடல் கட்சியின் கீதமாக மாறியது.

1975-ஆம் ஆண்டு ஜெயலலிதா-சிவாஜி நடித்த அவன் தான் மனிதன் படத்தில் இருந்து வாணியின் எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது, அது எந்த தேவதையின் குரலோ என்ற பாடலை ஜெயலலிதா மிகவும் விரும்பினார். அந்த பாடலுக்கு இசையமைத்தவர் M S விஸ்வநாதன்.

வேலூரில் இசை நாட்டமுள்ள குடும்பத்தில் பிறந்தவர் வாணி ஜெய்ராம். அவரது தாயார் ஒரு பாடகி. வாணி ஐந்து வயதிலேயே ராகங்களை புரிந்துக்கொண்டார். கடலூர் ஸ்ரீநிவாச ஐயங்கார், T R பாலசுப்ரமணியன் மற்றும் R S மணி ஆகியோரிடம் கர்நாடக இசையில் பயிற்சி பெற்றார். தனது எட்டாவது வயதில் அகில இந்திய வானொலியில் பாடினார். அவர் தனது பதின்ம வயதிலும் கச்சேரிகளை வழங்கினார்.

வாணி பள்ளி மற்றும் கல்லூரியில் படிப்பில் மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் – பாடல், நாடகம், வரைதல், ஓவியம், சமையல், எம்பிராய்டரி ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். அவர் கல்வி செயல்திறன், நடிப்பு மற்றும் பாடலுக்காக பரிசுகளை வென்றார். இருப்பினும்,



*பண்டிட் ரவிசங்கருடன் வாணி ஜெய்ராம்.*

அவரை மிகவும் கவர்ந்தது இந்தி திரைப்பட இசை. ''ரஃபி, லதா, மன்னா டே, கிஷோர் மற்றும் பிறரின் பாடல்களில் உள்ள மெல்லிசையையும் கச்சிதத்தையும் நான் ரசித்தேன்,'' என்று அவர் கூறியுள்ளார். புதன்கிழமை மாலைகளில் வானொலியிடம் ஒட்டி அமர்ந்து அமீன் சயானியின் பினாகா கீத்மாலாவை உள்வாங்கிக்கொண்டார். அந்த நிகழ்ச்சி நிரலில் அவர் எப்போது இடம் பெறுவார் என்று கனவு கண்டார்.

அவரது தாயார் திரைப்பட இசை மீது ஏன் இந்த மோகம்? கல்யாணம் ஆகும் வரை காத்திரு. உன் கணவர் ஒப்புதல் அளித்தால் நீ திரைப்பட இசையில் பாடலாம் என்றார்.

பட்டப்படிப்பை முடித்த வாணி, பாரத ஸ்டேட் வங்கியில் வேலைக்குச் சேர்ந்தார். 1969ல், அவர் ஒரு கார்ப்பரேட் நிர்வாகியான ஜெய்ராமை மணந்தார். பண்டிட் ரவிசங்கரிடம் பயின்ற சிறந்த சிதார் இசைக் கலைஞர் ஜெய்ராம். வாணியை இந்துஸ்தானி இசையை கற்க ஊக்குவித்தார். பாட்டியாலா கரானாவின் புகழ்பெற்ற உஸ்தாத் அப்துல் ரஹ்மான் கான், வாணியின் பாடலைக் கேட்டதும் அவரது குருவாக இருக்க ஒப்புக்கொண்டார்.

உஸ்தாத் ஒரு துல்லியமான குரு. அவர் வாணியை வேலையை கைவிடச் செய்தார், மேலும் அவருக்கு ஹிந்துஸ்தானி இசையில் மட்டுமல்லாமல், குரல் கலாச்சாரத்திலும் பயிற்சி அளித்தார், இது வாணியின் பாடல் வாழ்க்கையில் பெரிதும் உதவியது. தும்ரி, கஜல் மற்றும் பஜன் போன்ற பல்வேறு குரல் வடிவங்களின் நுணுக்கங்களை அவர் உஸ்தாதிடம் இருந்து கற்றுக்கொண்டார். அவர் வாணியை இசையமைப்பாளர் வசந்த் தேசாய்க்கு அறிமுகப்படுத் தினார்.தேசாய் அவரது குரல் மற்றும் திறமையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார், புகழ்பெற்ற குமார் கந்தர்வாவுடன் ஒரு மராத்தி ஆல்பத்திற்காகவும், மேலும் அவரது முதல் திரைப்படமான Guddi-க்காக அவரை ஒப்பந்தம் செய்தார்.

பொதுமக்கள் அப்படத்தை விரும்பினர், மேலும் வாணியின் அறிமுகம் ஒரு பரபரப்பாக இருந்தது; அவரது குரல் மற்றும் பாரம்பரிய திறமை அவருக்கு தாராளமான பாராட்டுகளை வென்றது. இப்போது கிளாசிக் பாடலான

போலே ரே பாபிஹாரா பாடல் எல்லா இடங்களிலும் ஒலிக்கப் பட்டது மற்றும் பாரம்பரிய திரைப்படப் பாடல்களுக்கான மதிப்புமிக்க தான்சென் சம்மான் உட்பட ஐந்து விருதுகளை வென்றது. இது தொடர்ந்து 16 வாரங்கள் பினாகா கீத்மாலா தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தது. "இது நடந்த முதல் முறை, நான் பரவசத்தில் கண்ணீர் சிந்தினேன்," என்று அவர் கூறினார். படத்தில் உள்ள ஹம் கோ மன் கி சக்தி தேனா என்ற குழந்தைகளின் உருக்கமான கோரஸ் பாடலும் பினாகா தரவரிசையில் இடம்பிடித்தது. வட இந்தியாவின் பல பள்ளிகளில் இது பள்ளி பிரார்த்தனையாக மாறியது. வாணி, வசந்த் தேசாய் உடன் மகாராஷ்டிரா முழுவதும் பரவலாக சுற்றுப்பயணம் செய்தார், மேலும் இந்த பாடல்களையும் பிற பாடல்களையும் குழந்தைகளுக்கு கற்பித்தார்.

பிரபல பாலிவுட் இசை யமைப்பாளர்கள் வாணியை நாடினர். நௌஷாத்தின் பகீசா (1972)இலிருந்து வந்த மோஜன் சௌதென் கர் பல குறிப்பிடத்தக்க பாடல்களில் ஒன்றாகும். ஆனால் அந்த குட்டி வெற்றி திரும்ப கிடைக்கவில்லை. பாலிவுட்டில் வாணியின் அடுத்த பெரிய வெற்றி மீரா (1979). மேஸ்ட்ரோ ரவிசங்கரின் இசையில், அவர் 12 பரவசமான பஜன்களைப் பாடினார், இதில் "மேரே தோ கிரிதர் கோபாலா"வும் அடங்கும். இதற்காக சிறந்த பின்னணிப் பாடகருக்கான பிலிம்பேர் விருதை வென்றார்.

## தமிழ் மற்றும் தென்னிந்திய சினிமா

1970களில் தமிழ் மற்றும் தென்னிந்திய சினிமாவில் வாணி தன் சகாப்தத்தை தொடங்கினார். P சுசீலாவும், S ஜானகியும் நன்கு நிலை நிறுத்தப்பட்டிருந்தாலும், வாணியின் மெல்லிசை குரல், சரியான ஒலிப்பு, கிளாசிக்கல் ராகங்கள் பற்றிய அறிவு, பாடகியாக அவரது பரந்த ஆற்றல், இனிமையான குணம் ஆகியவற்றால் சிறந்த இசையமைப்பாளர்கள், இசைத் துறை மற்றும் பொதுமக்களால் விரும்பப்பட்டார்..

கிளாசிக்கல் பயிற்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி, அவர் ஒருமுறை கூறியது, "ஒரு ராகத்தின் நிறத்தை நீங்கள் புரிந்து கொள்ளாவிட்டால், ஒரு பாடலுக்கு நீங்கள் நியாயமாக இருக்க முடியாது. கிளாசிக்கல் மியூசிக் பயிற்சியானது முழுமையாகவும், குறைகள் இல்லாமல் பாடுவதையும் செயல்படுத்துகிறது.

1974 ஆம் ஆண்டில், "தீர்க சுமங்கலி"யில் இசையமைப்பாளர் M S விஸ்வநாதனுக்காக வாணியின் காதல் பாடல் மல்லிகை என் மன்னன் தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் எதிரொலித்தது. இது வாணி



*மீரா படத்திற்காக சிறந்த பின்னணி பாடகிக்கான விருதை பின்னணி பாடகர் மகேந்திர கபூரிடமிருந்து வாணி ஜெய்ராம் பெறுகிறார்.*

மற்றும் பழம்பெரும் M S V ஆகியோருக்கு இடையே ஒரு அழகான மற்றும் ஆக்கபூர்வமான கூட்டாண்மையைத் தொடங்கியது, வாணி 20 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் திரையுலகிற்கு வந்திருக்க வேண்டும் என்று M S V கூறினார். அதன் பிறகு தென்மாநிலங்கள் அனைத்திலும் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். 10 ஆண்டுகள் மலையாளம் மற்றும் ஒரியா படங்களில் முன்னணி பாடகியாக இருந்தார்.

1975-ம் ஆண்டில், வாணி அபூர்வ ராகங்கள் திரைப்படத்தில் ஏழு ஸ்வரங்களுக்குள் மற்றும் கேள்வியின் நாயகனே ஆகிய இரண்டு பாடல்களுக்காக சிறந்த பெண் பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதை வென்றார். (இந்தத் திரைப்படம் ஷோலே வெளியான அதே நாளில் வெளியானாலும் பாக்ஸ் ஆபிஸில் வெற்றி பெற்றது; கமல்ஹாசன் மற்றும் ரஜினிகாந்த் இருவரும் இப்படத்தில் இணைந்து நடித்தது குறிப்பிடத்தக்கது) படத்தில் வாணியின் அற்புதமான குரல் சிறந்த இசையமைப்பாளர்களிடமிருந்து வாய்ப்புகளுக்கு வழிவகுத்தது. 1977-இல், “புவனா ஒரு கேள்வி குறி”யில் இளையராஜாவுக்காக முதன் முதலில் பாடினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அழகே உன்னை ஆராதிக்கிறேன் (1979) படத்திற்காக இளையராஜா இசையமைத்த நானே நானா யாரோ தானா என்ற பாடலுக்காக சிறந்த பெண் பின்னணி பாடகருக்கான மாநில அரசின் விருதைப் பெற்றார்.

1980-இல், சங்கராபரணம் (இயக்கம்: K விஸ்வநாத், இசை இயக்கம்: K V மகாதேவன்) என்ற தெலுங்குத் திரைப்படம் திரையுலகில் புயலைக் கிளப்பியது. கர்நாடக பாடகரின் கதையான இத்திரைப்படத்தில் கர்நாடக ராகங்களை அடிப் படையாகக் கொண்ட ஒரு டஜன் பாடல்களை S P பாலசுப்ரமணியம் மற்றும் வாணி ஜெய்ராம் சிறப்பாக பாடினர். பின்னர் தமிழ் மற்றும் மலையாளத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்ட இப்படம் 1952 பைஜு பாவ்ரா இந்தி படங்களில் ஏற்படுத்திய தாக்கத்தைப் போலவே தென்னிந்திய சினிமாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மானசா சஞ்சரரா ரே மற்றும் தொரகுனா ஆகிய பாடல்களுக்காக வாணி ஜெய்ராம் சிறந்த பெண் பாடகிக்கான இரண்டாவது தேசிய விருதைப் பெற்றார்.



*இசையமைப்பாளர் வசந்த் தேசாய் மற்றும் இயக்குனர் ஹ்ரிஷிகேஷ் முகர்ஜி ஆகியோருடன் வாணி ஜெய்ராம் Guddi-க்காக ஒலிப்பதிவு செய்கிறார்.*

முள்ளும் மலரும் (1978), ரோசாப்பூ ரவிக்கைக்காரி (1979), பாலைவன சோலை (1981), அன்புள்ள ரஜினிகாந்த் (1984), ஒரு கைதியின் டைரி (1985) மற்றும் புன்னகை மன்னன் (1986) போன்ற படங்களில் நூற்றுக்கணக்கான பிரபலமான பாடல்களை வாணி பாடியுள்ளார். அவர் மிகவும் பிஸியாக இருந்ததால், சில நேரங்களில் ஒரு நாளில் 20 பாடல்களை பதிவு செய்தார்! அதில் சில பெங்களூரிலும் பதிவு செய்தார்.

1991-ம் ஆண்டில், K V மகாதேவனின் இசையமைப்பில், K விஸ்வநாத் இயக்கிய ஸ்வாதி கிரணம் என்ற தெலுங்குத் திரைப்படத்தில் ஆனாதி நீயரா பாடலை பாடியதற்காக வாணி சிறந்த பின்னணிப் பாடகிக்கான மூன்றாவது தேசிய விருதை வென்றார்.

சமீபத்திய ஆண்டுகளில், பக்திப் பாடல்களின் ஆல்பங்கள் மற்றும் பொது கச்சேரிகளில் வாணி மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தார்.

### வாணியின் கேரள தொடர்பு

ஸ்வப்னம் படத்திற்காக சலீல் சௌத்ரியின் ரத்தினமான சௌராயுதத்தில் விதர்ன்னொரு என்ற பாடலுடன் 1973-ம் ஆண்டு அறிமுகமான பிறகு மலையாளத் திரைப்படங்களில் சுமார் 600 பாடல்களைப் பாடிய அவருடன் மலையாள இசை ரசிகர்கள் எப்போதும் வலுவான உணர்ச்சிபூர்வமான பிணைப்பைக் கொண்டுள்ளனர். அனைத்து முன்னணி இசை யமைப்பாளர்களுடனும் பணியாற்றி எண்ணற்ற சிறந்த மெல்லிசைகளை அவர் உருவாக்கினார்.

கர்நாடக இசைப் பாடகி நித்யஸ்ரீ மகாதேவன் கூறுகையில், “வாணி ஜெயராமின் குரல் எந்த சுருதியிலும் மயக்கும்” என்றார். 1973ல் வாணி பாடிய ஒரு பாடலை இப்போது 2023ல் அவர் பாடினால் ஸ்ருதி அப்படியே இருக்கும் என்று இசை விமர்ச



கர் சுரேந்திரன் மேனன் கூறினார். (என் உடலுக்கு வயதாகிவிட்டது, என் குரலுக்கு அல்ல, என்று வாணியே குறிப்பிட்டுள்ளார்.)

இசையமைப்பாளர் தேவா (தேவனேசன்) வாணி பல வகைகளில் சிரமமின்றி பாட முடியும் என்றார். SPBயைப் போலவே, அவர் ஒரு பாடலைப் பதிவு செய்ய 15 நிமிடங்களுக்குள் தயாராக இருப்பார், மேலும் ஒரு இசையமைப்பின் நுணுக்கங்களை மிக விரைவாக புரிந்துகொள்வார். பல மொழிகளில் பக்திப் பாடல் களைப் பாடிய ஒரே பாடகி வாணி என்று அபஸ்வரம் ராம்ஜி கூறினார்.

வாணி ஜெய்ராம் தனது பணிவுக்காக (அவர் தன்னை தானே விளம்பரப்படுத்தவே இல்லை) மற்றும் பாரம்பரிய வேர்களுக்காக அறியப்பட்டவர். இருப்பினும், இந்த போற்றத்தக்க குணங்கள் பாலிவுட்டில் நீடிப்பதற்கு ஏற்றதாக இல்லை.



ஹிந்தி இசையமைப்பாளர் ஜெய்தேவுடன், வாணி ஜெய்ராம்.

வாணியிடம் சில சமயங்களில் ''மங்கேஷ்கர் ஏகபோகம்'' அவரது பம்பாய் வாழ்க்கையை நிறுத்தியதா என்று கேட்கப் பட்டது. அவர் எப்போதுமே தான் லதாவின் மிகப்பெரிய ரசிகை என்றும், லதாவின் பாடல்களைக் கேட்டு வளர்ந்தவள் என்றும், கல்லூரி நாட்களில் தானே பலவற்றைப் பாடியிருக்கிறேன் என்றும் சிரித்துக் கொண்டே பதிலளிப்பார். இந்த உலகில் ஒரு லதா மங்கேஷ்கர் மட்டுமே இருக்க முடியும், என்று அவர் அன்புடன் கூறியுள்ளார்.

இசையமைப்பாளர் M S V வாணிக்கு எதையும் உடனடியாக உறிஞ்சிவிடும் பிளாட்டிங் பேப்பர் தொண்டை இருப்பதாக தன்னிடம் கூறியதாக நடிகர் Y G மகேந்திரா கூறுகிறார். வாணி பம்பாயில் தங்காமல் தமிழ்நாட்டிற்குத் திரும்பியது எங்கள் அதிர்ஷ்டம்.



லதா மங்கேஷ்கருடன்.

சரஸ்வதி தேவி திரும்பி வருவது போல் இருந்தது, தென்னிந்திய சினிமாவுக்கு ஒரு வரப்பிரசாதம். அவர் ஒருபோதும் விருதுகளைத் தேடவில்லை, அவை அவரைத் தேடி வந்தன. அவர் நகைச்சுவை உணர்வைக் கொண்டிருந்தார், என் எல்லா நகைச்சுவைகளையும் பார்த்து சிரித்தார். என்று மேலும் கூறினார்.

1975-ம் ஆண்டு பம்பாயில் லிப்ட் விபத்தில் வாணியின் குரு வசந்த் தேசாய் இறந்த போது வாணி மிகவும் வருத்த மடைந்ததை அவர் நினைவு கூர்ந்தார். ''யாரும் இப்படி சாகக்கூடாது'' என்று அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவரே தற்போது தன் வீட்டில் தவறி விழுந்து இறந்திருக்கிறார். ''அவர் இப்படி இறந்திருக்கக் கூடாது, இசை உலகிற்கு வழங்க அவரிடம் இன்னும் நிறைய இருக்கிறது,'' என்று அவர் மேலும் கூறினார்.

எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**2022–23 ஆண்டு நிதி சவால்**

நம் மாவட்டங்கள்/சங்கங்கள்/உறுப்பினர்கள் ஆண்டு நிதியில் அவர்களின் பங்களிப்பிற்கு சிறப்பு அங்கீகார வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இந்த ரோட்டரி வருடத்தில் முற்றிலும் புதிய வருடாந்திர நிதி சவாலை கொண்டு வந்ததற்காக மண்டலம் 4, 5, 6 மற்றும் 7ஐச் சேர்ந்த RRFCகளுக்கு நன்றி, இது உங்கள் ஆண்டிற்கான வருடாந்திர நிதி இலக்கை அடைய உதவுவது மட்டு மல்லாமல் தனிநபர் வழங்குதல் மற்றும் உங்கள் நன்கொடையாளர்களை அதிகரிக்க வாய்ப்பையும் வழங்குகிறது. மேலும் விவரங்களுக்கு:*http://www.highroadsolution.com/fileuploader2/files/2022–23 annualfundchallenge.pdf*

**குறிப்பு:** இந்த ஆண்டு APF சவாலுக்கு, ஜூலை 1, 2022 முதல் வருடாந்திர நிதிக்கு அளிக்கப்பட்ட அனைத்து பங்களிப்புகளும் பரிசீலிக்கப்படும்.

- நன்கொடையாளர்கள் தங்கள் *My Rotary* உள்நுழைவைப் பயன்படுத்தி நகல் ID உருவாகு வதைத் தவிர்க்கவும் மற்றும் தங்களின் உறுப்பினர் IDயின் கீழ் சரியான நேரத்தில் பங்களிப்புக் கிரெடிட்டைப் பெறவும்
- *My Rotary* உள்நுழைவு இல்லாத நிலையில், நன்கொடையாளர்கள் தங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் ஆன்லைனில் பங்களிப்பு செய்யலாம்.
- நிறுவனம்/குடும்ப அறக்கட்டளை கணக்கின் பங்களிப்புகளுக்கு RISAOக்கு காசோலை/வங்கி வரைவோலை அனுப்பலாம்.
- வருமான வரிச்சட்டத்தின் கீழ் 80G நன்மையைப் பெற, நாணயத்தை “இந்திய ரூபாய்” (INR) எனத் தேர்ந்தெடுக்கவும்
- தனிப்பட்ட பங்களிப்பைச் செய்யும்போது, ‘இந்த நன்கொடை எனது சங்கம் அல்லது அதன் உறுப்பினர் களிடமிருந்து (This donation is from my club or its members) என்ற விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடாது.
- ‘உறுப்பினர்களிடமிருந்து நன்கொடை’ (Donate from members’) என்ற விருப்பம் அனைத்து சங்கத் தலைவர் களுக்கும் உள்ளது. இருப்பினும் 80G ரசீது My Rotary உள்நுழைவு பயன்படுத்தப்பட்ட சங்கத் தலைவரின் பெயரில் மட்டுமே உருவாக்கப்படும்
- *My Rotary* உள்நுழைவு பயன்படுத்தப்பட்ட நபரின் பெயரில் மட்டுமே 80G ரசீதை உருவாக்க முடியும்.■




## STATEMENT ABOUT OWNERSHIP

Statement about ownership and other particulars about *Rotary News* (Tamil) to be published in the first issue of every year after the last day of February

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Chennai - 600 008 |
| 2. Periodicity of its publication | : | Monthly |
| 3. Printer's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. Publisher's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. Editor's Name | : | Rasheeda Bhagat |
| Nationality | : | Indian |
| Address | : | No. 25<br>Jayalakshmipuram<br>1st Street<br>Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : | Rotary News Trust<br>Dugar Towers,<br>3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008
1st March, 2023

sd/-
P T Prabhakar

# இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தி, தசைகளுக்கு வலுவேற்றும் உடற்பயிற்சிகள்

**பரத் - ஷலன் சவூர்**

நீரிழிவு நோயுள்ளவர்கள், டெக்ஸாஸில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் உடல்நலம் மற்றும் மனித செயல்திறனில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் மார்க் ஹாமில்டனை நிச்சயம் வாழ்த்துவார்கள். அவர் தசைகளுக்கு வலுவேற்றும் நம்மால் செய்யக்கூடிய எளிமையான உடற்பயிற்சிகளை கண்டறிந்துள்ளார்.

தரையில் கால்கள் பதியும்படி நாற்காலியில் உட்காருங்கள். பின்னர் குதிகால்களை உயர்த்துங்கள். ஆனால், பாதங்களின் முன்பகுதி தரையில் இருக்க வேண்டும். பின்னர் குதிகால்களை இறக்கிவிடுங்கள். இப்படி குதிகால்களை உயர்த்துவது இறக்குவது என 30 முறை செய்யுங்கள். அடுத்து வரும் வாரங்களில் இந்த எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளலாம். இப்படி நாள் முழுவதும் செய்யலாம்.

இது உங்கள் கணுக்காலுக்கு மேல் உள்ள தசைகளை செயல்பட வைக்கிறது. இதன் மூலம் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் மற்றும் கொழுப்பு களை எரிக்கிறது. விளைவு: உங்கள் கொழுப்பு கரைகிறது. இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைகிறது. சாப்பிட்ட உடன் நடக்க வேண்டும் என்ற பழங்கால பழக்கம் நினைவுக்கு வருகிறதா? அந்த நடைக்கு காரணம்: சாப்பிட்டவுடன் உங்களது இரத்தத்தில் சர்க்கரை அளவு உயருகிறது. கணையம் இன்சுலினை சுரக்கிறது. இந்த ஹார்மோன் கார்போஹைட்ரேடுகளிலிருந்து குளுக்கோஸை பிரித்தெடுத்து தசைக்குள் செல்ல உதவுகிறது. அங்கு அது எரிபொருளாகிறது. குளுக்கோஸ் தசைகளுக்குள் சென்றவுடன், அதன் அளவு இரத்தத்தில் சாதாரண நிலைக்கு குறைகிறது. இது இயற்கையான செயல்முறையாகும்.

குளுக்கோஸ் செயல்பாடு சுருக்கமாகச் சொன்னால், உடல் குளுக்கோஸை இவ்வாறு பயன்படுத்துகிறது: நேரடி எரிபொருளாக இது தசைகளின் இயக்கம் மற்றும் செயல்பாடுகளுக்கு உதவுகிறது. சில குளுக்கோஸ்கள் நமது கல்லீரலிலும், எலும்புத் தசைகளிலும் சேமிப்பதற்காக க்ளைகோஜனாக மாறுகிறது. சில கொழுப்பு அமிலங்களாக மாற்றப்பட்டு, நமது திசுக்களில் கொழுப்பாக சேமிக்கப்படுகிறது. இதுதான் உடலில் கொழுப்பு என அறியப்படுகிறது.

எனினும் உடல் இன்சுலின் சுரப்பை எதிர்க்கும்போது இந்த இயற்கையான செயல்முறைகள் சீர்குலைந்து தடம்புரளுகிறது. இது இரத்தத்தில் குளுக்கோஸை தங்கவிட்டு நீரிழிவு நோயின் முந்தைய நிலைக்கு கொண்டு செல்கிறது. இதை கட்டுப் படுத்தாமலோ அல்லது மாற்றியமைக்காமலோ விட்டு விட்டால் 2-வகை நீரிழிவு நோய்க்கு வழிவகுத்துவிடும். ஓராண்டுக்கு முன்பு நான் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையை எட்டியிருந்தபோது டாக்டர் என்னிடம் 5 கிலோ எடையை குறைக்க வலியுறுத்தினார். நான் பின்பற்றினேன். அது வேலை செய்தது. நாம் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளாவிட்டால் கொழுப்புச்சத்து அதிகமாகி உடல் குண்டாகி, இரத்த அழுத்தம் அதிகரித்து, இதயநோய் மற்றும் சிறுநீரக பிரச்னைக்கு வழிவகுக்கும்.

இந்த அதிகரிப்பைத் தடுக்கவே மருத்துவர் நம்மிடம் அளவாக சாப்பிட்டு, தினமும் நடை பயிற்சி மேற்கொள்ளச் சொல்கிறார். சாப்பிட்ட பிறகு நாம் 30 நிமிடங்கள் நடைபயிற்சி சென்றால் இரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும்.

### ஏன் நடக்க வேண்டும்?

நாம் நடக்கும்போது நமது கால் தசைகள் சுருங்கி இரத்த ஓட்டத்தை அழுத்துகிறது. வலுவான இரத்த ஓட்டம், இன்சுலின் உதவியுடன் குளுக்கோஸை தசைக்குள் தள்ளுகிறது. இருப்பினும் உடலில் கொழுப்பு அதிகமாக இருந்து இதை செய்யா விட்டால், தசைகளுக்கு குளுக்கோஸை கொண்டு



செல்ல அதிக இன்சுலின் தேவைப்படுகிறது. குளுக்கோஸ் ஏற்பிகள் அதிகம் வேலை செய்வதால் தசைகளின் உணர்திறன் குறைந்துபோகும். இன்சுலினை எதிர்க்கும் திறன் அதிகரிக்கும். தசைகளுக்கான கதவுகள் திறக்காவிட்டால் இன்சுலின் கதவை தட்டும். ஆனால், தசைகள் பிடிவாதமாக திறக்க மறுக்கும்.

தினமும் சாப்பிட்ட பிறகு 30 நிமிடங்கள் நடந்தால், உட்கார்ந்திருப்பதைவிட 50 மடங்குக்கு அதிகமாக இரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

**கால்களுக்கு வேலைகொடுங்கள்**

இருப்பினும், எல்லோரும் சாப்பிட்ட பிறகு விறுவிறுப்பான நடைபயிற்சி செல்ல விரும்புவதில்லை. இங்கு தான் பேராசிரியர் ஹாமில்டனின் தசைகளுக்கு வலுவேற்றுவது பயிற்சி மாற்றத்தை ஏற்படுத்த உதவுகிறது. நீங்கள் நாற்காலியில் உட்கார்ந்திருந்தால் எழுந்து நிற்க வேண்டிய அவசியமில்லை. சாப்பிட்ட பின் நாற்காலியில் உட்கார்ந்தபடியே குதிகால்களை ஏற்றி இறக்கி பயிற்சி செய்யலாம்.

**நடையா அல்லது உடற்பயிற்சியா?**

நடைபயிற்சிக்கும் தசைகள் வலுவேற்றும் பயிற்சிக்கும் என்ன ஒற்றுமை அல்லது வேற்றுமை என்பது தெரிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நான் புரிந்து கொண்டது என்னவெனில், தசைகளுக்கு வலுசேர்க்கும் பயிற்சியை நடைபயிற்சியுடன் ஒப்பிடும் போது உணவு சாப்பிடாத நேரத்திலும் வளர்சிதை மாற்றம் வழக்கமானதைவிட இரண்டு மடங்காகிறது. அப்படியானால், தசைகளுக்கு வலுசேர்க்கும் பயிற்சிகளால் கொழுப்பு விரைவில் கரையுமா என்று கேட்கலாம். இதில் இன்னும் சில ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் தேவைப் படுவதால் காத்திருந்து பார்க்க வேண்டும். நடை பயிற்சியுடன் தசைகளுக்கு வலுசேர்க்கும் இந்த உடற்பயிற்சியையும் செய்யலாம்.



**வாழ்க்கை மாற்றங்கள்**

உங்கள் எடையை அதிகரிக்கும் அல்லது இரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரிக்கும் பொருள்களை விட்டு விலகி கால்களின் சத்தத்தை கேட்க விரும்புங்கள். இதோ சில குறிப்புகள்:

அளவாக சாப்பிடுங்கள். உங்கள் சாப்பாட்டு தட்டை பின்வருமாறு மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். அரை தட்டு காய்கறிகள், கால் தட்டு கார்போஹைட்ரேட் (பழுப்பு அரிசி), கோதுமை அல்லது தானியங்கள், கால் தட்டு பன்னீர், பருப்பு, சோயா பால், ஒரு கிண்ணம் கொழுப்பு குறைவான தயிர் இவற்றை சாப்பிடலாம். கோதுமையை விட சிறுதானியங்கள் நல்லது. இவற்றில் நார்ச்சத்து அதிகம். இது இரத்த சர்க்கரையை மெதுவாக வெளிவிடும். அவை குடலில் ஏற்படும் வீக்கத்தையும் குறைக்கும். பழங்களை தனித் தனியாக சாப்பிடுங்கள். உணவுடன் சாப்பிட வேண்டாம். செர்ரி, ஆப்பிள், ஆரஞ்சு, பேரிக்காய், ஸ்ட்ராபெர்ரி, பிளம்ஸ் ஆகியவை நல்லது. உலர்ந்த பழங்களில் பாதாம், பேரிச்சை உகந்தது. ஆனால், எதையும் அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

வாழ்க்கையில் மன அழுத்தத்தை குறையுங்கள். ஒரு நாளில் உங்களுக்கு முடிந்த நேரத்தில் நீண்ட உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள். இரவு படுக்கும் நேரத்தில் கால் முதல் தலைவரை உள்ள பகுதியை தளர்த்தவும். பெரும்பாலான நேரங்களில் மௌனம் வெற்றி பெறும். தினமும் 5 நிமிடங்கள் எதைப் பற்றியும் சிந்திக்காமல் இருங்கள்.

புகைப்பிடிக்கும் பழக்கம் இருந்தால் கைவிடுங்கள். நீரிழிவு நோய், இதய நோய், கண் பார்வை மங்குதல், சிறுநீரக நோய், நரம்புகள் பாதிப்பு, கால்களில் பாதிப்பு போன்றவை ஏற்படும் அபாயங்களை அதிகரிக்கிறது.

குடிப்பழக்கம் இருந்தால் அதையும் விட்டு விடுங்கள் அல்லது குடிக்கும் அளவை குறைத்துக் கொள்ளுங்கள். வறுத்த கடலை சாப்பிடுங்கள். ஆல்கஹால் ஒரு கார்போஹைட்ரேட். அத்துடன் கார்போஹைட்ரேட் அதிகம் உள்ள உருளைக்கிழங்கு வறுவலை சாப்பிடுவது நல்லது அல்ல.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

# மாசு இல்லாத பயணம்

ப்ரீதி மேஹரா

*மாசு இல்லாத உலகத்தை நாம் விரும்பினால், நிலையான போக்குவரத்து நகர்ப்புற வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற வேண்டும்.*

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, இருபது 1, 2 மற்றும் 3 அடுக்கு நகரங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, நகர்ப்புற இந்தியாவில் ஒரு சராசரி குடிமகன் ஒரு மாதத்திற்கு சுமார் 1000 கிமீ அல்லது ஒரு நாளைக்கு சுமார் 35 கிமீ பயணம் செய்கிறான். இந்த மதிப்பீட்டிலிருந்து நீங்கள் விரிவுபடுத்தி, நம்மை போன்ற பெரிய மக்கள்தொகை பயணித்த தூரத்தைக் கணக்கிடும்போது, ஒவ்வொரு நாளும் நாம் மில்லியன் கணக்கான கிலோமீட்டர்கள் பயணித்திருப்போம். கணிசமான வழியில் வளிமண்டலம் மாசுபடுவதற்கு கூட்டாக நாம் பொறுப்பு என்பதை இது குறிக்கிறது. இந்தியாவில் வளிமண்டலத்தில் வெளியிடப்படும் மொத்த கிரீன்ஹவுஸ் வாயுக்களில் 8 சதவிகிதம் மற்றும் 20–30 சதவிகிதம் துகள்கள் (PM2.5) வாகன உமிழ்வுகளால் வெளியிடப்படுகிறது.

வாகன வெளியேற்றத்தால் ஏற்படும் மாசுபாட்டின் காரணமாக, மாசுவைக் குறைப்பதிலும்,



பெட்ரோல் மற்றும் டீசலில் இயங்கும் கார்கள் மற்றும் லாரிகளுக்குப் பதிலாக மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. புதைபடிவ எரிபொருள் இல்லாத உலகத்திற்கு மாறுவது ஒரே இரவில் நடக்காது என்பது உண்மைதான், ஆனால் பொறுப்புள்ள குடிமக்களாக நாம் ஒரு சில எளிய முயற்சிகள் மூலம் வளிமண்டலத்தில் உமிழ்வு சுமையை குறைக்க முடியும், அந்த சிறிய முயற்சிக்கு நம் பங்கு தேவைப்படுகிறது.

இது ஒரு பழைய விவாதமாக தோன்றினாலும், வாகனங்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான பரிந்துரையை நாம் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். பசுமை இயக்கத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்க விரும்பினால் பின்பற்ற வேண்டிய முக்கிய கொள்கைகளில் ஒன்று, முடிந்தவரை உங்கள் இலக்கை நோக்கி நடந்து செல்வது. அதைவிட கார்பன் நியூட்ரலாக எதுவும் இருக்க முடியாது. அடுத்த விருப்பம் சைக்கிள், இ-பைக் அல்லது இ-ஸ்கூட்டர். இவை உங்கள் கார்பன் தடத்தை குறைக்க உதவுகின்றன, எரிபொருள் செலவுகளை மிச்சப் படுத்துவதோடு, மாசுபாட்டை நீங்கள் சேர்க்கவில்லை என்ற திருப்தியையும் தருகிறது.

நடைபயிற்சி அல்லது சைக்கிள் ஓட்டுதல் என்பது கார் ஓட்டு வதற்கு மிகவும் ஆரோக்கியமான மாற்றாகும். பல ஐரோப்பிய நகரங்கள் மக்களை நடக்க அல்லது சைக்கிளில் வேலைக்குச் செல்ல ஊக்குவிக்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நம் நாட்டின் பெருநகரங்களின் சாலைகளில் பிரத்யேக சைக்கிள் ஓட்டுதல் தடங்கள் இல்லை. நடைபாதைகள் அடிக்கடி பராமரிக்கப்படாமல், குறுகலாக இருப்பதால், அருகில் உள்ள இடத்திற்கு நடந்து செல்வதைப் பற்றி இருமுறை யோசிக்க வேண்டியுள்ளது.

டெல்லி, மும்பை, சென்னை அல்லது பெங்களூரு சாலைகள் பெரும் சலசலப்பைக் கொண்டுள்ளது, வாகன ஓட்டுநர்களிடையே போதுமான ஒழுக்கம் இல்லாததால், சைக்கிள் ஓட்டுவது ஆபத்தானதாக உள்ளது.

இரு சக்கர வாகனங்கள் மற்றும் நடைப்பயிற்சியை ஊக்குவிக்கும் அதே வேளையில், பாதசாரிகள், இ-ஸ்கூட்டர்கள் மற்றும் சைக்கிள்கள் போன்ற பசுமையான பயண முறை களைப் பயன்படுத்துபவர்களை மதிக்கும் வகையில் சாலைகளில் போக்குவரத்து ஒழுக்கத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

பேருந்து அல்லது மெட்ரோ ரயில் போன்ற பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவது ஒரு நல்ல வழி. சாலைகளில் ஓடும் ஆயிரக்கணக்கான தனியார் ஆட்டோமொபைல்களில் இருந்து எழும் உமிழ்வைக் குறைக்கும் என்ற உண்மையைத் தவிர, இது மலிவானது, தூய்மையானது மற்றும் ஒரு சிறந்த சமன்படுத்தும் கருவி. உண்மையில், பொது போக்குவரத்து பல ஆண்டுகளாக வளர்ச்சி பெற்றுள்ளது. சில ஆண்டு களுக்கு முன்பு பெட்ரோல், டீசல் வாகனங்களில் இருந்து CNGக்கு மாறியுள்ளது. இது சிறிது உதவி செய்தாலும், தனியார் வாகனங்களின் எண்ணிக்கை காற்றை சுத்தம் செய்வதில் பெற்ற எந்த லாபத்தையும் விஞ்சுகிறது. இப்போது பொது போக்குவரத்தில் இ-வாகனங்களை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, ஆனால் இது இன்னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளது, ஏனெனில் மின்சார சார்ஜிங் நிலையங்கள் அல்லது பேட்டரி மாற்றும் நுட்பம் போன்ற போதுமான உள்கட்டமைப்பை உருவாக்க நீண்ட காலம் எடுக்கும். கூடுதலாக, இதனால் ஆகும் அதிக செலவுகள் குறுகிய காலத்திற்கு இதை ஒரு வரையறுக்கப்பட்ட விருப்பமாக உருவாக்கியுள்ளது .

அதிர்ஷ்டவசமாக, 2 மற்றும் 3 அடுக்கு நகரங்களில் இரு சக்கர வாகனங்களுக்கான சிறந்த உள்கட்டமைப்பு உள்ளது மற்றும் சிலவற்றில் அவை இளைஞர்களிடையே வழக்கமாகி விட்டன. எனவே, நிலையான போக்குவரத்துக்கு மேம்படுத்த தனிநபராக நீங்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள் ஒவ்வொரு நாளும் வேலைக்குச் செல்ல, பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த முடியாவிட்டால், ஒத்த எண்ணம் கொண்ட சக ஊழியர்களைக் கொண்ட கார்பூலை உருவாக்குவது சிறந்தது. ஒவ்வொருவரும் வெவ்வேறு நாட்களில் தங்கள் வாகனத்தை எடுத்து செல்லலாம். இந்த வழியில் நீங்கள் செலவுகளைப் பகிர்ந்து கொள்ளலாம், பார்க்கிங்கில் சேமிக்கலாம் மற்றும் நல்ல நண்பர்களையும் பெறலாம்.

நண்பர்கள் மற்றும் உங்கள் சுற்றுப்புறத்தின் மத்தியில் கார்பூலிங் கருத்தை ஊக்குவிக்க வேண்டும். நீங்கள் ஒரு காலனியில் வசிக்கும் அனைத்து குடியிருப்பாளர்களையும் ஒன்றிணைத்து, அவர்கள் ஒவ்வொரு வரும் வழக்கமாக வேலைக்குச் செல்லும் பாதையை வரைபடமாக் குவது நல்ல யோசனையாக இருக்கும். நீங்கள் வசதியாக நான்கு பயணிகளை ஒரு காரில் அமர்த்தி, சாலைகளில் நெரிசலை அதிகரிக்கும் மூன்று கூடுதல் கார்களைக் குறைக்கலாம்.

வாகன உமிழ்வைக் குறைப்பதை ஊக்குவிக்க சமூக உணர்வுள்ள நிறுவனங்கள் வெவ்வேறு சுற்றுப் புறங்களில் கார்பூல் சங்கங்களை உருவாக்கலாம். நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் மாதம் ஒருமுறை கார் இல்லாத நாளைக் கொண்டாடும்படி வற்புறுத்தலாம். அன்று ஊழியர்கள் இரு சக்கர வாகனத்தில் (முன்னுரிமை சைக்கிள் அல்லது இ-ஸ்கூட்டர்) வேலைக்கு வரலாம் அல்லது பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம்.

இது போன்ற முன்முயற்சிகள் பிரபலப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப் பட வேண்டும். மெட்ரோ நிலையங்கள் மற்றும் தொழில் துறை, வணிக வளாகங்களுக்கு இடையே உள்ள கடைசி மைல் இணைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும் அவசியம். இறுதியாக, பசுமையான பயணத்தை ஒரு பிரபலமான மற்றும் நேர்மறையான செயலாக மாற்ற வேண்டும். இது நமது சாலைகளின் நெரிசலைக் குறைப்பதில் பெரும் பங்களிக்கும் மற்றும் நாம் எளிதாக சுவாசிக்க உதவும்.

*எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.*

## RC பட்டுக்கோட்டை கிங்ஸ் — RID 2981



ராஜமாடம் கிராமத்தில் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமில் மருத்துவர்கள் கால்நடைகளுக்கு மருந்துகளைப் பரிந்துரைத்தார்கள்.

## RC குன்ட்லி — RID 3012

RC துவாரகா பதிவுத் தலைவர் M P கார்க் பங்கேற்ற குழந்தைகள் தின விழாவில் 42 மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.



## RC மதுரை பிரசிடென்சி — RID 3000



கைதிகள் படித்துப் பயன் பெறுவதற்காக மதுரை மையச் சிறை நூலகத்துக்குப் பல நூல்கள் கொடையளிக்கப்பட்டன.

## RC நாக்பூர் மெட்ரோ — RID 3030

கார்காவ்ன் கிராமத்தில் நடைபெற்ற கண், எலும்புப் பரிசோதனை முகாமில் 360 பேர் பலன் பெற்றார்கள். சுமார் 170 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.



## RC டெல்லி சவுத் — RID3011



Rtn ராஜீவ் பஜாஜ், அவருடைய துணைவர் சோனியா ஆதரவில் மருத்துவ உதவி வண்டி, பல்வாலில் உள்ள சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனைக்கு அளிக்கப்பட்டது.

## RC சூரத் ஈஸ்ட் — RID 3060

கரும்புத் தொழிலாளர்களைக் குளிரில் இருந்து பாதுகாக்கச் சுமார் 650 போர்வைகள் வழங்கப் பட்டன.



# செய்திகள்

## RC பக்வாரா மிட்-டவுன் — RID 3070



IPDG உபீந்தர் சிங் காய், சங்கத் தலைவர் ராஜ் குமார் ஹீர், உறுப்பினர்கள் முன்னிலையில் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் கொடையளிக்கப் பட்டன.

## RC கான்பூர் கிரீன் — RID3110

கான்பூர் MP சத்யதேவ் பசௌரி கோரிக்கைப்படி, நலிந்த பின்னணியைச் சேர்ந்த மாணவிகளின் பள்ளிக் கட்டணங்களை இந்தச் சங்கம் ஆதரிக்கிறது.



## RC பட்டியாலா கிரேட்டர் — RID 3090



PDG டாக்டர் ஹர்பன்ஸ் பதக், அவருடைய துணைவர் Rtn சுதா தங்கள் திருமண நாளை முன்னிட்டு, காது கேளாதோர், வாய் பேசாதோர் பள்ளியைச் சேர்ந்த 465 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கினார்கள்.

## RC குஷிநகர் — RID 3120

காசியா-வில் 179 ரிக்ஷா ஓட்டுவோர், மீன் வண்டி இழுப்போர், குப்பைப் பொறுக்கு வோருக்கு PM ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.2 லட்சம் காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.



## RC முஜாஃபர்நகர் விஷால் — RID 3100



SD இடைநிலைக் கல்லூரியில் நடை பெற்ற ஓவியப் போட்டியில் சுமார் 550 மாணவர்கள் பங்கேற்றார்கள்.

## RC டாலெகாவ்ன் டபாதெ — RID 3131

ஏரி ஒன்றை சீரமைக்க 5,000 உள்ளூர் மீன் வகைகள் அங்கு விடப் பட்டன. அடுத்த 18 மாதங்களில் 40,000 மீன் குஞ்சுகள் அங்கு விடப் படும் என்றார் சங்கத் தலைவர் அனீஷ் ஹோலெ.



## RC அம்பாஜொகாய் சிட்டி — RID 3132



ஞான்சாகர் கர்ணபதிர் வித்யாலயா காது கேளாதோர் பள்ளி மாணவர்களுக்கு உணவு மேசைகள் கொடையளிக்கப்பட்டன.

## RC ஹூப்ளி ஈஸ்ட் — RID 3170

பெங்கேரி கிராமத்தில் நடைபெற்ற எலும்பு அடர்த்திப் பரிசோதனை முகாமில் சுமார் 80 பேர் பலன் பெற்றார்கள்.



## RC மும்பை பர்லேஷ்வர் — RID 3141



மும்பை பெருநகர நகராட்சியின் கிழக்குப் பிரிவில் இருக்கும் 3 நல மையங்களில் 500 TB நோயாளிகளுக்குப் புரதத் துணைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## RC கோட்டா சிட்டி — RID 3182

மறைந்த Rtn பிரதீப் ஷெட்டி நினைவாக நடத்தப்பட்ட கண் பரிசோதனை, கண் புரை அறுவைச் சிகிச்சை முகாமில் சுமார் 140 பேர் பரிசோதிக்கப்பட்டார்கள்,



## RC டோம்பிவ்லி வெஸ்ட் — RID 3142



சங்கம் ரூ.4.2 லட்சம் தொகை குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளை நடத்துவதற்கு ஜூபிடர் லைஃப்லைன் மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டது.

## RC பெங்களூர் உத்யோக் — RID 3190

தேர்வு அச்சம், அழுத்தத்தை வெல்வதற்கு ரூட்ஸ் கல்வி அமைப்பு ஆதரவுடன் நடத்தப்பட்ட ஆளுமை மேம்பாட்டு நிகழ்ச்சியில் 5,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.



# செய்திகள்

## RC கோயம்பத்தூர் ஈஸ்ட் — RID 3201



கண் பார்வைக் குறைபாடு கொண்டோருக்கான தேசியக் கழகத்தில் 50 குடும்பங்களுக்கும், 150 மாற்றுத் திறனாளிகளுடைய குடும்பங்களுக்கும், பொங்கல் பரிசுகள் வழங்கப்பட்டன.

## RC சென்னை போர்ட் சிட்டி — RID 3232

ராதாத்ரி நேத்ராயலா ஆதரவுடன் நடத்தப்பட்ட இரண்டு கண் பரிசோதனை முகாம்களில் 100க்கும் மேற்பட்ட மக்கள் பரிசோதிக்கப் பட்டார்கள்.



## RC காரமடை — RID 3203



மேட்டுப்பாளையத்தின் அரசு மருத்துவமனையில் Rtn ஞானசேகரன் ஆதரவில் ரூ.5.2 லட்சம் செலவில் தார்ச் சாலைகள் அமைக்கப் பட்டன.

## RC ஜாம்ஷெட்பூர் மிட் டவுன் — RID 3250

பதிவுத் தலைவர் ராஜ் நாராயண் சிங் நினைவாகச் சிது கனு சிக்ஷா நிகேதனில் ஒரு நூலகம் அமைக்கப் பட்டது. அவருடைய மனைவி ஆஷா இந்த நூலகத்தைத் திறந்துவைத்தார்.



## RC ஆலப்பி ஈஸ்ட் — RID 3211



சமூகத்தின் நலிந்த மக்களுக்கு உதவும் முயற்சியாக, மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலியைச் சங்கத் தலைவர் கோபால் கிரீசன் கொடையளித்தார்.

## RC பேளூர் — RID 3291

KSB தொண்டு அறக்கட்டளை ஆதரவுடன், 12 மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற் காலிகள் கொடையளிக் கப்பட்டன.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# குளிர்காலம் குறைந்ததால் ஏற்படும் துயரங்கள்

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

1958-ஆம் ஆண்டு முதல் நான் வசித்துவரும் வட இந்தியாவில் குளிர்காலம் குறைந்து கொண்டே வருகிறது. 90 நாட்களாக இருந்த குளிர்காலம் இப்போது பாதியாக குறைந்து விட்டது. 90-களின் நடுப்பகுதி வரை குளிர்காலம் என்பது தீபாவளிக்குப் பிறகு அதாவது நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இருந்து மார்ச் மாதம் முதல்வாரம் வரை தொடரும். அப்போது குறைந்த பட்ச வெப்பநிலை 15 டிகிரி செல்சியஸாக இருக்கும். ஆனால், இப்போது நான் இந்த கட்டுரையை எழுதும் சமயத்தில் அதாவது பிப்ரவரி முதல்வாரத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை 12 டிகிரி என்ற அளவில் உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை என்பது 22 முதல் 24 டிகிரி வரை உள்ளது. டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்திலும் இதே வெப்பநிலைதான் இருந்தது. அதாவது குளிர்நிலை என்பது 45 நாட்கள்தான். அதாவது, அந்த சமயத்தில் வெப்பநிலை 3 முதல் 15 டிகிரி வரை இருக்கும். வயதானவர்களுக்கும், வீட்டில் மேற்கூரை இல்லாதவர்களுக்கும் இது நல்ல செய்திதான்.

வசதிபடைத்த இளைஞர்கள் எப்போது குளிர்காலம் வரும் என எதிர்நோக்கி இருப்பார்கள். ஏனெனில், குளிர்காலத்தில்தான் அவர்களால் கம்பளி ஆடைகள், பெண்கள் பர்காக்கள் மற்றும் வண்ண வண்ண காற்று தடுப்பான் ஆடைகள் மற்றும் மப்ளர்கள், காலுறைகளை அணிந்து செல்ல முடியும். அது மட்டுமல்ல, குளிர்காலத்தில் தினமும் குளிக்க வேண்டியதில்லை. கை, கால்களைக் கழுவிக்கொண்டால் போதுமானது. இன்னும் சொல்லப் போனால் தினமும் துவைக்கப்பட்ட நேர்த்தியான காலுறைகளை அணிய வேண்டியதில்லை. அழுக்கானவற்றையே மீண்டும் அணிந்தால் போதும். நீங்கள் சில சமயம் அழுக்கு படிந்த டாக்ஸி டிரைவரின் காரில் பயணம் செய்ய நேரிடும். கதவுகளின் ஜன்னல்களை மூடி, ஹீட்டரையும் போட்டு விட்டால் மிகவும் சிரமமாக இருக்கும். நல்லவேளை கடவுளுக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும். டாக்ஸி டிரைவர்கள் பழைய தடினமான போர்வைகளை பயன்படுத்துவதை விட்டு விட்டு சீன தயாரிப்பான நைலான் ஜாக்கெட்டுகளை அணியத் தொடங்கிவிட்டார்கள். அவை துர்நாற்றம் வீசுவதில்லை.

குறுகிய குளிர்காலம் இப்போது புகைமூட்டம் நிறைந்ததாகிவிட்டது. உண்மையிலேயே மோசமானது மட்டுமல்ல, நீங்கள் நன்றாக சுவாசிக்கவும் முடியாது. இந்த புகை மூட்டம் பெஷாவர், லாகூரிலிருந்து ஆக்ரா மற்றும் லக்னௌ வரை நீண்டு விட்டது. பூமியின் இந்தப் பகுதியில் கீழ்நோக்கியுள்ள இந்த வளைவு சாஸர் போல இருந்து கொண்டு மேலே உள்ள குளிர்காற்று கீழே இருக்கும் உஷ்ணக்காற்றை வெளியேற அனுமதிக்காது. இதன் விளைவு குளிர்நிலை குறைந்து, மாசுபடுதல் கூடுகிறது. இளைஞர்கள் ஆனாலும், வயதானவர்கள் ஆனாலும் கண் எரிச்சல் ஏற்படும். வெறுப்பாக உணர்வீர்கள். கார்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் நிலைமை இன்னும் மோசமாகும்.

குளிர்காலத்தில் மகிழ்ச்சி அளிப்பது ஆடைகள் மட்டும் அல்ல, சாலையோரக் கடைகளில் விற்கப்படும் பன்-ஆம்லெட், வேகவைக்கப்பட்ட முட்டை, ஆலு பராத்தா மற்றும் கேரட் அல்வா, பாசி பருப்பு அல்வா போன்ற உணவு வகைகளும் நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். கல்லூரி நாட்களிலும், பின்னர் திருமணம் செய்து கொள்ளாத நிலையிலும் இவைதான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரதான உணவாக இருக்கும். நாங்கள் மூன்று அல்லது நான்கு வேகவைக்கப்பட்ட முட்டைகளுடன் இரண்டு பிளேட் அல்வாவும் சாப்பிடுவோம். பின்னர் சூடான சுவையான தேநீர் குடிபோம். அவையெல்லாம் இப்போது இல்லாமல் போய்விட்டது.

குளிர்காலம் குறைந்துவிட்டது போல், மழையும் குறைந்துவிட்டது. டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் மழை பெய்ய ஆரம்பித்து ஜனவரி 26 வரை மழை நீடிக்கும். இப்போது அப்படியில்லை. அதனால் குளிர்காலத்தில் கனமாகவும், வெண்மையாகவும், தெளிவாகவும் இருக்கும் பனிமூட்டம், இப்போது மெல்லியதாகவும், பழுப்புநிறத்திலும், மாசுபடிந்த பனிமூட்டமாகவும் மாறிவிட்டது.

குளிர்காலத்தில் சிறுவர்கள், சிறுமிகள், ஆடவர்கள், பெண்கள் என பிரித்து அறிவது கடினமானது. ஏனெனில் அனைவரும் கனமான ஆடைகளை அணிந்திருப்பார்கள். இதனால் சில நன்மைகளும் இருந்தது. இதை நீங்கள் கற்பனை செய்தும் பார்க்கலாம். ஒருமுறை எனது நண்பரும், அவரது பெண் தோழியும் கட்டிப்பிடித்தபடி பூங்காவில் உள்ள பெஞ்சில் உட்கார்ந்திருந்தனர். அப்போது ஒரு போலீஸ்காரர் அதிக கடமை உணர்ச்சியால், அந்த பெண்ணை ஆண் என நினைத்து தலைமுடியை பிடித்து இழுத்தார். அப்போதெல்லாம் ஆண்கள் நீண்ட தலைமுடியுடன் இருப்பார்கள். அந்த பெண் சத்தமிட்டு அழ ஆரம்பித்த போது அவர் உண்மையிலேயே வருந்தினார். ஆனால், இப்போது மாசுபடுதல் அதிகரித்துவிட்ட நிலையில் எவரும் பூங்கா பெஞ்சுகளில் அமர்வதில்லை. காதலுக்கான சூழலும் இப்போது மாறிவிட்டது!.■

# செய்தித் துளிகள்

## இந்தியாவின் முதல் 3D அச்சிடப்பட்ட வீடு

சென்னையைச் சேர்ந்த TVASTA மானுபஃக்சரிங் சொலுஷன்ஸ், ஐஐடி-மெட்ராஸ் முன்னாள் மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் 3D-அச்சிடப்பட்ட வீட்டை உருவாக்கியுள்ளது. 600 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட ஒற்றை மாடி வீட்டில் ஒரு படுக்கையறை, ஹால் மற்றும் சமையலறை உள்ளது. ஹேபிடேட் ஃபார் ஹ்யூமனிட்டியின் டெர்வில்லிகர் சென்டர் ஃபார் இன்னோவேஷன் இன் ஷெல்டருடன் இணைந்து உருவாக்கப்பட்ட இது கான்கிரீட் 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளது.



## மிகப்பெரிய அணியக்கூடிய கேக் உடை



சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஒரு பேக்கர், நடாஷா கொலின் கிமா ஃபா லீ ஃபோகாஸ், மிகப்பெரிய அணியக்கூடிய கேக் ஆடைக்கான புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளார். அவர் சாதனைக்காக 131.5 கிலோ எடையுள்ள கேக்கினால் செய்யப் பட்ட ஆடையை சுட்டு அணிந்திருந்தார். ஆடையின் சுற்றளவு 4.15 மீ, உயரம் 1.57 மீ மற்றும் விட்டம் 1.319 மீ.

## இந்திய வரைபடத்தை வானத்தில் வரைந்த பைலட்

யூடியூபர், பைலட் மற்றும் உடற்பயிற்சி ஆர்வலரான கௌரவ் தனேஜா, குடியரசு தினத்தன்று குளோபல் பொசிஷனிங் சிஸ்டத்தை (ஜிபிஎஸ்) பயன்படுத்தி வானத்தில் இந்திய வரைபடத்தை உருவாக்கினார். ஆஸ்மான் மெய்ன் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக மூன்று மணி நேர விமானப் பயணம் மூலம் வானத்தில் இந்தியாவின் 350 கிமீ ஜிபிஎஸ் கலை வரை படம் உருவாக்கப் பட்டது.



## பிளாஸ்டிக் மாசுபாட்டை சுத்தம் செய்ய $25 மில்லியன்

ஜோ கேபியா, AirBnB மற்றும் சமாராவின் இணை நிறுவனர், டச் அறக்கட்டளையான “தி ஓசன் கிளீன்அப்’க்கு ஆதரவாக $25 மில்லியன் நன்கொடை அளித்துள்ளார். சிஸ்டம் 002 என பெயரிடப்பட்ட அறக்கட்டளையின் பைலட் அளவிலான கடல் சுத்திகரிப்பு அமைப்பு, 2021 முதல் கிரேட் பசிபிக் குப்பைத் பத்தியில் பயன்படுத்தப்பட்டு, இது வரை 200,000 கிலோ பிளாஸ்டிக்கை அகற்றியுள்ளது.





## முதல் கறுப்பின பெண் விமானியை கௌரவித்த பார்பி

1920ஆம் ஆண்டு அமெரிக்காவில் கறுப்பினப் பெண்களுக்கான பைலட் பயிற்சி வாய்ப்புகள் இல்லாததால், பிரான்சுக்குப் பறந்து சர்வதேச விமானி உரிமத்தைப் பெற்ற முதல் கறுப்பினத்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் பெஸ்ஸி கோல்மன். அவர் பார்பி டால் தொடரான ‘இன்ஸ்பைரிங் வுமன்’னில் இடம்பெற்ற புதிய ஹீரோ ஆனார். ‘பிரேவ் பெஸ்ஸி’ பொம்மைக்கு பாரம்பரிய ஆலிவ்-கிரீன் ஏவியேட்டர் உடை அணிவிக்கப்பட்டுள்ளது, அதில் அவரது முதலெழுத்துகளான BC கொண்ட தொப்பியும் அடங்கும்.

*ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT

